# தேர்ந்த கட்டுரைகள்




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

★ ★ ★ வெளியீடு — 15 ★ ★ ★

ழ விடுதலைப் புலிகள்

வெளியீட்டு வாரியம்,

தமிழீழம்.

01-12-1992

2568
90473
JPL
C2568

# தேர்ந்த கட்டுரைகள்

மாநகர நூலகம் 24-12-1992 90475 யாழ்ப்பாணம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

KOHA JPL

25688CC

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

★ ★ ★ வெளியீடு — 15 ★ ★ ★

தமிழீழ விடுதலைப் புலிகளின்
வெளியீட்டு வாரியம்,
தமிழீழம்,

01 - 12 - 92

90479 C.C

320 512/2

KOHA JPL

# உள்ளே...


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. சர்தேச பாண்டேயால் எழுதப்பட்ட யாழ்ப்பாணத்தில் இடப்பட்ட பணி (Assignment - Jaffna) என்ற நூலில் இருந்து சில பகுதிகள் | 01 — 14 |
| 2. காலியில் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் ஆயுதக்கொள்வனவு விவகாரத்தில் உள்ள இரகசியம் | 15 — 19 |
| 3. ஈழம் ஒரு பகற்கனவு | 20 — 34 |
| 4. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெறும் தீங்குவிளைவிக்கும் கெடுபிடி யுத்தம் | 35 — 38 |
| 5. 21 குண்டுகள் தீர்த்து வழங்கப்பட்ட அந்த மரியாதை வரவேற்பு | 39 — 42 |
| 6. அதிசிறந்த ஒரு இலங்கையரைப் பாராட்டுவோம் | 43 — 49 |
| 7. புதிய உலக ஒழுங்கும் முஸ்லிம் உலகமும் | 50 — 62 |
| 8. கால்டுவெல் மேற்றிராணியாரும் திராவிடத் தமிழர்களும் | 63 — 69 |
| 9. மதிப்பு வாய்ந்த மூத்த சகோதரரின் பிரவேசம் | 70 — 73 |
| 10. நாம் அவரைப் பிடித்து விட்டோம் | 74 — 80 |
| 11. அரசியலில் புத்தகுருமார் வகிக்கும் பங்கு | 81 — 83 |
| 12. தளபதிகளுக்கிடையேயுள்ள உட்பூசல்கள் | 84 — 91 |
| 13. அண்டவெளியிலுள்ள உளவுப் புகைப்படக் கருவிகள் மூலம் பெறப்பட்ட படங்களை ருசியா விற்பனை செய்து வருகின்றது | 92 — 95 |
| 14. கடலில் கந்துலவின் இறுதிக் கட்டம் | 96—104 |

# நேயர்களுக்கு...

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 15வது வெளியீடாகும்.

இக்கட்டுரைகள் வாயிலாக அறியப்படும் பல்வேறுபட்ட எண்ணங்களை சரியாக ஆய்வு செய்து உண்மைகளை கண்டறிய வேண்டியது வாசிப்பவர்களின் கடமையாகும். இக்கட்டுரைகளில் வரும் தகவல்கள் சரியானவை அல்ல.

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும் பேணுவதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் ஊக்குவிக்கும்.

KOHA
JPL
90473

# சர்தேசு பாண்டேயால் எழுதப்பட்ட யாழ்ப்பாணத்தில் இடப்பட்ட பணி (Assignment - Jaffna) என்ற நூலில் இருந்து சில பகுதிகள்

**பக்கம் IX**

புலிகளுடைய ஒழுங்குக் கட்டுப்பாடு, தற்கொடை உணர்வு, உறுதிப்பாடு, சிந்தனைத்திறன், அறிவாற்றல் என்பன வற்றுக்காக அவர்களை நான் பெரிதும் மதிக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் போராட்டத்தைத் தொடர்வதன் மூலமே இலங்கையில் தமிழருக்குள்ள சிக்கலுக்கு தீர்வுகாண முடியும் என்ற அவர்களுடைய போக்கில் சிறிதளவு நியாயமே இருப்பதாக நான் நினைக்கிறேன். அவர்களுடைய இந்தப்பிடிவாதப் போக்கு அறிவில்லாததும், அழிவுமார்க்கத்திற்கு இட்டுச்செல்லக் கூடியதுமாகும். யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடமுள்ள மன வலிமை, சகிப்புத்தன்மை, எதையும் தாங்கும் இதயம், தொலை நோக்கு, தமது இலட்சியத்தின் மேல் அவர்களுக்குள்ள நம்பிக்கையும் பற்றுக்கோடும் என்மதிப்பீட்டில் அவர்களை சிறிது



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

அதிகமாகவே உயர்த்திவைத்திருக்கிறது அதேவேளை தமது இலட்சியத்தை நிறைவேற்ற அவர்கள் புலிகளை விடாப்பிடியாக தெரிந்து எடுப்பதற்காக நான் கவலைப்படுகிறேன்.

பக்கம் X

என்னை ஒரு நல்ல போர்வீரனாகவும் சிறந்த மனிதப் பிறவியாகவும் உருவாக்கிய, இளம் மேலாளர், எம்முடைய படைய வீரர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள் என்போருக்கு இந்த என் சொந்த மதிப்பீட்டைக் காணிக்கையாக்குகின்றேன்.

பக்கம் 1

இலங்கைத் தமிழரில் அரைப்பங்கினர் யாழ்குடாநாட்டி லேயே வாழ்கின்றனர். இவர்களுடைய உணவுத்தேவைக்கு கடலை அடுத்துள்ள நிலப்பகுதியான வன்னி - கிளிநொச்சி - முல் லைத்தீவுப் பிரதேசத்தையும், இலங்கையின் இறக்குமதிகளையும், தமக்கு வளமும் வருவாயும் அளிக்கும் இறால் விற்பனைக்கும், எரிபொருள், சீனி, தேங்காய் முதலியவற்றிற்கும் கொழும்பை யுமே நம்பி வாழவேண்டியுள்ளது. இவை தவிர்ந்த அவர்களு டைய ஒரே ''கைத்தொழில்'' அல்லது பணம் சம்பாதிக்கும் தொழில் கள்ளக்கடத்தல் ஒன்றுதான். வருவாய் மிகவும் அதிக மாக உள்ள பொருளாதார நடவடிக்கையான கள்ளக்கடத்தல் தலைமுறை தலைமுறையாக நடந்துவரும் தொழிலாகும்.

பக்கம் 2

பருத்தித்துறையைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் எவரை யும் கவரும் தன்மை கொண்டவர். எதைப்பற்றியுமே அதிகம் அலட்டிக்கொள்ளாதவர். எதனோடும் தன்னை அதிகம் சம்பந் தப்படுத்திக்கொள்ளாதவர். எதற்காகவும் தனது கொள்கையை விட்டுக்கொடுக்காதவர். மலையே வரினும் தலை சரியாத வர். இந்த முதியவர் மூற்று முழுதாக தமிழீழவிடுதலைப் புலி களின் ஆதரவாளர். புலிகள் விரும்புவது போல விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்ய முடியாவிட்டால் தலையீடு ஏதும் இல்லாமல் இந்தியா வெளியேறிவிடவேண்டும் என்று இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்சித்திடம் அவர் தெரிவித்திருந்தார்.

ஈரோஸ் தலைவர் பாலகுமார் எல்லாருள்ளும் தகுதி மிக்கவர்; மெதுவாகப் பேசும் சுபாவம் கொண்டவர். சரியான வலுவுள்ள, உறுதிமிக்க, அமைதிப் போக்குடைய புத்திக்கூர்மை

யுள்ளவர். அடுத்தவரை அளக்கும் திறன் பெற்றிருந்ததோடு யாருக்கும் பிடிகொடாமல் பழகும் இயல்பினர். எதற்குமே இணங்காமல் பேரம்பேசி ஒன்றையுமே விட்டுக்கொடுக்காமல் சிறந்ததைப் பெற்றுக்கொள்ளும் வல்லுனர்.

பக்கம் 11

கீழ்க்காண்பவற்றையே மக்கள் விரும்புகிறார்கள் என்பதை 1988 யூலையில் மிகத்தெளிவாக, நிரூபிக்கக்கூடிய விதத்தில் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

★ இந்தியா தமிழீழ விடுதலைப்புலிகளை வெளியே கொண்டு வருவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தமிழர் சிக்கலுக்கான எந்தத்தீர்விலும் அமைதிப்படை பங்கு கொள்ள வேண்டும். அதற்காய் போர் நிறுத்தம் ஏற்படவேண்டும்.

★ தீர்வு எதுவாயினும் அதிலே விடுதலைப்புலிகள் பங்கு கொண்டிருக்க வேண்டும். அதற்காய் மேலும் பேச்சுவார்த்தைகள் அவசியம்.

★ தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளுகின்ற தீர்வை மட்டுமே தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்வார்கள். வேறு வழிகள், முடிவுகள் யாவும் இரண்டாம் பட்சமானவை மட்டுமல்ல, அவசியமற்றவையும் கூட. ஆகவே விடுதலைப்புலிகளின் நிபந்தனைகள் எதுவாயினும் இந்தியா அவற்றை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

பக்கம் 12

1987 டிசம்பர் தொடக்கம் 1988 மார்ச் - ஏப்ரல் வரையும் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள், வெடிமருந்துகள் பற்றிய தகவல்கள் எமக்குக் கிடைத்துக் கொண்டேயிருந்தன. அவை படிப்படியாகக் குறைந்து யூலைத்திங்களுடன் தகவல் எதுவும் கிடைக்காமல் போய்விட்டன. இரண்டாவது மட்டத்தலைவர்களைப் பற்றிய புலனாய்வுத் தகவல்கள் கூட எமக்குக் கிடைப்பது மிக அரிதாகிவிட்டது. எம்மைச் சூழவுள்ள பகுதியில் ஒரு முக்கிய தலைவர் இருந்தார் என்பது பொதுவாகத் தெரிந்த விடயமாகும். முக்கியமான மக்கள் நடுவே இருந்த

எமது நண்பர்களும், நம்பிக்கைக்குரியவர்களும் புன்னகையோடு எம்மைச் சந்திப்பார்கள். ஆனால் தமது 'பையன்களை' ஒரு போதும் காட்டிக்கொடுக்க முன் வரமாட்டார்கள்.

பக்கம் 13

இலங்கையில் மக்களை பண ஆசை, மது ஆசை, பெண்ணாசை என்பனவற்றைக்காட்டியோ அல்லது வேறு வழிகளிலோ வாங்கிவிட முடியாது. கல்வி, தூண்டுதல், நம்பிக்கை அரசியற் தெளிவு என்பன உயர்ந்தளவில் அவர்களிடம் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

பக்கம் 18

தமிழர் தமது எண்ணத்தில் மிகவும் தெளிவாக இருந்தார்கள். அவசியமானால் ஒரு கட்சிச் சனநாயகத்தையும், தேர்தலையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார்கள். இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்கு இருந்தே ஆகவேண்டும் என்பதே கட்டாயமாகும். சனநாயகப்பாங்கில் விடுதலைப்புலிகளின் சர்வாதிகாரத்தைக் கூட வெளிப்படையாகவே அவர்கள் விரும்பினார்கள். ஈழத்தின் குழப்ப நிலையில் சனநாயகம் ஒரு பொய்த்தோற்றமாகவே இருந்தது. நெஞ்சுரத்தை வெளிக்காட்டும் அறிவொளி வீசுகின்ற பழங்கதைகள் எல்லாம் தேர்தலிலும் சனநாயக வழிமுறைகளிலும் தமிழருக்குரிய பற்றையும் நம்பிக்கையையும் விளக்க எடுத்துக்காட்டப்பட்டிருப்பினும் மேலே சொன்ன பொய்த் தோற்றமே மெய்ப்பாடாக இருந்தது. இதுதான் யாழ்ப்பாணம் பற்றிய உண்மை நிலையாகும்.

பக்கம் 21- 22

**(மக்களுடன் நடக்கும் முடிவிலாப் பேச்சுவார்த்தை)**

அவர்களும் ஒரு மனித அமைப்பாக மாறி தமிழீழ விடுதலைப்புலிகளை வழிக்குக் கொண்டுவரவேண்டும் என்று உணரச்செய்வதென்பது வளைவுகளும்-சுழிவுகளும் கொண்ட வேதனை தரும் செயலாக இருந்தது. "ஜெனரல், நீங்கள் சொல்வதைக் கேட்காத விடுதலைப்புலிகள், உங்கள் அரசைக்கூட மதிக்காத அவர்கள் நாம் சொல்வதை மட்டும் எப்படிக் கேட்பார்கள்?" என்று மக்கள் வினா எழுப்புவார்கள். "அவர்கள் உங்கள் 'பையன்களாக' இருந்தால் உங்கள் நலன்களிலே அவர்களுக்கு

அக்கறையிருந்தால் நீங்கள் சொல்வதை அவர்கள் கேட்கவேண்டும். ஏனென்றால் மக்களாகிய நீங்களே இந்தச்சிக்கலின் மையப் பொருளாவீர்கள். அதனால் இந்த விடயத்தில் முக்கியமானவர்களாகவும் உள்ளீர்கள். எங்களுடன் சண்டையிடும் அவர்கள் நாங்கள் சொல்வதை எப்படிக்கேட்பார்கள்?'' என்று நாங்கள் எதிர்க்கேள்வி கேட்போம். இதற்கான அவர்களுடைய பதில் வித்தியாசமானவையாக இருக்கும். ''அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்றும் எமக்குத் தெரியாது. அவர்களுடன் எவ்வாறு தொடர்புகொள்வது என்றும் புரியவில்லை. ஜெனரல் அவர்களே எம்மை நம்புங்கள். எங்களில் பலர் அவர்களின் தலைவர்களைக் கண்டதுகூடக் கிடையாது. பிரபாகரனைக் கூட நாங்கள் பார்த்ததில்லை'' என்று பதில் சொல்லுவார்கள்.

நாங்கள் கோபிப்போம்; பின்னர் அவர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்குவோம். ''நீங்கள் சொல்வது சரியல்ல. இவ்வளவு சாதுரியம் அற்றவர்களா நீங்கள்? பிரபாகரன் எங்கு இருக்கின்றார் என்றோ, எப்படி இருப்பாரென்றோ உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியதில்லை. உங்களுடைய' பையன்கள்' பலர் எம்மோடு சண்டை போடுகிறார்கள். உங்களிடம் வரி வசூலிக்கின்றார்கள். உங்கள் இளைஞர்களை தம்மோடு சேர்த்துக் கொள்கின்றார்கள். உங்கள் எல்லோர் மீதும் கண்வைத்திருக்கின்றார்கள். உங்கள் செய்திகளை அவர்களுக்கூடாக அனுப்பலாமே'' என்று நாங்கள் கூறுவோம்.

அவர்கள் தமது அடுத்த தடையை எழுப்புவார்கள். ''ஜெனரல், எமது செய்திகள் சரியான இடத்தைச் சென்றடையுமா என்பது எமக்குத் தெரியாது. இந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் பையன்கள் உணர்ச்சிவசப்படும் அவசரபுத்திக்காரர்கள்; பட்டறிவற்றவர்கள் அவர்களுக்கு இவை புரியாது'' ''அவர்களே பொறுப்பாளர்கள்'' என்று நாங்கள் சொல்லுவோம். ''அப்படியானால் நீங்கள் எல்லோரும் சேர்ந்தோ அல்லது ஒரு சிலரோ வன்முறைகளுக்கு எதிராக உண்ணாவிரதமோ அல்லது பொது ஆர்ப்பாட்டமோ ஏன் செய்யக்கூடாது? விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டும் இப்படிச்செய்யுங்கள் என்று நாங்கள் கூறவில்லை. பொதுவாக சகல வன்முறைகளுக்கும் எதிராக இப்படி நீங்கள் செய்யலாமே! சென்ற ஆண்டு செப்டெம்பர், ஒக்டோபர் திங்களில் அமைதிப்படைக்கு எதிராக அப்படிச் செய்தீர்கள் அல்லவா? கொழும்பிலுள்ள சிறைக்கைதிகளுக்காக அன்னையர் முன்னணி அவ்வாறு செய்ததே! மீன் பிடிப்பதற்கு

எதிரான தடைகளை அகற்ற வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்யும் நீங்கள் வன்முறைகளுக்கு எதிராக ஏன் அப்படிச் செய்யக் கூடாது?''

இதற்கு அவர்களுடைய மறுமொழி கீழ்க்காணும் விதத்தில் இருக்கும்.

''இவற்றைச் செய்து என்ன பயன் ஏற்படப் போகிறது? நீங்கள் இப்போது எங்களுடன் பேசுகின்றீர்கள். முதன் முதலில் எம்மோடு பேசுகின்றவர்கள் நீங்கள் தான் - மக்களைப்பற்றி, அவர்களுடைய பலத்தைப்பற்றி, செயலுரிமைமுதன்மை பற்றி, உறுதிபற்றி, இன்னும்பலவிடயங்கள் பற்றிப் பேசுகின்றீர்கள்.முன்னரேஎம்முடன்ஏன் பேசாமல் விட்டீர்கள்? இந்திய-இலங்கையரசுகளும் விடுதலைப்புலிகளும் பேசித்தானே ஒப்பந்தம் செய்தீர்கள்! எங்கள் தலைவிதியை தீர்மானிக்க முடிவும் எடுத்தீர்கள். 1987ம்- ஆண்டு மையப்பகுதியில் நீங்கள் இங்கு வந்தபோது விடுதலைப்புலிகளுடன் பேசினீர்கள். சென்னையில் கிட்டுவோடு பேசினீர்கள். ஆனால் இத்தனை ஆண்டுகளாக மக்களாகிய எங்களைப்பற்றி யாருமே அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. நீங்கள் எல்லோருமே தோல்விகாணும் போதுதான் எங்களைக் கேட்கிறீர்கள். இப்போது இவ்வாறு செய்வதால் என்ன பயன்?''

கணிசமான அளவு தர்க்க ரீதியான, விவாதம் இது. இதற்குப் பதில் சொல்வது கடினமாகும்.

''மக்களாகிய நீங்கள் தலைமை தாங்காமல் உங்கள் தலைமைப் பொறுப்பை விடுதலைப் புலிகளிடம் விட்டு விட்டு இருந்தால் அதற்கு யார் என்ன செய்ய முடியும். ஒருவர்உண்மையில் நூற்றுக்கணக்கான தனிநபர்களுடன் பேசமுடியுமா? மக்கள் பிரதிநிதிகளுடன், அவர்களுடைய தலைவர்களுடன் தான் பேச வேண்டும் '' என்று நாங்கள் ஒரு பாணத்தை திருப்பிச் செலுத்துவோம்.

அவர்களுடைய எதிர்வாதம் ஆற்றல் வாய்ந்ததாக இருக்கும்.

''ஜெனரல், அதைத்தான் நீங்கள் செய்யவேண்டும் என நாம் விரும்புகின்றோம். விடுதலைப்புலிகளோடு பேசுங்கள். இவர்கள் வெளியே வருவதற்கான சூழ்நிலையை உருவாக்குங்கள்.

புலிகள் பொறுமை இழந்துள்ளார்கள்; மனக்கிளர்ச்சியோடு இருக்கின்றார்கள்; அதேவேளை இந்தியா தமக்கு உதவவேண்டும் என்றும் விரும்புகிறார்கள். போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துங்கள்; புலிகள் வெளியே வருவார்கள்.''

பேச்சுத்தொடங்கிய இடத்திற்கே மீண்டும் வந்து நிற்கும்.

பக்கம் 27 *(1)*

*(1)* சிங்களவருக்கும், தமிழருக்குமிடையே ஏற்பட்டுள்ள பூசலுக்கான உட்காரணங்களை எம்மால் சரிவர புரிந்து கொள்ள முடியவில்லை. அதேவேளை இனங்களுக்கிடையிலான சிக்கல்கள் பற்றி எமக்குத் தெரிந்த அளவிற்கு தமிழ் மக்கள் தெரிந்து வைக்கவில்லை. தமிழர் அல்லாத மேலாளர்களிடமும் அப்படியான வீரர்களிமுடம் இந்திய படையத்திலுள்ள தமிழ் பேசும் வீரர்கள் நடந்துகொள்ளும் மென்மையான முறை சிங்களவரை ஆச்சரியப்பட வைக்கும். தமிழ் வீரர்களைப்பற்றி அவர்கள் எம்மை எச்சரித்தும் உள்ளார்கள். எமது படையணியிலே உள்ள தமிழ் வீரர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடும் சண்டையில் ஈடுபடும்போது சிங்கள மேலாளர்களுக்கு அது மிக ஆச்சரியமாக இருக்கும். விடுதலைப் புலிகளோடு எங்கள் தமிழ் போர் வீரன் எந்த இரக்கமும் இல்லாமல் சண்டைஇடுவது கண்டு யாழ்ப்பர்ணத் தமிழர் மனத்துயரும் அச்சமும் கொள்வார்கள்.

பக்கம் 27 *(2)*

*(2)* போராளிகள் தனியே துப்பாக்கி மட்டும் ஏந்துகின்ற திடகாத்திரமுள்ளவர்கள் என்று எண்ணக் கூடாது. தமது செயற்பாடுகளில் எல்லாம் போதியளவு புத்திக்கூர்மையை உபயோகிப்பவர்கள். அறிவுபூர்வமான முழுமைக்குள்ளே வேறுபாடுகள்மலிந்த செயல்களை ஒன்றிணைப்பதற்கு வேண்டிய குறிப்பிடத்தக்க தகுதிகளை உடையவர்கள். எதையும் எதிர்பார்த்திருத்தல், சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தல், குறிப்பாக உளவியல் ரீதியான அம்சங்களை ஒன்றுபடுத்தி மிக உயர்ந்த விதத்தில், ஒழுங்கமைக்கும் திறமையுடையவர்கள். பொதுமக்கள் தொடர்பு, முழுமையான நோக்கத்தை அடையவேண்டும் என்ற இலட்சியம், தன்னம்பிக்கை என்பன அவர்களுடைய முக்கியமான சிறப்பம்சங்களாகும்.

பக்கம் 28

சங்கேத மொழிகள், இரகசிய வார்த்தைகள் (Codes-and Ciphers) என்பன உட்பட தேவையான விதத்தில் மாற்றி விடக்கூடிய, வழமைக்குப் புறம்பான நம்பகமும் ஆற்றலும் வாய்ந்த தொடர்பு முறைகளில் மற்றையோர் பொறாமைப் படும் அளவுக்கு விடுதலைப்புலிகளிடம் நிபுணத்துவ ஆற்றல் உண்டு. உலகிலே எந்தவொரு கிளர்ச்சிக்குழுவிடமும் இதற்கு ஈடான தொடர்புமுறைகள் இருக்கமுடியாது.

பக்கம் 29

மிக உயர்வான நடத்தையே விடுதலைப்புலிகளின் குணாதிசயமாகும். சயனைட்டை எந்த நேரத்திலும் பயன்படுத்தும் துணிவுபடைத்தவர்கள் என்பதால்சாவைக்கண்டு அவர்கள் அஞ்சுவதில்லை. எதிர்ப்புணர்வு, தீர்க்க முடிவு, ஒப்பில்லாத அளவு உயர்வான நோக்கப்பற்றுதல் என்பன மூலம் அவர்களது குணாதிசயங்களை கணித்துக்கொள்ள முடியும். இரும்பு போன்ற ஒழுக்கம், முறைப்படுத்தப்பட்ட எண்ணப்பாடு என்பன கட்டி எழுப்பப்பட்டு நன்கு பராமரிக்கப்படுவதோடு ஒழுக்க விதிகளுக்குள் உட்படுத்தப்படுகின்றன. யாழ்ப்பாணத்தின் மீதான பிடியை கைநழுவவிடாமல் இருப்பதற்காக எவ்வளவு தற்கொடையையும் செய்யத்தயாராக இருந்த விடுதலைப்புலிகளின் வீண்பிடிவாதம் இவற்றுக்கோர் உதாரணமாகும். யாழ்ப்பாணத்தில் தான் விடுதலைப்புலிகள் இயக்கம் தனது பலபகுதித் தலைவர்களையும் பிரதேசப் பொறுப்பாளர்களையும் இழந்தது. யாழ்ப்பாண நகரத்திலோ அல்லது வடமராட்சியிலோ இருந்த எந்தப்பகுதித் தலைவரும் ஒரு திங்களுக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியவில்லை. (இலங்கையின் ஏனைய தமிழ்ப்பகுதிகளுக்கு யாழ்ப்பாணம் எப்படியோ, யாழ்ப்பாணத்திற்கு வடமராட்சி அப்படி) அப்படியிருந்தும் துணிச்சலான முயற்சிகளை அவர்கள் கைவிடவில்லை.

பக்கம் 32

விடுதலைப்புலிப் போராளிகளை தேனீக்கள் என்றால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அவர்களுடைய கூடு என்று வர்ணிக்கலாம். பெரியளவிலான பரிசோதனைகள் வழமைக்குப் புறம்பான ஆயுத உபயோகங்கள், ஆயுதத்தயாரிப்புக்கள் திட்ட உற்பத்திகள் என்பன அங்கே இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

அறிவியல் ஆய்வு கூடங்கள் போலியான அடிக்கூரைகள், சுவர்ச் சட்டங்கள், கழிவுத் தொட்டிகள், மாணவர் விடுதிகள் அனைத்தும் உயிர்கொல்லி ஆயுதங்களின் சேமிப்புக் கிடங்குகளாகி இருந்தன.

பக்கம் 34

தனித்து விடப்பட்ட, இறந்த அல்லது காயமடைந்த, இந்திய அமைதிப்படை வீரர்களின் ஆயுதங்களை கவர்ந்து செல்லும் புலிப்படையினர் தமது அணியிலிருந்து இறப்போரையும், காயப்படுவோரையும் தம்முடன் கொண்டு செல்ல எல்லாவித மான முயற்சிகளையும் மேற்கொள்வார்கள். இது அவர்களுடைய கௌரவக் கோட்பாடாகும்.

பக்கம் 40

இந்திய அமைதிப்படையுடன் போர் செய்வதற்கு விடுதலைப்புலிகள் தீர்மானித்த போது அதனால் ஏற்பட்ட நிகழ்வுகளின் திருப்பம் மக்களை வெளிப்படையாகவே கவலைக்குள்ளாக்கியது. விடுதலைப்புலிகளின் இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு பற்றி மக்கள் வினா எழுப்பத் தொடங்கினர். அதே வேளை ஆரம்ப சண்டையில் புலிகளால் அமைதிப்படைக்கு ஏற்பட்ட இழப்புகள், அவர்கள் மேல் மக்கள் வைத்திருந்த மதிப்பை பெருமளவில் உயரச்செய்திருந்தது.

பக்கம் 71

இந்திய அமைதிப்படையின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அதிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்வதற்காக விடுதலைப்புலிகள் வன்னிக்காடுகளுக்குள் புகுந்தனர். மிகவும் குறைந்த அளவிலான அடிப்படை உபகரணங்களை மட்டுமே குடாநாட்டில் அவர்கள் விட்டுச் சென்றனர். ஒரு புறம் கரந்தடி நடவடிக்கைகளில் எம்மைச் சிக்கவைத்துவிட்டு மறுபுறம் மக்கள் மீது தங்கள் பிடிப்பை தளரவிடாமல் வைத்துக்கொள்வதற்காக எண்ணிக்கையில் மிகச்சிறிய தொகையினரை மக்களின் கண்களில் படக்கூடியதாக இங்கே விட்டுச்சென்றிருந்தனர். குடாநாட்டு மக்கள் தேவை ஏற்படும்போது எப்படியும் உதவியே தீருவார்கள் என்பதும், ஆபத்தின் போது கைகொடுப்பார்கள்

என்பதும், விடுதலைப்புலிகளுக்குத் தெரியும். யாழ்ப்பாண மக்கள் புலிவீரர்களை தம் அரவணைப்பிற்குள் மறைத்து வைப்பார்கள் என்ற அவர்களின் நம்பிக்கை பிந்திய நடவடிக்கைகளின் போது குறிப்பிடத்தக்க அளவு சரியாகவே இருந்தது.

பக்கம் 72, 73

(இந்தியப்படையினருக்கும் மக்களுக்கும் இடையே நடக்கும் முடிவிலாப் பேச்சுவார்த்தை.)

**மக்கள்**:- நீங்கள் ஏன் ஒரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி புலிகளுடன் பேசக் கூடாது? அவர்கள் இந்திய எதிர்ப்பாளர்கள் அல்ல. நீங்கள் போர் நிறுத்தத்தை அறிவித்தால் அவர்கள் வெளியே வருவார்கள்.

**நாங்கள்**:- யார் சுடுகிறார்கள்? புலிகள்தான் அதைச் செய்கிறார்கள். அவர்கள் சுடுவதை நிறுத்தி வன்முறையை முடிவுக்குக் கொண்டுவரட்டும். நாங்களும் சுடுவதை நிறுத்திக்கொள்கிறோம்.

**மக்கள்**:-வெளியே வருவதற்கு அவர்கள் அஞ்சுகிறார்கள்.

**நாங்கள்**:- புலிகள் போர் நிறுத்தமொன்றை அறிவிப்பார்களானால் நாங்கள் அவர்களது காப்புக்கு உத்தரவாதம் அளிப்போம். இது ஒரு கௌரவமான வாக்குறுதியாகும். ஆனால் அதற்கான உத்தரவாதங்களை நாங்கள் பெறவேண்டும். இதற்கான சைகைகள் எமக்குத் தெளிவாக தெரிந்தாகவேண்டும். முதல் முயற்சியாக விடுதலைப்புலிகளின் படைய நடவடிக்கைகள் குறைக்கப்படவேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாகும்.

**மக்கள்**:- உங்களால் மட்டுமல்ல ஏனைய குழுக்களாலும் விடுதலைப் புலிகளுக்கு எவ்வித தீங்கும் விளையமாட்டாது என்று நீங்கள் ஒரு உத்தரவாதம் அளிக்க வேண்டும். விடுதலைப்புலிகள் தம்மைக் காத்துக்கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும்.

**நாங்கள்**:- அவர்கள் வந்து மக்களைச் சந்திப்பதற்கு காப்பான வழிகளைச் செய்துகொடுப்போம். ஆனால் அது ஓர் ஆயுதம் இல்லாத சந்திப்பாகவே இருக்கவேண்டும். தங்களு

டைய காப்புப்பற்றி அக்கறையுடன் கூடிய அவ்வளவு அச்சம் அவர்களுக்கு இருக்குமாயின் அவர்களில் யார் எத்தனை காவலருடன், எவ்வளவு ஆயுதங்களுடன், எங்கிருந்து, எங்கே வருகிறார்கள் என்பதைச் சொல்லட்டும். தேவையான அளவிற்கு நாங்கள் ஒப்புதல் தருவோம்.

**மக்கள்:** - பேச்சுவார்த்தைக்கு முன்னரே விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்று நீங்கள் ஏன் கேட்கின்றீர்கள்?

**நாங்கள் :** - ஆயுதம் ஏந்தும் ஒருவன் சமாதானம், பேச்சுவார்த்தை என்றும் ஏனையவை பற்றிப்பேசும் போதும் யார் அவனை நம்பமுடியும். அது எவ்வாறாயினும் இந்திய—இலங்கை உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளபடி அவர்களுடைய கோரிக்கைகள், சிக்கல்கள் என்பனவற்றைக் கௌரவமாக தீர்த்துவைக்கவும் அவர்களது காப்பிற்கு உத்தரவாதம் அளிப்பதற்காகவுமே இந்தியப்படைகள் இங்கு வந்திருக்கின்றன. இந்த நிலையில் விடுதலைப்புலிகள் எதற்காக ஆயுதம் வைத்திருக்க வேண்டும் என்கிறார்கள்,

**மக்கள் :** - இந்திய அமைதிப்படை எம்நடுவில் நிரந்தரமாக இருந்துவிடப் போவதில்லை. சில காலங்களின் பின்னர் நீங்கள் போய்விடுவீர்கள். அப்போது எங்கள் நிலை என்னவாகும் சிங்களவரிடமிருந்து எங்களைக் காப்பாற்றுவது யார்?

**நாங்கள் :** - மக்களாகிய நீங்கள், திருப்தியுடனும், மன நிறைவுடனும் வாழத்தொடங்கும் போது தான் இந்திய அரசு அமைதிப்படையைத் திரும்பப்பெறும் என்பதே எங்களுடைய நம்பிக்கையாகும். நிரந்தரமான வன்முறைச்சூழலுக்கு வெளியே உங்களுடைய காப்பிற்கும் நலன்களுக்கும் உறுதியளிப்பதற்கு மேலும் எத்தனையோ வழிகள் இருக்கின்றனவே!

**மக்கள் :** -அதைத்தான் பேசித்தீர்க்க வேண்டும் என்று சொல்லுகிறோம். நீங்கள் ஏன் அதைச் செய்யக்கூடாது?

**நாங்கள் :** -- வன்முறையைக் கைவிடுவது என்று நம்பிக்கை தரக்கூடிய விதத்தில் விடுதலைப்புலிகள் அறிவிப்பதைத் தவிர வேறு எதைப்பற்றிப் பேசவேண்டும். வழிமுறைகள், திருப்பிக்கையளிக்கப்படும் ஆயுதங்களின் எண்ணிக்கை போன்ற பல விடயங்கள் தொடர்பாக இணக்கம் காண்பதற்கு முன்வராமல்

அல்லது முன்வர விரும்பாமல் கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக உங்கள் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்திவருகிறார்களே! அவர்களுக்கும் உங்களுக்கும் உதவுவதற்காகவே வந்த இந்திய அமைதிப்படையினரான எங்களுக்கு எதிராகவே பேச்சுவார்த்தை என்ற போர்வையில் புலிகள்தான் மறக்க முடியாத அளவுக்கு ஆயுத வன்முறையைத் தொடர்கிறார்கள். உணவுப்பொருட்கள், உதவிகள், வைத்திய சிகிச்சைகள் அரசியல் அனுதாபம் என்பவற்றையெல்லாம் எங்கள் நாட்டில் பெற்று யாழ்ப்பாணம் திரும்பியதும் எமது வீரர்களைக் கொல்லவும், தகர்க்கவும், குறிவைத்துத் தாக்கவும் முயலும் புலிகள் இந்தியாவிற்கு நன்றி கெட்டவராக இருக்கும் போது எவ்வளவு காலத்திற்கென்று பேச்சுவார்த்தை நடத்துவது? நம்பிக்கை வைக்க முடியாத, தன்நலமுள்ள, நன்றிமறக்கும் பேர்வழிகளோடு எப்படிப் பேசுவது? இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளும் மக்களாகிய நீங்களே எங்களிடம் இருந்து இரக்கத்தை எதிர்பார்க்கிறீர்கள். தமிழ்நாட்டிலுள்ள எமது சமூகத்தையும் அரசியல் நிலையையும் நஞ்சூட்டிக்கெடுக்கவும் அங்கே உள்ள எமது மேலாளர்களதும், வீரர்களினதும் குடும்பங்களை அச்சமூட்டவும் செய்யும் உங்கள் புலிகளுடன் நாங்கள் பேச்சுவார்த்தை மேற்கொள்வது எப்படி.

இதை அவர்களால் தாங்க முடியாது. படித்தவர்கள், மதவாதிகள், முக்கிய மக்கள் பிரதிநிதிகள் எல்லோரும் நாம் பேசியது போல திருப்பி எம்மையும், எம்மால் செய்யப்பட்ட கொடுமைகளையும், அழிவுகளையும் சுட்டிக்காட்டி திருப்பிப் பேசுவார்கள்.

ஒன்று மட்டும் விளங்கியது. மக்கள் விடுதலைப் புலிகள் அதிக அளவில் நெருக்கடிக்குள்ளாவதை விரும்பவில்லை. அதனால் போர்நிறுத்தத்தை கொண்டுவர விரும்பினார்கள் என்பதே அதுவாகும்.

பக்கம் 77

படையக்கண்ணோட்டத்தில் நாங்கள் தொடர்ந்தும் படைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கவேண்டும் என்பதுதான் பரவலான கருத்தாகும். நாம் எந்த முடிவை நோக்கிப் போகிறோம்? எந்தவிதமான சூழ்நிலை இதனால் ஏற்படப் போகிறது? யாருடைய திருப்திக்காக இதைச் செய்கின்றோம்? விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தை அழித்து

25682 c



விடுவதற்காகவா அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளையே அழித்துவிடுவதற்காகவா? முந்தையதாயின் படைய வழியை விட்டு அதற்கு வேறுவழிகளும் உண்டு. இதற்கு திட்டமிட்ட கொலை முயற்சியை கையாளலாம். இதைச் செய்யப் பல வழிகள் இருந்தும் அவற்றுள் எதையுமே முயற்சித்துப்பார்க்கவில்லை. பின்னதாயின் சாதாரண பொது மக்களில் பெரும் பகுதியினரை கொன்றொழிக்க வேண்டும். ஏனென்றால் பொது மக்கள் ஒவ்வொருவரும் புலிகளுக்கு சார்பானவர்களாகவே உள்ளனர். புலிகளுக்கு உதவ அவர்கள் எந்த நேரமும் தயாராக இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆபத்து ஏற்படும் வேளைகளில் உதவும் விருப்பம் உடையவராகவும் அவர்களுடன் இரகசியமாகச் சேர்ந்து பணிசெய்ய சித்தமுடையவராகவும் இருக்கின்றார்கள். ஜெனரல் கல்கத் கூறியது போல ஒரு விடுதலைப்புலி வீரனோ அல்லது புலிகள் இயக்கத் தளபதிகளோ சாகும்போது தமிழீழம் என்ற கருத்து மக்களின் மனதில் இருக்கும் வரை சாவுகளால் விளையும் இடைவெளிகள் உடனடியாகவே நிரப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

**பக்கம் 160, 161**

சர்தேசு பாண்டே யு என் ஐ (UNI) க்கு கொடுத்த நேர்காணலில் இருந்து சில குறிப்புக்கள்.

யாழ்ப்பாணக் குடாநாடு விடுதலைப்புலிகளின் அரணாகும். 90வீதம் மக்கள் "விடுதலைப்புலிகளின் சார்பானவர்களாக" இருப்பதால் இந்த நிலை தொடர்ந்து இருந்துவரும் என்றார்.

**சமூக உருவமைப்பு** : "மக்கள் புலிகளின் ஆதரவாளர்கள் அல்லாமல் இருப்பார்களேயானால் அவர்களுக்கு ஏதாவது கோளாறு இருந்தே ஆகவேண்டும். ஏனென்றால் இலங்கைத்தீவிலே வாழுகின்ற தமிழ் மக்களுக்கு கடந்த 40 ஆண்டுகளாக ஏற்பட்டுவரும் துன்பியல்புகளின் திரட்சியால் ஆக்கப்பட்ட "சமூக உருவமைப்புத்தான்" விடுதலைப்புலிகள் இயக்கமாகும். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் கௌரவத்திற்காகவும், காப்புக்காகவுமே போராடி வருகின்றது. இன்று அது தமிழினத்தின் பிரிக்க முடியாத ஒரு உறுப்பாகி விட்டது"

## முழுமையான நம்பிக்கையின்மை

எல்லாவிடயங்களிலும் மக்களுக்குள்ள ''முழுமையான நம்பிக்கையின்மையே'' இன்று யாழ்குடாநாட்டில் சமாதானம் ஏற்படுவதற்குள்ள தடைக்கல்லாகும். மக்கள் எல்லோரிடமும் சகல நம்பிக்கைகளையும் இழந்துவிட்டார்கள். மற்றவர்கள் தங்கள் மீது சவாரி செய்யவே விரும்புவதாக அவர்கள் கருதுகிறர்கள். இலங்கை அரசு விரும்பிய வண்ணமே இந்திய அரசு செயல்படுவதாகநம்பினார்கள்.எம்மால் அதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை என எண்ணினரார்கள்.

யாழ்குடாநாட்டு மக்களின் ஆதரவில் முழுமையாக இருந்த நம்பிக்கை காரணமாக யாழ் குடாநாட்டினுள் தம் நேரத்தை பெருமளவில் செலவிடாமல் பெரும்பாலான போராளிகள் குடாநாட்டை விட்டு வெளியேறிவிட்டார்கள்.

★ ★ ★

---

*சாதனை புரிந்த மனிதர்கள் எல்லாரும் யாரிடம் இருந்து உதவியைப் பெற்று முன்னேறினார்கள்? அவர்கள் சந்தித்த தடைகள், தாம் பிடிவாதமாக வெற்றிபெற வேண்டும் என்ற கடின உறுதியைத் தந்து அவர்களை முன்னேற்றின.*

**— மத்தியூஸ்**

---

## காலியில் புதைக்கப்பட்ட ஆயுதங்கள்

# ஆயுதக் கொள்வனவு விவகாரத்தில் உள்ள இரகசியம்

- றோகன் குணசேகரா
(ஐலண்ட் 11-10-1992)

*மேற்குலக நாடுகளால் இலங்கைக்கு எதிராக விதிக்கப்பட்ட ஆயுத ஏற்றுமதித் தடையை ஏமாற்றி மீறும் வகையிலும், காப்புப் படையினருக்கான ஆயுத தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், பலநாடுகளில் ஆயுதவிற்பனையில் ஈடுபட்டுள்ள ஒருவருடன் அரசாங்கம் செய்து கொண்ட இரகசிய உடன்படிக்கைக்கு அமைய இலங்கைக்கு வந்து சேர்ந்த பெருந்தொகையான வெடிமருந்துகளையும், ஆயுதத் தளபாடங்களையும், காலிக்கு அப்பாலுள்ள கடலில் புதைக்கும் வேலையை படையினர் சென்ற திங்கள் ஆரம்பித்தனர்.*

*எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் காலி ஆயுதக்களஞ்சியத்தில் மர்மமாக வைக்கப்பட்டிருந்த இந்த ஆயுதங்களைப்பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னர் கேள்விகள் எழுப்*

பியது மீண்டும் நினைவுக்கு வருகின்றது. ஆயினும் இந்த விடயம்பற்றி தொடர்ந்து நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

வெளிநாட்டு முகவருடனான உடன்படிக்கை செல்லுபடியற்றதாகிவிட்டதாகவும், அதன் காரணமாக பெருந்தொகையான படைத் தளபாடங்களும், வெடிமருந்துகளும், கடலுக்குள் புதைக்கப்படுவதாகவும் காப்பு அமைச்சு அறிவித்ததைத் தொடர்ந்து இந்த விவகாரம் மீண்டும் சென்ற திங்கள் தலைதூக்கியது.

பூசல் நிலவும் நாடுகளுக்கு ஆயுத ஏற்றுமதி செய்வதற்குப் பல மேற்குலக நாடுகள் விதித்த தடை காரணமாகவும், வெளிநாடுகளிலுள்ள ஈழத்துக்கான ஆதரவாளர்களின் கோட்பரப்புகை ஏற்படுத்திய தாக்கங்கள் காரணமாகவும் காப்புப்படையினருக்கு ஆயுதப்பற்றாக்குறை ஏற்பட்டபோது தமிழ்ப் பிரிவினைவாதக் குழுக்களின் அதிகரித்த வன்முறைகளை எதிர்கொள்ள அவற்றைக் கொள்வனவு செய்ய முயன்ற 1980ம் ஆண்டு நடுப்பகுதியிலேயே இந்த விடயம் ஆரம்பித்தது.

தனியாருடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் தங்களுக்கு ஆயுத வழங்கலை செய்யக்கூடியவர்களைத்தேடும் முயற்சியில் படையினர் ஈடுபட்டிருந்தனர். இப்படி இவர்கள் தொடர்பு ஏற்படுத்தியவர்களுள் இசுபெயின் நாட்டிலுள்ள ஆயுத நிறுவனங்கள் மூலம் ஆயுத விற்பனையில் ஈடுபட்டுள்ள ஒருவரும் அடங்குவார்.

படையினருக்கு அப்பொழுது முதன்மை கவசவாகனமாக விளங்கிய ''சலாடின்'' கவசவாகனத்தில் பொருத்தப்பட்ட பீரங்கிக்குத் தேவையான 76 மி.மீ. குண்டுகள் அதிக எண்ணிக்கையில் இந்த இசுபெயின் நாட்டு ஆயுத விற்பனையாளரிடமிருந்தது.

சலாடின் கவச வாகனம் தற்பொழுது பயன்பாட்டிலில்லாததாலும், இதன் பீரங்கிக்குத் தேவையான 76 மி.மீ. குண்டுகள் ஒழுங்காக உற்பத்திசெய்யப்படாததாலும், இவைகளைப் பெறுவது கடினமென்பது மாத்திரமின்றி தற்பொழுது பாவனையிலிருக்கும் இதேபோன்ற மற்றக்குண்டுகளை விட இவற்றின் விலையும் கூடுதலாகவுள்ளது.

இந்த 76 மி.மீ. குண்டுகளைப் பரிசீலிக்கச் சென்ற படையமேலாளர் ஒருவர் இவை தங்கள் தேவையை முழுமை செய்யக்கூடிய நிலையில் இருந்ததைக் கண்டார். பெல்ஜியத்திலும்,

யோர்தானிலும் பெரிய படைக்கல களஞ்சியங்களை இதே நிறு வனம் வைத்திருப்பதை படைய மேலாளர் அறிந்து கொண்டார்.

ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் பெறுவதிலுள்ள சிக்கலி லிருந்து விடுபடுவதற்கு மற்றைய நாடுகளிலுள்ளது போல் இலங் கையிலும் ஒரு படைக்கலக் களஞ்சியத்தை உருவாக்குமாறு இந்த இசுபானிய நிறுவனத்தை படையினர் கோரவேண்டுமென இக் குண்டுகளைப் பார்வையிடச் சென்ற படைய மேலாளர் ஆலோ சனை கூறினார்.

இலங்கைக் காப்புப் படையினர் உபயோகிக்கக்கூடிய படை யத் தளபாடங்கள் மாத்திரமே இங்கு களஞ்சியப்படுத்தப்பட வேண் டுமென்ற இலங்கை அரசாங்கத்தின் நிபந்தனையை இந்த இசு பானிய நிறுவனம் ஏற்றுக்கொண்டது. குறைந்த வாடகைக்கு அவர்கள் இத்தளபாடங்களை இங்கு களஞ்சியப்படுத்தலாம் என்றும் பின் அவற்றை மற்ற நாடுகளுக்கு விற்பனை செய்யலாம் என் றும் கூறப்பட்டது.

கப்பலில் அனுப்பப்பட்ட முதலாவது தொகுதி ஆயுதங்கள் காலித்துறைமுகக் களஞ்சியத்திற்கு வந்தடைந்ததும் படையினர் அதற்குக் காப்பு வழங்கினர். அதன் பின்னரே சிக்கல்கள் எழ ஆரம்பித்தன.

இந்தத் தளபாடங்கள் பழையனவாகவும், அவற்றில் சில இரண்டாம் உலகப் போரின்போது உபயோகிக்கப்பட்டவையாக வும், பாவனைக்கு உதவாதவையாகவுமிருந்தன. இவற்றைக் களஞ் சியப்படுத்துவதற்கான வாடகைச் சிக்கல்களுடன் உள்ளூர் முக வர்களுக்கும் இந்த இசுபானிய நிறுவனத்துக்கிடையிலும் வேறு கருத்துமுரண்பாடுகளும் நிலவி வந்தன.

இதேவேளை, இந்த நிறுவனம் குறிப்பிட்ட சில தளபாடங் களையும், பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசின் அனுமதியைப் பெற்றுக் கொண்டபோதிலும், இவற்றில் சில இங்கு கொண்டுவரப்படவில்லை. இவை எங்கு போய்ச் சேர்ந்திருக்குமென்பது யாருக்கும் தெரியாது.

இதே காலப்பகுதியில் திரும்பவும் எழுச்சிபெற பெரிதும் முயன்று கொண்டிருந்த ஜே.வி.பி. போன்றவர்களுடைய கைக் குள் காலியில் களஞ்சியப்படுத்தப்பட்ட ஆயுதங்கள் சென்றடை

யக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்தமையால் அரசாங்கம் பெரிதும் கவலையுற்றது.

சுமார் 50,000 தாங்கி எதிர்ப்புக்குண்டுகளும், 50,000க்கு மேற்பட்ட சுரிகுழல் துப்பாக்கிக்குண்டுகளை வெடிக்கவைக்கும் எரியூட்டிகளும், சுமார் 4,000 81 மி.மீ. மோட்டார் குண்டுகளும், 50,000 தாங்கி எதிர்ப்புக் கண்ணிகள் மற்றும் எரியூட்டிகளும், சுமார் 88,000 25 இறாத்தல் குண்டுகள் செலுத்திகளும் அவற்றின் எரியூட்டிகளும், பயிற்சிக்குத் தேவையான பல தளபாடங்களும் கவச வாகனங்களைத் துளைக்கும் குண்டுகளும், எரியூட்டிக்குண்டுகளும், சிறிலங்காப்படையினரின் பாவனையிலில்லாத கலிபர்களைக் கொண்ட றேசர் வெடி மருந்துகளும் இங்கு களஞ்சியப்படுத்திவைக்கப்பட்டிருந்தன.

இலங்கைக் காப்புப் படையினரின் தேவையை முழுமை செய்ததன் பின்னரே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் காலியில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

காப்பு அமைச்சின் அங்கீகாரத்துடனே இலங்கையிலிருந்து எல்லாப் பொருட்களும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சில வெடிக்கவைக்கும் சாதனங்கள் பாகிஸ்தானுக்கும், 25 இறாத்தல் நிறையான எறிகணைகள் சிங்கப்பூருக்கும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் விற்கப்பட்டன.

இந்தப் பிராந்தியத்திலுள்ள அர்சாங்க சார்பற்ற குழுக்களுக்கும் சில பொருட்கள் சென்றடைந்ததாக செய்திகள் தெரிவித்தன. இப்படி நடக்கக்கூடிய சாத்தியக்கூறுகளையிட்டு பலமுள்ள அயல்நாடு ஒன்று கவலையடைந்ததாகச் சொல்லப்படுகின்றது.

இசுபானிய நிறுவனத்துக்கும் உள்ளூர் முகவருக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் நிறுத்தப்பட்டது.

இதேவேளை வெளிநாட்டு முகவர்பற்றியும் அவருடைய நடவடிக்கைகள் பற்றியும் கூடாத தகவல்கள் கிடைத்துவந்தன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள மேலாளர்களுடன் அவருக்கிருந்த சிக்கல்கள் காரணமாக அவர் தனது நடவடிக்கைகளை நாட்டுக்கு நாடு இடம் மாற்றிவந்தார்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான அப்ப வோல்ரா (Upper Volta) மற்றும் மொறிரேனியா (Mauritania), ஆகியவற்றுடன் 1970 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நடைபெற்ற இரண்டு ஆயுத விற்பனையில் தரகுப்பணம் தருமாறு கோரி வேறு ஒரு ஆயுத விற்பனையாளர் இந்த இசுபானிய நிறுவனத்தின் மூன்று கிளைகள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஆப்கானிஸ்தானிய முஜாகிதீன்களுடன் தொடர்புகளை வைத்திருந்தவரென்றும், பதவியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட நிகரகுவா நாட்டின் சர்வாதிகாரியான சொமோசாவுக்கு அமெரிக்கப் புலனாய்வுத்துறையினரான சி.ஐ.ஏ.யினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆயுத வழங்கல் சம்பந்தப்பட்டவரென்று சந்தேகிக்கப்பட்டவரும், லெபனான் நாட்டுத் தீவிரவாதிகளுடன் தொடர்புள்ளவரான வேறு ஒரு ஆயுத விற்பனையாளருடன் இவர் தொடர்புகளை வைத்திருந்தார் எனக் கருதப்பட்டது.

தென்கிழக்கு ஆசிய நாடொன்றிற்காக வலிமை பொருந்திய தென்னாசிய நாடொன்றிலிருந்து போபர்ஸ் பீரங்கிக்குத் தேவையான பெருந்தொகையான குண்டுகளைக் கொள்வனவு செய்ய 1970ம் ஆண்டு பிற்பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இவர் உடந்தையாகவிருந்தார் எனவும் கருதப்பட்டது.

இரண்டு ஆண்டுகளின் பின் கொள்வனவு செய்யப்பட்ட அளவினைக் கொண்டே, போபர்சு பீரங்கி குண்டுகள் நிகரக்குவா சர்வாதிகாரி சோமோசாவுக்கு செல்லும் வழியில் போர்த்துக்கல் வந்தடைந்தது.

★ ★ ★

குழந்தைகளுக்கு கவலையே இல்லை என்கிறார்கள். அவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? குழந்தைகள் பெரியவர்கள் போல நிமிடத்திற்கு நிமிடம் தவறு செய்கிறார்களா கவலைப்படுவதற்கு?

— ஜோர்ஜ் எலியட்

# ஈழம் ஒரு பகற்கனவு

ஐலண்ட் 6-9-1992

போராட்டத்தால் சீர்குலைந்துள்ள இலங்கையின் வடபகுதியில் படையம் மேற்கொள்ளவிருக்கும் பெரிய இராணுவ நடவடிக்கை காரணமாக மிகமோசமான சூழ்நிலை உருவாகுமாயின் இன்றைய நிலையில் தமிழ்நாட்டு மக்கள் தமிழீழ மக்களுக்காக குரல் எழுப்பாது வாழாதிருப்பார்களென்று 'புரண்ட்லைன்' ஆசிரியரான நரசிம்மரார்ம் கூறியுள்ளார்.

இன்று தமிழ்நாட்டு மக்களின் எண்ணப்போக்கில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளே முட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள் என்றே தமிழ்நாட்டு மக்கள் எண்ணுகிறார்கள் என்றும், இந்தியாவின் புகழ்பெற்ற பத்திரிகையாளருள் ஒருவரும் சர்ச்சைக்குரிய பத்திரிகையாளருமான இவர் கருதுகிறார்.

இந்தியாவின் புகழ்பெற்ற செய்தித்தாள்களுள் ''இந்து'' வும் ஒன்றாகும். இந்தப் பத்திரிகையை ஆரம்பித்தவர் கஸ்தூரி ரங்க ஐயங்கார் ஆவர். அவரது குடும்ப வழிவந்தவரும் இந்துவின் முன்னாள் இணையாசிரியரும் 47 வயதினருமான இப்பத்திரிகையாளர் 1987இல் ஏற்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையை உருவாக்குவதில் மறைமுகமான பங்குகொண்டவர் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஒரு காலத்தில் றஞ்சிக்கோப்பை மட்டைப் பந்தாட்டப் போட்டி வீரராக இருந்த இவர் தற்போது ''ஸ்போட் ஸ்ரார்'' சஞ்சிகையின் துணையாசிரியராகவும் இருக்கின்றார். இவர் சென்ற வாரம் கொழும்பு வந்திருந்தபோது இலக்சுமன் குண சேகராவிற்கு அளித்த செவ்வியின் தமிழாக்கம்.

கேள்வி: இலங்கையரசிற்கும் தமிழ்ப் பிரிவினைவாதக் குழுக்களுக்குமிடையில் நடைபெற்ற அரசியல் பேச்சு வார்த்தைகளில் இந்தியப் பத்திரிகையாளரான நீங்களும் பங்குகொண்டிருந்தீர்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும். பத்திரிகையாளரான நீங்கள் எதிலும் நேரடியாக ''சம்பந்தப்படுவது'' மரபாக இல்லாதிருந்தும் உங்களது பங்களிப்பிற்கு எவ்விதமாக நியாயம் கற்பிப்பீர்கள்? நீங்கள் ஒரு 'இலக்கை' குறிவைக்கும் நிருபராகவும் கருதப்படுகிறீர்கள். பத்திரிகையாளர் இவ்வாறான விடயங்களில் ஈடுபடுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?

பதில்: நான் எப்போதுமே என்னை ஒரு பத்திரிகையாளனாகவே கருதிவந்திருக்கின்றேன். இந்த விடயத்திலும் நான் எடுத்துக்கொண்ட பங்கு பத்திரிகையாளன் என்ற ரீதியிலே நான் கொண்ட அணுகுமுறையின் பிரதிபலனே ஆகும். இலங்கையின் இனப்பூசலில் நான் கொண்டிருந்த ஆர்வமும் அது தொடர்பான செய்திகளைத் திரட்டும் கடமையுமே என்னை ஈடுபடுத்திய காரணிகளாகும். ஆகவே ஒருவர் அரசியலிலும் மனிதாபிமான விவகாரங்களிலும் அக்கறை கொள்ளும்போது, அதுவும் இலங்கையின் இனச்சிக்கலில் கவனத்தைத் திருப்பும்போது நான் பக்கச் சார்பற்றவனாக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ள முடியாது. இவ்வாறான விடயங்களில் தம்மை ''ஈடுபடுத்திக்கொள்வது'' ஒரு பத்திரிகையாளனுக்கு மரபல்ல என்பதில் சந்தேகமில்லை. அதேவேளை இப்படியான சந்தர்ப்பங்களில் இடத்திற்கு ஏற்றவாறு முடிவெடுக்கவேண்டியது அவரவர் கடமையாகும். இதுதான் பத்திரிகை நீதி என்று நான் சிபார்சு செய்யவும் மாட்டேன். ஆனால் இவ்வகையான ஈடுபாடுகள் சில சூழல்களில் ஏற்பட்டிருக்கின்றன. பல பத்திரிகையாளர்களுக்கும் வியட்னாம், சீனா போன்ற இடங்களில் இவ்வாறு நடந்துள்ளது.

ஒரு சமுகத்தில் பெரிய மாற்றம் அல்லது நெருக்கடி ஏற்படுகின்றபோது மக்கள் சில நிலைப்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இலங்கை இனச்சிக்கலில் என்னுடைய கருத்து கோரப்பட்டது. இந்தச் சிக்கல் வெற்றிகரமாகத் தீர்க்கப்படவேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்பினேன். என்னால் செய்யக்கூடிய அனைத்தையும் ஆக்கபூர்வமாக வழங்கினேன். இது எனது சொந்த முடிவில் ஏற்பட்ட விளைவாகும். கொடுமைகளும், முரண்பாடுகளும் மலிந்த இவ்வாறான விடயங்களில் எம்முடன் ஒருசிலரே நடுநிலை வகிக்க முடியும் என நான் கருதுகிறேன்.

கேள்வி; வன்முறையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென நீங்கள் விரும்பினீர்களா?

பதில்; என்னால் முடிந்தளவு பங்களிப்பினை ஆற்ற நான் முன்வந்தேன்.

கேள்வி: இலங்கைத் தமிழ் பிரிவினைவாதத்திலும் இனச்சிக்கலைத் தீர்த்துவைப்பதிலும் உங்கள் பங்களிப்பு எத்தகையது?

பதில்: இலங்கைத் தமிழ் மக்களின் பிரிவினைவாதத்தில்எனக்கு எப்போதுமே மகிழ்ச்சி ஏற்பட்டதில்லை. ஒருபுறம் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்திற்கு எனது அனுதாபம் இருந்தது. சமஅந்தஸ்திற்கான உரிமைகள் மறுக்கப்பட்டு இனப்பூசலில் தமிழ் மக்கள் வஞ்சிக்கப்படுவதை நாங்கள் உணரக்கூடியதாக இருந்தது. நியாயம் அவர்களுக்கு மறுக்கப்படுவதையும் கண்டோம். **மறுபுறம் ஈழக் கோரிக்கைக்கு இந்திய மக்கள் மனமுவந்து ஆதரவு அளிக்கவில்லை. (இது அகில இந்திய ரீதியிலான ஒரு நிலைப்பாடாகும்.) அந்த வேளையில் இலங்கைத் தமிழ் மக்கள் மீது அனுதாபமும் அவர்களோடு ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்ற எண்ணமும் ஒன்றுசேர்ந்த காரணத்தால் இந்திய நடுவன் அரசு தனது நோக்கை மாறவிட்டு தமிழ் தீவிரவாதம் வளர்ச்சியடைவதற்கே உதவியது,** பத்திரி

கையாளன் என்ற அளவில் தமிழீழக் கோரிக்கையை நான் எப்போதுமே ஆதரிக்கவில்லை. ஆனால் நடுவன் அரசின் போக்கினை ஆதரித்தேன். திங்கட்கிழமை நான் ஆற்றிய உரையில் கூறியதுபோல எண்ணத்திற்கும், செயற்பாட்டிற்கும் தொடர்பில்லாத நிலைப்பாடுதான் அதுவென்பேன். திரு ஜீ. பார்த்தசாரதியின் பேச்சுவார்த்தைக் காலத்திலிருந்து இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்படும் காலம்வரை இந்தச் சிக்கலுக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கான இந்திய முன்முயற்சிகளை நான் ஆதரித்தேன். இந்த விவகாரம் முழுவதையும் உள்ளடக்கிய, பத்திரிகைத் துறைக்கு தேவையானவற்றை ஈட்டிக் கொள்ளும் பாதையிலேயே எனது பயணம் போய்க்கொண்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட்ட அனைத்து தமிழ் அமைப்புக்களையும் பற்றி அறிந்து எழுதும் பத்திரிகைத் தொழில் பார்ப்பவர்களாகவே நாங்கள் எங்களைக் கருதினோம்.

கேள்வி! அப்பொழுது 'இந்து' பத்திரிகையில் இருந்தீர்கள் என்று நினைக்கின்றேன்.

பதில்: நான் அப்பொழுது இந்துவின் இணையாசிரியர். இப்போதும் நான் அதே நிறுவனத்தில்தான் பணியாற்றுகின்றேன். அனேகமான தலையங்கங்களையும் இலங்கை தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளையும் நானே எழுதிவந்தேன், 1983ஆம் ஆண்டு யூலைத் திங்களில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட வன்செயல்கள், கட்டவிழ்த்து விடப்பட்டதைத் தொடர்ந்து எமது பத்திரிகை இலங்கை விவகாரத்தில் கூடிய கவனம் செலுத்திவந்தது. ஆரம்ப காலத்திலிருந்து 1985ஆம் ஆண்டுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான கண்ணோட்டம் மிகக் குறைவானதாகவே இருந்தது. அவர்களை அணுகமுடியாமல் இருந்ததும் இதற்கு ஒரு காரணமாகும். சென்னையிலிருந்துகொண்டே இவர்களுள் முக்கியமானவர் யாரென்று கண்டுகொள்வது மிகக்கடினமாக இருந்தது. ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவியேற்ற 1984ஆம் ஆண்டின் இறுதிக் காலத்திற்குப் பின்னர் தீவிரவாதிகளும் பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ளவேண்டும் என்ற நிலைப்பாடு தோற்றமெடுத்தது. 1935ஆம் ஆண்டில் அவர்க

ளும் திம்புவிற்கு வந்தார்கள். அப்போதிருந்த கணிப்பீட்டின்படி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஓரங்கட்டுப்பட்டுவிட்டதால் எல்லாத் தீவிரவாதக் குழுக்களுடனும் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் தொடர்பு கொள்ளவேண்டும் என்றாயிற்று. அப்போதுதான் பத்திரிகைக்கான செய்திகள் இவையனைத்தையும் உட்படுத்தியதாக அமையத் தொடங்கியது. அடிப்படையில் சென்னையிலிருந்த இலங்கைத் தமிழ் அமைப்புக்கள் அனைத்தினதும் நிலைப்பாட்டை அது பிரதிபலித்தமையே இதற்குக் காரணமாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் எம்மோடு தொடர்பு கொள்ளும்வரை 1983இல் இருந்து 1985 வரையிலான காலப்பகுதிக்குள் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினரையே பேச்சுவார்த்தைக்குரியவர்களாகப் பத்திரிகைத்துறையினர் கருதி வந்தனர். அவர்கள் எதையுமே வெளிப்படையாகப் பேசிவந்தனர். இலங்கைத் தமிழ் மக்களுக்காகப் பேசும் சட்டபூர்வமான உரிமையையும் அவர்கள் பெற்றிருந்தனர். நடுவன் அரசு, மாநில அரசுகள் என அனைத்து அரசுகளுடனும் அவர்கள் தொடர்புகொண்டிருந்தனர். தீவிரவாதப் போக்கின் வளர்ச்சிகண்டு மக்கள் மகிழ்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. போராளிகள் வெறுக்கத்தக்க பல செயல்களைப் புரிந்தனர். ரெலோவின் தலைவர்களின் கொலைகள், அனுராதபுரப் படுகொலை என்பன இவற்றுட் சிலவாகும். **ஆனாலும் அவர்களை ஒரு செயற்திட்டத்தின் கீழ் கொண்டுவரமுடியுமென நம்பப்பட்டது. போராட்டம் முனைப்படையும் அதேநேரம் போராளிகளே நிபந்தனைகளை விதிக்கவிடாமல் அழுத்தங்களைப் போட்டு நாங்கள் விரும்பிய விதத்தில் சிக்கலைத் தீர்க்க முடியுமென கருதப்பட்டது. இத்திட்டத்திலே குறைபாடுகள் மலிந்திருந்ததை பின்னர் புரிந்துகொண்டோம்.** இந்தியாவில் பத்திரிகைத் தொழிலில் நிபுணத்துவம் பெற்றவன் என்றும் இலங்கை இனச்சிக்கலை ஆய்வு மேற்கொள்பவன் என்றும் கருதப்பட்ட 1986/1987ஆம் ஆண்டு காலத்தில்தான் நான் இதில் சம்பந்தப்படலானேன். தீவிரவாத செயற்பாடுகள், பேச்சுவார்த்தைகள், இலங்கை இந்திய அரசுகளுக்கிடையிலான உறவுகள் என்பன பற்றி நாங்கள் விரிவாக

எழுதிவந்த காரணத்தினால் எமக்கு இந்த விடயத்தில் போதிய அறிவாற்றல் உண்டு எனவும் எண்ணப்பட்டது. இருபக்கத்திலுள்ளவர்களும் என்னை அணுகினார்கள். இரு அரசாங்கங்களும் கூட என்னை அணுகின. எனது கருத்தை நான் தெரிவித்தேன். 1987 ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்களில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை செவ்வி காண்பதற்காக இங்கு வந்தேன். இந்த நிகழ்ச்சி உத்தியோகப் பற்றற்ற ஒன்றாகும்.

கேள்வி: நீங்கள் ஏதாவது திட்டங்களைக் கொண்டு வந்தீர்களா?

பதில்: நான் திட்டங்கள் எதையும் கொண்டுவரவில்லை கேட்கப்பட்டபோது எனது ஆலோசனைகளை வழங்கினேன். நான் *வெளிப்படையாக எழுதியவற்றிற்கும் இப்போது கொடுத்ததிற்கும் இடையில் எந்த வேறுபாடும் இருக்கவில்லை. இங்கே செயலுரிமைப் பரவலாக்கல் நிகழ்வதே நல்லது என்று நான் நம்பினேன். இணைப்பாட்சி முறையை நோக்கியதாக அது இருக்கவேண்டும். இந்தக் கருத்து என்னுடையது மட்டுமல்ல. பலர் இந்தக் கருத்திலே நம்பிக்கை கொண்டுள்ளார்கள். வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினேன். என்னிடம் யாராவது கேட்கின்றபோதுதான் நான் எனது கருத்துக்களை முன்வைக்கிறேன். இதற்குமேல் எனது பங்கு மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்றே நம்புகிறேன். விடுதலைப் புலிகள் எதனை விரும்புகிறார்கள் என்றும் இந்திய அரசு எந்த நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்றும் நான் செய்துகொண்ட கணிப்பீட்டையே நான் வெளிப்படுத்தினேன். இதேபோல இங்கே நான் தெரிந்துகொண்டதை இந்தியாவில் வெளியிட்டேன். இத்தகவல்கள் இருபக்கத்து எண்ணப்பாடுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் பலர் நினைப்பதுபோல நான் எந்தப் பேச்சுவார்த்தையிலும் பங்குகொள்ளவில்லை. டிக்சிட்டோடு இதுதொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடியிருக்கின்றேன். ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடனும் அவருடன் இருந்த வேறு

பலருடனும் இதேபோல்நீண்ட நேரம் உரையாடி இருக்கின்றேன். இவை கலந்துரையாடல்கள் மட்டுமே அன்றித்தரகு வேலை அல்ல.

கேள்வி: அது எப்போது நடைபெற்றது ?

பதில்: இது நடந்தது 1987 பெப்ரவரியில். அதைத்தொடர்ந்து இன்னுமொரு சந்திப்பும் இடம்பெற்றது.

கேள்வி: இது கொழும்பிலா நடந்தது ?

பதில்: ஆம். கொழும்பில்தான். பத்து மணித்தியாலங்களுக்கு மேலான விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றன. என்ன செய்வது என்று அறியாது அனைவரும் சிக்கல்பட்டார்கள். இதனோடு சம்பந்தப்பட்ட பலரை நான் சந்தித்தேன்.

கேள்வி: யார் அங்கு இருந்தார்கள் ?

பதில்: நான் லலித்தைச் சந்தித்தேன். காமினியைக் கண்டு பேசினேன். முக்கியமாக ஜே. ஆர்ஐயும் இப்போது வெளியுறவுச் செயலராக இருக்கும் டிக்சிற்றையும் கண்டு உரையாடினேன்.

கேள்வி: இலங்கைத் தலைவர்களின் அப்போதைய கருத்துப் பற்றி நீங்கள் என்ன நினைத்தீர்கள் ?

பதில்: இந்தச் சிக்கலுக்கு ஒரு முடிவைக் காண்பதற்கு அவர்கள் அங்கலாய்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களது நோக்கம் உண்மையானதாக இருந்தது. அதேவேளை இனவாதமும், கடும்போக்கும் காணப்பட்டது. தன்னால் இயன்ற அளவைச் செய்வதற்கு இலங்கை அரசின் தலைமைப்பீடம் தயாராக இருந்தது. இந்தநிலைப்பாடு என்னையும் இந்தியாவில் உள்ளோரையும் கவர்ந்தது. தற்காலிக இணைப்பு ஒன்றுக்குச் சம்மதித்து தீர்வை உறுதிப்படுத்துவதற்காக இந்தியப் படைகளை இங்கு கொண்டுவருவதற்கு சம்மதித்த செயலானது, தீர்வை நோக்கிய ஒரு துணிகரமான நடவடிக்கையாகும்.

கேள்வி: இந்த விடயத்தில் அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஈடுபாட்டை இப்பொழுதும் கொண்டிருக்கின்றீர்களா?

அல்லது ஒரு பார்வையாளராகவோ, விமர்சகராகவோ இருக்கிறீர்களா?

பதில்: இந்தியா இந்த விடயத்தில் அக்கறையற்று இருப்பதால் நான் முன்னர் அளவு ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. ஆகவே என் ஈடுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. நான் எப்போதுமே தனியாக இந்த விடயத்தில் ஈடுபட்டதும் இல்லை. இது ஒரு கொள்கை தொடர்பான பங்களிப்பு. இன்னும் விளக்கமாகச் சொல்லுவதானால் இது ஒரு ஜனநாயக ரீதியான பங்களிப்பாகும். இப்போது ஒரு தீர்வைக் கண்டு கொள்ள முடியுமென நம்புகிறேன். உங்களுடைய எண்ணங்களில் அடிப்படையில் தீர்வைக் காண்பதில் உள்ள சிக்கல்கள் உங்களுக்குத் தெளிவாகப் புரிகின்றது. அன்று போலல்லாது இன்றும் இலங்கையர்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டிய ஒரு விடயமாக இது மாறியுள்ளது. எனது கருத்தை யாராவது கோரினால் அதனை நான் வழங்குவேன்.

கேள்வி: சிறிலங்காவின் முரண்பாடும் தமிழ் நாட்டு அரசியலும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாகும். இது பற்றிய உங்கள் கருத்து என்ன?

பதில்: இப்போது அந்த நிலை இல்லை. அந்தத் தவறுகள் மீண்டும் விடப்படமாட்டாது என நினைக்கின்றேன்.

கேள்வி: அக்கரையிலுள்ள மக்களின் இன அனுதாபத்திற்குப் புத்துயிர் அளிக்க முடியுமா? தமிழீழ இலட்சியத்திற்கு தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் ஊக்கம் அளித்தால் தமிழ் நாட்டு மக்கள் அதற்கு ஆதரவு வழங்குவார்களா? இவ்வாறான ஒரு நடவடிக்கையில் ஜெயலலிதா இறங்கக்கூடுமென செய்திகள் தெரிவிக்கின்றனவே?

பதில்: பொதுவாக இந்திய மக்களும் குறிப்பாக தமிழ் நாட்டு அரசியல் வாதிகளும் பாடம் கற்றிருப்பதால் இத்தகைய அனுதாப அலைகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க முடியாது என்றே நான் கருதுகின்றேன். பொது மக்கள் கருத்து இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு அனுதாபம் அற்ற நிலையிலேயே இருந்துவருகின்றது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக மக்கள் தீவிர பகைமை

உணர்வையே கொண்டிருக்கின்றார்கள். தேர்தல்களின் முடிவுகளும் கருத்துக் கணிப்புகளும் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவர்கள் பயங்கரவாதிகளாகவே கருதப்படுகின்றார்கள். நடைபெறக்கூடாது என நான் எண்ணும் மக்கள் மீதான ஒரு தாக்குதல் இடம்பெற்றால் என்ன நடக்கும் எனச் சொல்லமுடியாது. இதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். ஏனெனில் விடுதலைப் புலிகள் மீது ஜெயலலிதா முன்னர் மென்மையான ஒரு போக்கையே கடைப்பிடித்து வந்தார். செயற்பாட்டளவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவியது எம். ஜி. ஆர், அரசே தவிர கருணாநிதி அல்ல. ''அவர்கள் இளைஞர்கள்; கொள்கைப் பற்றுள்ளவர்கள்'' என்று விடுதலைப் புலிகளைப் பற்றி ஜெயலலிதா முன்பு ஒருமுறை கூறியிருந்தார், முதலமைச்சராகப் பதவி ஏற்ற பின்பு புலிகளுக்கு எதிராக அவர் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார். இதற்குக் காரணம் ராஜீவின் படுகொலையும், அந்தப் படுகொலைக்கு விடுதலைப் புலிகளே காரணமானவர்கள் என்பதற்குப் போதிய சான்றுகள் கிடைத்திருப்பதுமே ஆகும். இன்று விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்கள் என்போருக்கு மிகக்குறைந்த அளவிலான ஆதரவே உண்டு. ''எங்கள் ஆதரவு போராளிகளுக்குக் கிடையாது'' என்று சமீபத்திலே கருணாநிதி தெரிவித்திருக்கின்றார். ''இலங்கைத் தமிழருக்கு எமது ஆதரவு இல்லை என்பது இதன் பொருளல்ல'' என்றும் அவர் கூறியுள்ளார்.

**கேள்வி:** இந்த விடயத்தில் மக்கள் ஆதரவை திரட்டிக்கொள்ள முடியாதாயின் தமிழ் ஏதிலிகளை இந்தியாவிலிருந்து திருப்பியனுப்புவதற்கு எதிரான தடை உத்தரவைக் கோரி நெடுமாறன் ஏன் ஒரு வழக்கைத்தாக்கல் செய்ய வேண்டும் என்ற வினா எழுகிறதே?

**பதில்:** தமிழீழக் கோரிக்கைக்கு நெடுமாறன் மிகத்தெளிவான ஆதரவாளராக உள்ளார். பொதுமக்களின் கருத்தை பிரதிபலிக்காத இவர் போன்ற பல தனிநபர்கள் உள்ளனர். இனப்பூசலினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் இந்தத் தமிழ் ஏதிலிகளே என்பதால் இவர்கள் மீது பலருக்கும் அனுதாபமுண்டு. ஏதிலிகளின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி வழங்க மறு

கும் ஜெயலலிதா அரசின் கொள்கை, நெறிமுறைக ளுக்கு அப்பாற்பட்டதாகும். இனிமேலும் ஏதிலிகளால் ஏற்படும் செலவுச்சுமையை தமிழ்நாடு அரசினால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதாலேயே ஏதிலி களை திருப்பி அனுப்புவதில் ஜெயலலிதா முனைப் பாக நிற்கின்றார். ஆனால் மக்களைத் துரத்துவது என்பது முடியாத காரியம். இந்த விடயத்தில் தான் எதிர்ப்பு இருக்கின்றது. இது போராளிகளுக்கு அனு தாபம் காட்டுவதாகாது.

கேள்வி: தமிழ்நாட்டு அரசியலில் திராவிட தேசியத்தின் நிலை என்ன?

பதில்: ராமதாஸ் போன்றவர்களுக்கு பேராதரவு கிடையாது. திராவிட இயக்கத்தின் இரு முதன்மை கட்சிகளான தி.மு. கவும், அ.இ.அ.தி.மு. கவும் போராளிகளை எப்போதும் ஆதரிக்கப்போவதில்லை. இந்த ஆதரவுகள் முன்னர் இடம் பெற்றிருக்கின்றன என்பதால் இந்தக் கேள்வியில் நியாயம் உண்டு. பெரிய அளவிலான அழிவு நிகழ்வு கள் ஏற்படாதவிடத்து இம்மாதிரியான ஒரு திருப்பம் ஏற் படுவதற்கு வழியில்லை. ஓராயிரம் பேர் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளு வோம். (இதை ஒரு விவாதத்திற்காகவே குறிப்பிடுகி றேன். இவ்வாறான ஒரு நிகழ்வு ஏற்படக்கூடாதென் பதே எனது விருப்பமாகும்) அப்படியானால் தமிழ் நாட்டு மக்களின் ஆதரவு கிடைக்காது என்று சொல் வதற்கில்லை. போராளிகள் சரியான முறையில் விட யங்களை கையாளவில்லை என்றே மக்கள் நினைக்கி றார்கள். இதனால் பேரினவாதிகளை குறைகூறுவதை விட தமிழ்நாட்டு மக்கள் விடுதலைப்புலிகளையே அதிகமாகக் குறைகூறுவார்கள்.

கேள்வி: ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1987ம் ஆண்டில் வடமராட்சியில் இலங்கைப் படையம் தாக் குதல்களை மேற்கொண்ட போது இலங்கைத் தமிழ் மக்களின் நிலை குறித்து தென்னிந்தியாவில் மிக வலுவான பொதுமக்கள் ஆதரவு இருந்தது. அன்றைய நிலையிலும் பார்க்க யாழ்ப்பாண மக்களின் நிலை மிக மோசமாக உள்ளது. யாழ்ப்பாணத்திற்குள் எந்தவேளையிலும் படையம்

நுழையலாம் என்று திங்கட்கிழமை நீங்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தீர்கள். இந்த நிலையில் தென்னிந்தியளவில் குறைந்த அளவிலான அனுதாபமே இருக்குமென்று கூறுவது ஒன்றுக்கொன்று முரண் பட்டதாக இருக்கின்றதல்லவா?

பதில்: இன்றைய நிலை அடியோடு வேறுபட்டதாகும். அதனால் இன்று தமிழ்நாட்டு மக்கள் இங்குள்ள நிலைமை தொடர்பாக எதுவுமே பேசப்போவதில்லை,

கேள்வி: தமிழ்மக்கள் எந்த அளவுக்கு இன்னலுக்கு உட்பட்ட போதும் நீங்கள் சொல்லுவது போல தமிழ்நாட்டு மக்கள் பேசாது இருப்பார்களா?

பதில்: ஆம். போராளிகள் போதிய பலம்பெறுவதற்கு இந்தியா உதவி செய்தது. இது நிலைமையை மேலும் சிக்கலாக்கவே உதவியது. இன்று நியாயமான, சன நாயக ரீதியிலான ஒரு தீர்வுக்கு தடையாக இருப்பவர்கள் விடுதலைப் புலிகள் என்றே பலரும் கூறுவர். நான் இவ்வாறு கூறுவேனாகில் ஒருபக்கச் சார்பான வன் என்று கருதப்படுவேன். ஆனால் உண்மையில், இதுவே இன்றைய நிலையாகும். முன்னர் கடைப் பிடிக்கப்பட்ட கொள்கை படுதோல்வியைத் தழுவிக் கொண்ட ஒன்று என்பது இப்போதைய கருத்தாகும். ஆகவே பழைய தவறுகளைத் திருத்த இப்போது அதி களவில் முயற்சி நடக்கின்றது. இலங்கையின் இந்தச் சிக்கலைப் பற்றி எவ்வித தலையீடும் செய்யாமல் இருக்கும் போக்கையே இந்தியா கடைப்பிடிக்க விரும்புகின்றது.

கேள்வி: இந்தியா அக்காலத்தில் போராளிகளுக்கு ஆதரவு அளித்தமைக்குக் காரணம் ஒரு நல்ல தீர்வை உறுதிப் படுத்துவதற்கு மட்டும்தானா? பரந்த அளவிலான உலக அரசியலில் தன் செல்வாக்கைப் பதிப்பதற்கான ஒரு இரண்டாவது நோக்கமும் இந்தியாவிற்கு இருந்தது என்று கூறலாமா?

பதில்: 1981ம் ஆண்டு காலப் பகுதியில் இந்தியா இந்த விடயத்தில் சிறிதளவு அக்கறையே காட்டிவந்தது. ஆனால் 1983ம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற இனக்

கலவரத்தின் பின்னரே அது கூடிய அக்கறைகாட்டத் தொடங்கியது. இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டிருக்காது போனால் இங்கிருந்த இஸ்ரேலியரைப் பற்றியோ, திருக்கோணமலையைப் பற்றியோ இந்தியா வெளிநாட்டுக்கொள்கை ரீதியில் பெரிதாக நடவடிக்கை எதிலும் இறங்கி இருக்கமாட்டாது. இலங்கையின் இனப் பூசலுக்குத்தீர்வு காண்பதற்கான உத்தரவாதம் அளிக்கும் பொறுப்பு இன்றைய நிலையில் இந்தியாவுக்கு இல்லை என்பதால் இந்திய - இலங்கை ஒப்பந்தமும் செயலற்றுவிட்டதாகவே இந்தியாவில் உள்ளவர்கள் கருதுகின்றார்கள்.

**கேள்வி:** பிரபாகரன் மீது சுமத்தப்பட்டுள்ள கொலைக் குற்றச்சாட்டை இந்தியா எந்த அளவுக்கு வலியுறுத்தப் போகின்றது? விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கையரசு எடுக்கும் முயற்சிகளுக்குத்தடையாக இந்தியா இந்த விவகாரத்தைப் பயன்படுத்துமா? அப்படியானால் இலங்கை இனச்சிக்கலில் தான் இன்னமும் ஈடுபாடுகொண்டுள்ளதாக இதன் மூலம் இந்தியா இலங்கைக்கு மறைமுகமாக தெரிவிக்கின்றதா?

**பதில்:** இந்தப் படுகொலையைச் செய்வதற்கு விடுதலைப்புலிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் கையாண்ட முறைகளைப்பற்றி விசாரணையாளர்கள் தீர்க்கமான முடிவுக்குவந்திருக்கின்றார்கள். புலிகளின் மேலிடத்திலிருந்தே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படிருக்கின்றது என்பது தெளிவானது. இந்த உண்மையை நிரூபிப்பதற்கு பிரபாகரனை விசாரணைக்குட்படுத்தியே ஆகவேண்டும். இதற்கு அவரை நாடு கடத்த வேண்டியது அவசியமாகும். பேச்சுவார்த்தைகளை இது நிச்சயம் கடினமாக்கும். இது நடைமுறைச்சிக்கலையும் உருவாக்கும் என்பது திண்ணம்.

**கேள்வி:** அனுராதபுரப்படுகொலைக்கு காரணமாக இருந்தவர்களோடே இலங்கையரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு விரும்புகின்றபோது இந்தியா உண்மையிலேயே இந்தச் சிக்கலுக்கு தீர்வுகண்டாகவேண்டும் என்ற ஆர்வம் உடையதாக இருந்தால், எதற்காக அது ஒரு கடும்போக்கை கடைப்பிடிக்கவேண்டும்?

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

பதில்: ராஜீவ் காந்தியை படுகொலை செய்வதற்கான உத்தரவை பிரபாகரனே வழங்கியுள்ளார் என்பதற்கு சகல சான்றுகளும் உள்ளன. இது ஒரு மிகப்பெரிய குற்றமாகும். அவர் இதில் ஈடுபட்டிருந்தால் கொலைக் குற்றத்திற்கான விளைவுகளிலிருந்து அவர் தப்பிச் செல்ல முடியாது.

கேள்வி: இச்சிக்கலுக்கு ஒரு தீர்வு காணப்பட்டு சந்தர்ப்பவசத்தால் பிரபாகரன் முதலமைச்சரானால் விளைவுகள் என்னவாக இருக்கும்?

பதில்: இந்தவிடயத்தில் மன்னிப்பு என்பதற்கு இடமே கிடையாது. ஒரு தேசியத்தலைவரின் கொலையிலே பிரபாகரன் சம்பந்தப்பட்டிருக்கிறார்.

கேள்வி: இலங்கையில் நிலவும் உள்நாட்டுச்சிக்கல் நிலையை தீர்க்க வேண்டும் என்பதுதான் முக்கியமான குறிக்கோளாக இருந்தால் அதற்கான வழிகள் அனைத்தும் திறந்தே இருக்க வேண்டும்? பிரபாகரனை எந்த வழியிலேனும் குற்றவாளியாகக் கண்டே ஆகவேண்டும் என்ற இந்தியாவின் கடும் போக்கை இலங்கையிலுள்ள சகலரும் தீர்வுக்கு தடைக்கல்லாகவே கருதுகின்றார்கள். இந்தச் சிக்கல் தொடர்ந்தும் நீடித்தால் துன்பங்கள் அதிகரிக்கும். அவ்வாறாயின் சிக்கலுக்கு தீர்வுகாண வேண்டும் என்ற ஆரம்ப நோக்கத்திற்கு இது முரணாக இருக்குமல்லவா?

பதில்: இதுகாலவரைக்கும் தவறான வழிகளையே பின்பற்றி வந்த இந்தியா இனிமேலாவது ஆக்க பூர்வமான செயலில் ஈடுபடவேண்டும் என நான் கருதுகிறேன். இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் இந்த விடயத்தை திறந்தமனதுடன் அணுகவேண்டும். ஆனால் மன்னிப்பு என்ற விடயத்திற்கு பெரிய அளவில் மனமாற்றம்தேவையாதலால் மன்னிப்பு வழக்கப்படக்கூடியதான சாத்தியக்கூறுகள் இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால் இனச்சிக்கலுக்கு தீர்வு காண்பதில் உதவவேண்டும் என்பதில் பெரிய அக்கறை இருந்து வருகின்றது.

கேள்வி: ''ஈழம்'' கோரிக்கைக்கும் ''சிங்களம் மட்டும்'' கோட்பாட்டிற்கும் முடிவுகாணவேண்டும் என்று உங்கள் உரையில் குறிப்பிட்டிருந்தீர்கள். நீங்கள் இந்த

இரண்டு தேசியக் கோட்பாடுகளையும்'' சமநிலையில்" வைத்துப்பார்க்கிறீர்களா? அல்லது சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் மேலாண்மையால் வழிநடத்தப்பட்டு நடைமுறையிலிருக்கும் இனவாத அரசிற்கு எதிரான ஒரு போராட்டம் தான் ஈழக்கோட்பாடு என நினைக்கிறீர்களா?

பதில்: மிகச்சரியாகச் சொன்னீர்கள். தமிழீழக் கோட்பாடு சிங்கள பௌத்த பேரினவாத மேலாண்மை அரசிற்கு எதிராகத் தோன்றியதுதான். ஆரம்பத்தில் தேசியமாகக் கருதப்பட்ட ஒன்று ஈற்றில் பேரினவாதமாக மாறி விட்டது. ''சிங்களம் மட்டும்'' என்பது அரசு கடைப் பிடித்த தவறான கொள்கையாகும். தமிழ்ச் சிறுபான்மையினருக்கு சம உரிமை அளிப்பதற்கு அது மறுத்து விட்டது. வரலாற்றிலே அவர்களுக்கு இடமளிக்கப்படவில்லை. அரசியல் யாப்பின் மூலம் பௌத்த சமயம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. சனநாயக ரீதியிலான நிர்வாக சந்தர்ப்பங்கள் அனைத்தும் மறுக்கப் பட்டு செயலுரிமைப்பரவலாக்கலும் இடம்பெற வில்லை. இந்த உண்மைகளை மையமாக வைத்தே ஈழக்கோரிக்கை தோற்றமெடுத்தது. பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாமையும் எதையுமே சாதிக்க முடியாது போன காரணத்தால் மிதவாத அரசியல்வாதிகள் மீது எழுந்த அவநம்பிக்கையுமே ஈழக்கோரிக்கைக்கான உந்து ஆற்றல்களாகும். மொழிச்சிக்கல் குடியுரிமை என்பனவற்றில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளமையாலும் காணிப்பங்கீட்டு விடயத்தில் நம்பிக்கை தோன்றியிருப்பதாலும் எஞ்சியிருப்பது தமிழ் மக்கள் தம் தனித் தன்மையை பேணக்கூடிய ஒரு ஆட்சிமுறைதான்.

கேள்வி: நீங்கள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தைப் பற்றி குறிப்பிட்டீர்கள். அரசமைப்பை எந்த வகையில் மீளமைக்கவேண்டும்? இந்தியாவில் உள்ளது போன்ற மதச்சார்பற்ற அரசமைப்பை நீங்கள் சிபார்சு செய்கின்றீர்கள்?

பதில்: அரசியல் யாப்பிற்கமைய இலங்கையிலும் பார்க்க இந்தியாவில் மதச்சார்பின்மை சிறந்த முறையில் பாதுகாக்கப்படுகின்றது. அரசியல் யாப்பில் எந்தவொரு மதத்திற்கும் அங்கே முன்னுரிமை அளிக்கப்படவில்லை.

இந்திய அரசியல் யாப்பையும் முழுத்திருப்தியுள்ளதாகக் கொள்ளமுடியாது. அங்கே இந்து மதவாத சக்திகள் மூர்க்கத்தனமாக வெறுப்பை ஊட்டக்கூடிய வகையில் நடந்துகொள்கிறார்கள். ஆறாம் காங்கிரஸ் கட்சி ஒழுக்க வரம்புகளை மீறி விட்டுக்கொடுப்புக்களைச் செய்துவருகிறது. மதச்சார்பின்மை இடம்பெறக்கூடிய விதத்தில் இங்கே அரசியல் யாப்பிலே மாற்றம் செய்யப்படவேண்டும். ''ஒற்றையாட்சி'' கோட்பாட்டையும் நீங்கள் கைவிடவேண்டும். ''ஒற்றையாட்சி'' முறை இந்தியாவிற்கு எந்த அளவிற்கு ஒவ்வாததோ அந்தளவிற்கு இலங்கைக்கும் அது ஒவ்வாததேயாகும். சனநாயக வளர்ச்சிக்கு அது குந்தகம் விளைவிக்கக்கூடியதுதான். பல காரணங்களுக்காக இந்த மாற்றங்கள் ஏற்பட்டே ஆகவேண்டும். ஒப்பீட்டில் இந்தியா மிகப்பெரிய நாடாகும். அது பல்லின மக்களைக் கொண்ட நாடுமாகும். இலங்கையைப் பொறுத்தமட்டில் இனச்சிக்கல் ஒன்றே பெரிய சிக்கலாக உள்ளது. **இதற்கு சனநாயக ரீதியிலான தீர்வுகாணப்படவேண்டும். இது ''தேசியம்'' சார்ந்த விடயமல்ல. இது ஒரு சனநாயகச் சிக்கலாகும். தேசிய இனம் என்ற வரையறைக்குள் எவரையும் கொண்டுவரத் தேவையில்லை. ஆகவே தன்னாட்சி உரிமை என்ற பேச்சிற்கும் இடமில்லை.** இந்தச் சிக்கலில் ஈடுபட்டுள்ள இருசாராரும் இதை ஒரு சனநாயகப் பிரச்சினையாக அணுகி அரசியல் அமைப்பைப்பற்றிப் பேசவேண்டும். இணக்கப் பேச்சுக்கள் நியாயமானதாக இருக்கவேண்டும். ஈழம் என்பது ஒரு கற்பனைக் கனவே ஆகும். ஆனால் ஈழப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கிவிடமுடியாது. யாழ்ப்பாணத்தை இலங்கைப் படையம் கையகப்படுத்துமாயின் தமிழீழ விடுதலைப் புலிகள் காட்டுக்குள் புகலிடம் தேடி அங்கிருந்துகொண்டே போராட்டத்தைத் தொடர்வார்கள். எந்தப் பேச்சுவார்த்தையிலும் விடுதலைப் புலிகள் முக்கிய பங்காளர்களாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதுமாகும். ★

---

**குறிப்பு:** இந்த நேர்காணல் இந்திய அரசின் தமிழீழம் குறித்த கோட்பாட்டை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

அவர்கள் எந்தவகையில் தம் நலனுக்காக தமிழீழப் போராட்டத்தை பயன்படுத்த விரும்பினார்கள் என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றது.

# இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெறும் தீங்குவிளைவிக்கும் கெடுபிடி யுத்தம்

(ஐலண்ட் - 8.8.92.)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெறும் அச்சம் தரும் கெடுபிடிப்போர் காரணமாகத் தென் ஆசியாவிலுள்ள காற் பங்கு மக்கள் பணயக்கைதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.

1947ம் ஆண்டின் பின் மூன்றுமுறை நடைபெற்ற போர் போல் மீண்டும் ஒரு போர் வெடிக்குமாயின் இந்த இருசாராரும் தாங்கள் இரகசியமாகத் தயாரித்து வைத்திருக்கும் அணுக்கரு விகளை உபயோகிக்கும் அபாய நிலை ஏற்படும்.

போர் ஏற்படுவதற்கும், அணுகுண்டை உபயோகிப்பதற்கும் மூலகாரணமாக விளங்கும் காசுமீர் விவகாரம்பற்றி இந்தியா வில் மனமாற்றம் ஏற்பட்டிருப்பதை அந்தநாட்டு மூத்த மேலாளர் கள் அண்மையில் வழங்கிய செவ்விகள் எடுத்துக்காட்டு கின்றன. விவாதத்துக்குரிய பிரதேசத்தை நிரந்தரமாகப் பிரிப்ப தற்கும், தான் இரகசியமாக வைத்திருக்கும் அணுகுண்டுகள் தொழிற்சாலைகளை வெளிநாட்டுப் பார்வையாளர்கள் பார்வை யிட அனுமதிப்பதற்கும் இந்தியா முதன் முறையாக இப்பொழுது இணங்கியுள்ளது.

தென் ஆசியாவிலுள்ள தனது பெரும்பாலான அரசுகளை 45 ஆண்டுகளுக்குமுன் பிரித்தானியர் விட்டுச்சென்றதிலிருந்து காசுமீர் தகுநிலை தீர்க்கப்படாதிருக்கின்றது. ஒருங்கிணைந்த பிரித்தானிய குடியேற்ற நாட்டுக்குப்பதிலாக முஸ்லிம் மக்களைக் கொண்ட பாகிஸ்தானும், மதசார்பற்ற ஆனால் இந்துக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட இந்தியாவும் தோன்றின. இதையடுத்து முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டதும் பாகிஸ்தானுக்கு அணித்தாகவிருந்ததுமான அரசுகளைப் பாகிஸ்தானும், இந்துக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டதும் இந்தியாவுக்கு அணித்தாகவிருந்ததுமான அரசுகளை இந்தியாவும் தங்கள் நாடுகளுடன் இணைத்துக்கொண்டன. முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஜம்மு காசுமீர் மாநிலத்தின் இந்து மதத்தைச் சார்ந்த மகாராசா இந்தியாவுடன் அந்த அரசு இணையவேண்டுமென விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து மேற்கூறிய விதிமுறை கைவிடப்பட்டது. இதன்பின் இந்தியாவும் பாகிஸ்தானும் காசுமீர் விவகாரம் சம்பந்தமாக இருபோர்களை நடாத்தின.

இரண்டாம்உலகப் போரின் பின் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதிருக்கும் விவகாரமாக காசுமீர் விவகாரம் விளங்குகின்றது. இந்தியாவும் பாகிஸ்தானும் அணுகுண்டுகளைக் கொண்டுள்ளதாகவும் அவற்றைச் செலுத்தக்கூடிய ஆற்றல் பெற்றிருப்பதாகவும் மேற்குலக புலனாய்வாளர்கள் கருதுகின்றார்கள். பாகிஸ்தானிடம் குறைந்தது 6 அணுகுண்டுகளும். இந்தியாவிடம் 25 குண்டுகளும் இருப்பதாகத் தெரிகிறது.

அண்மைக்காலம் வரை கிழக்கு மேற்கு முரண்பாட்டுடன் இந்த இரு நாடுகளுக்குமிடையே நிலவிய இந்தப்பகைமை பின்னிப்பிணைந்திருந்தது. பாகிஸ்தானுக்கு ஆதரவாக அமெரிக்காவும், இந்தியாவுக்கு ஆதரவாக ருசியாவும் செயற்பட்டன. காசுமீரிலுள்ள அநேகமான முஸ்லிம்கள் இந்தியாவின் மேலாண்மையை விரும்பினார்கள். அல்லது சகித்துக்கொண்டார்கள்.

இந்தக் காப்புப் படையினருக்கும் சாதாரணக் காசுமீர் மக்களுக்குமிடையே 1990களில் கசப்புணர்வு எழத்தொடங்கியது. 4 மில்லியன் காசுமீர் மக்களை அணிதிரட்டியுள்ள பிரிவினைவாதிகள் இந்தியாவையும் பாகிஸ்தானையும் பலமிழக்கச் செய்யும் வகையில் தங்களுக்கு இந்த இரு நாடுகளிலிருந்தும் விடுதலை வேண்டுமெனக் கோருகின்றனர்.

இந்தியாவினதும், பாகிஸ்தானினதும் அரசியல் நிலை தற்பொழுது மிகவும் சீரற்ற நிலையிலிருப்பதால், காசுமீர் விவகாரம் சம்பந்தமாக ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள இது நல்ல தருணமாக விளங்குகின்றது.

காசுமீரை நிரந்தரமாகப் பிரிப்பதை இந்தியா ஏற்கத் தயாராக விருக்கின்றதென்பதை இந்தியாவுள்ள மூத்த மேலாளர்கள் சூசகமாகத் தெரியப்படுத்தியுள்ளனர். தற்போது படையத்தின்கட்டுப்பாட்டிலுள்ள எல்லையே அதன் அனைத்துலக எல்லையாகவிருக்கும் ஜம்முகாஷ்மீர் ஆகியவற்றின் தென் எல்லைக்கு அருகிலுள்ள நிலத்தைப் பாகிஸ்தான் இந்தியாவுக்குக் கொடுக்குமாயின், பாகிஸ்தானையும், சீனாவையும் இணைக்கக்கூடிய வகையில் பெருந்தெருவொன்றை அமைப்பதற்கு காசுமீரின் வடக்கேயுள்ள நிலத்தை இந்தியா கொடுக்குமென இந்திய மேலாளர்கள் கூறுகிறார்கள்.

காசுமீரிலுள்ள எல்லையைத் தீர்மானித்தபின் 2,900 கிலோமீற்றர் நீளமான எல்லையில் தற்போதிருக்கும் அதிகாரபூர்வமாண போக்குவரத்தில் பாதையுடன் மேலும் பல போக்குவரத்துப் பாதைகளை அமைப்பதற்கு இந்தியா ஆவன செய்யும் எனவும் அதன்பின் பாகிஸ்தானுடனான் உறவைச் சீராக்கவும், வாகனப் போக்குவரத்து மற்றும் வர்த்தகம் ஆகிய விடயங்கள் பற்றியும் இந்தியா இணக்கப் பேச்சில் ஈடுபடுமெனவும் அவர்கள் மேலும் கூறுகிறார்கள்.

இணக்கப் பேச்சுவார்த்தைகள் கடினமாயிருக்கும் காசுமீரியர்கள் தீர்மானம் எதுவும் எடுக்கமுடியாத வகையில் இருப்பதால் இந்தியாவின் அணுகுமுறை தவறானதாக இருக்கும். இருப்பினும் இந்தியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுதங்களை வைத்திருப்பதால் காசுமீர் விவகாரத்தில் தீர்வுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும்.

தனது படைய மற்றும் விண்வெளிச் சாதனங்களை வெளிநாட்டுச் சிறப்பு ஆய்வறிஞர் பார்வையிட முன்னர் அனுமதிக்க மறுத்த இந்தியா, தற்பொழுது அதற்கு இணங்கியுள்ளது. தன்னிடமுள்ள அணு வசதிகளையும் பார்வையிட இந்தியா அனுமதிக்க வேண்டும். இந்தியாவின் படைய ஆற்றல் மீதும். உள்ளாக்கங்கள் மீதும் பாகிஸ்தானும் மற்றைய நாடுகளும் கொண்ட சந்தேகம் இதன் மூலம் நீங்குவதுடன், இந்தியாவின் மீதும் அவை நம்பிக்கை வைக்கவும் இது உதவும்.

இந்த இருநாடுகளுக்குமிடையே நிலவும் பதற்றத்தைத் தணிப்பதற்கு அமெரிக்கா தனது பங்களிப்பை ஆற்றவேண்டும். காசுமீரில் ஏற்பட்ட புரட்சி காரணமாக இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடைய உறவில் விரிசல் ஏற்பட்டு, அந்நாடுகளின் வாய்ச் சண்டை உண்மையாகவே பேரச்சம் தரும் ஒரு போருக்கு இட்டுச் செல்லவிருந்த 1990ஆம் ஆண்டில் அமெரிக்கா அதில் தலையிட்டு அந்நாடுகளிடையே நிலவிய பகையுணர்வைத் தணிக்கவுதவியது.

இரு நாடுகளுக்கிடையேயும் புரிந்துணர்வையும், நம்பிக்கையையும் உருவாக்குவதற்கேதுவாக எதிரிகளாகவிருக்கும் இரு நாட்டுப் படைகளும் தரைமட்டத்தில் ஒருவருடன் மற்றவர் தொடர்பை வைத்திருக்கவும், எல்லைக்கு அணித்தாகச் செல்லவிருக்கும் வானூர்திகளின் நடமாட்டங்களை முன்கூட்டியே அறிவிக்கவும் இந்தியாவையும் பாகிஸ்தானையும் அமெரிக்கா தூண்டிவருகின்றது. தங்கள் நாட்டுடன் காசுமீரை இணைக்கவேண்டுமென்பதற்காக ஏற்படக்கூடிய போரில் அணுக்குண்டை உபயோகிக்கவிருக்கும் இந்நாடுகளின் போக்கை மாற்றுவதற்கு அமெரிக்கா தீவிரமாக முயலவேண்டும். இதன்மூலம் இருநாடுகளுக்குமிடையே நிலவும் கெடுபிடிப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து மீண்டும் நல்லிணக்க நிலையை உருவாக்கமுடியும்.

---

(The writer a Senior associate at the Carnegie Endowment for International Peace in Washington Contributed the Comment to the Herald Tribune.)

> உபதேசங்களில் எறும்பு செய்யும் உபதேசமே சிறந்தது என்பேன். காரணம், அது உழைப்பைத் தவிர, வேறு எதையும் செய்வதில்லை.
>
> —பெஞ்சமின் பிராங்லின்—

# 21 குண்டுகள் தீர்த்து வழங்கப்பட்ட அந்த மரியாதை வரவேற்பு

- கௌடில்யா
(ஐலன்ட்- 19- 10- 1992-)

திருவாளர்கள் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்களினதும் குஜ்றால் அவர்களினதும் நிலைப்பாடு இப்பொழுதும் நிலைத்திருக்கின்றதா? சமாதான உடன்படிக்கையெனக் கூறப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு முடிவு ஏற்பட்டுவிட்டதா? இது சம்பந்தமான கடிதப்பரிமாற்ற உடன்பாடும் முடிந்துவிட்டதா?

இந்த உடன்படிக்கையைப் பற்றிய தனது முதலாவது குறிப்புரையில் இந்தியக் குடியரசுத் தலைவரும் கல்விமானுமான கலாநிதி சங்கர் தயாள் சர்மா அவர்கள் இறந்த காலத்தைப் பயன்படுத்தியது இதை எடுத்துக்காட்டுகின்றது.

''பத்தாண்டு காலத்துக்கு மேலாக நீடித்துச் செல்லும் இனப்பூசலுக்குத் தீர்வுகாணும் நோக்கிலேயே இந்திய இலங்கை உடன்படிக்கை உருவாக்கப்பட்டது'' எனச் சனாதிபதி பிரேமதாசா அவர்களைச் சிறப்பிக்கும் முகமாக வழங்கப்பட்ட விருந்துபசாரத்தின் போது இந்தியக் குடியரசுத் தலைவர் கூறினார். இந்திய எதிர்ப்புக் கொள்கை உள்ளவர்களும், எப்பொழுதும் கூடாததே நடக்குமெனச் சந்தேகக் கண்ணுடன் விடயங்களை

நோக்குபவர்களும், இவருடைய இந்தக் கூற்றில் ஆழ்ந்த கருத்துப் பொதிந்துள்ளதாகவும் இது மிகவும் புத்திசாலித்தனமாகக் கூறப்பட்டுள்ளதாகவும் எச்சரிக்கிறார்கள்.

அவர் பேசிய அடுத்த வசனமே இதைவிட முக்கியமானது.

''நாட்டிலுள்ள எல்லாமக்களும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் மதிப்புடனும், சிறப்புடனும், சம உரிமையுள்ளவர்களாகவும், காப்புடனும் வாழக்கூடியவகையில் செயல்முறைப்படுத்தக்கூடிய செயலுரிமை பரவலாக்கல் செய்வது அவசியமானது'' எனவும் இவர் கூறியுள்ளார்.

இந்தியாவின் கொள்கைகளை விமர்சிப்பவர்களும், இந்தியாவுக்குச் சார்பான இலங்கை அரசியல் கட்சிகளும், அரசியல் வாதிகளும், கல்விமான்களும், ஆய்வாளர்களும் இந்தக் கூற்றைக் கவனமாக ஆராயவேண்டும்.

இந்திய இலங்கை உடன்படிக்கை தவறான ஒன்று என்றும், ஆனால் நல்ல நோக்கத்துடன் அது உருவாக்கப்பட்டதென்றும் குடியரசுத்தலைவர் சர்மா அவர்களின் முதலாவது கூற்று வெளிப்படுத்தும் அதேவேளையில், இலங்கையின் இனப்பூசலில் தலையிடவும், அதைத் தீர்த்துவைக்கவும் இந்தியாவுக்கு உரிமை உண்டென்பதை தனது இரண்டாவது கூற்றுமூலம் இவர் உறுதிப் படுத்துகின்றார். இதன்மூலம், இந்தியாவின் தலையிடும் உரிமையை இவர் வெளிப்படுத்துகின்றார். இந்தப்பூசல் நீடித்துச் செல்வதாலும், அதன் அச்சம் தரும் விளைவுகளாலும், நோர்வே அல்லது கனடாவைப்போலல்லாது கவலையுறும் இந்தியா, இந்தவிடயத்தில் மனிதாபிமான ஒரு தீர்வை ஏற்படுத்த அக்கறையாகவுள்ளது. இந்தியா இலங்கையின் ஒரு அயல் நாடாகவும், மற்றைய அயல் நாடுகளைப்போலின்றி, இலங்கைத் தமிழ்மக்கள் வாழும் வடக்கிற்கு அண்மையாகவுள்ள பாக்குத் தொடுவாய்க்கு அண்மித்ததாகவுள்ள தமிழ்நாட்டைத் தனது தென் மாநிலமாகக் கொண்ட நாடாகவும் விளங்குகின்றது. இந்த இனப்பூசலில் ஈடுபாடுகொள்வதற்கும் அக்கறைகொள்வதற்கும் இதற்கு உரிமையுண்டு. இந்தியா வழமையாகப் பின்பற்றும் இந்தப் போக்கைக் குடியரசுத் தலைவர் சர்மா அவர்கள் மென்மையாகப் பேசி வலியுறுத்தியுள்ளார். இதை அவர் மேசை மேல் தட்டியோ, எச்சரிக்கை எதையும் விட்டோ அல்லது விதண்டாவாதம் ஏதும் பேசியோ கூறவில்லை. இதுவே திரு. நரசிம்ம ராவ் அவர்களின் புதிய அணுகுமுறையாகும்.

தாங்கள் செய்யும் எந்தவொரு விடயத்துக்கும் இந்தியாவின் ஆதரவு தங்களுக்கு உண்டு எனக்கருதுவோரும், இந்தியாவுக்கு ஆதரவான அரசியல் கட்சிகளும், தலைவர்களும், செயலுரிமை பரவலாக்கல் என்று குடியரசுத்தலைவர் குறிப்பிட்டுள்ளதையும், எல்லா மக்களும் மதிப்புடனும், சிறப்புடனும், சம உரிமையுள்ளவர்களாக காப்புடன் வாழவேண்டுமென்ற அவருடைய சொற்பிரயோகத்தையும் நன்றாகச் சிந்தித்து ஆராயவேண்டும்.

## நல்ல பாங்கு

இந்தியாவைப் பகைக்கக்கூடாது எனவும், அதன் சவுத் புளொக்கில் உள்ள (South Block) பிராமணர்கள் கோபமடையத்தக்க வகையில் எந்தவொரு நடவடிக்கையையும். இலங்கை மேற்கொள்ளக்கூடாதெனவும் ஒரு கருத்து நிலவுகின்றது. ஆளும் வகுப்பினரும், ஆளும் வர்க்கப் பிராமணர்களும், இந்த மாயைக்குப் புத்துயிர் கொர்டுப்பதன் மூலம் அரசியல்வாதிகளையும், பொது மக்களையும் தங்களால் இயன்றவரை தங்களுடைய நலன்களைக் காக்கவும், முன்னேற்றவும் பயன்படுத்திவருகின்றார்கள். இந்தப் பேச்சைப் பிரேமதாசா அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அவர் ஓர் அரசியல்வாதி. அவரது அரசியல் நல்ல பலனைத் தந்துள்ளது.

திரு. பிரேமதாசா அவர்களைச் சிறப்பிக்கும் முகமாக பாகிஸ்தானில் தீர்க்கப்பட்ட 21 மரியாதை வேட்டுக்கள், தென்னாசிய நகரங்களில், குறிப்பாக புதுடெல்லியில் எதிரொலித்திருக்கும். ஜெனறல் சியா உல் கக் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் அமைக்கப்பட்ட அனைத்துலக பௌத்த நிலையத்தை இஸ்லாமாபாத் நகரத்தில் இலங்கை சனாதிபதி திறந்துவைத்த வைபவத்தில் பாகிஸ்தானிய சனாதிபதி குலாம் இசாக் கான் கலந்துகொண்ட போது, இசுலாமிய நாடு ஒன்று மற்றைய மதங்களுக்கு மதிப்புக் கொடுப்பதாக இலங்கை சனாதிபதி அவர்கள் கூறக்கேட்ட பாகிஸ்தானிய சனாதிபதி மகிழ்ச்சி அடைந்திருப்பார். இது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டு ஆப்கானிஸ்தான் சிந்தாபாத், சிந்தாபாத் எனச் சிறுபிள்ளைத்தனமாகவும். ஆத்திரமூட்டக்கூடியவகையிலும் அமைந்த முன்னைய சனாதிபதி பேச்சுப் போலல்லாது நன்றாகச் சிந்தித்துப் பேசப்பட்ட உரையாகும். பாக்கு நீரிணைக்கு அப்பாலும், இப்பாலும்உள்ள சார்க்

அமைப்பு நாடுகள் சில விரும்புவதுபோல் இல்லாது, இலங்கை யின் மதிப்புக்குக் குந்தகம் ஏற்படாதவகையில் இந்த நல்லுறவு இருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

பேசுவதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்த போதும் காசுமீர் விவகாரம்பற்றி திரு. பிரேமதாசா அவர்கள் பேசமுற்படவில்லை. பிரதமர் திரு. ராவ் அவர்களின் செயலக மும் சவுத் புளொக்கில் உள்ளோரும் இதைத் தங்கள் கவனத் தில் எடுத்திருப்பார்கள்.

இரு நாடுகளும் சமவலு நிலையில் இருக்கின்றதெனக் கூறிப் பாகிஸ்தானை இந்தியாவுடன் மோதவைக்க முன்னைய சனாதிபதி முயன்றார். இது ஒரு மடைமைத்தனமானதும் அச்சம் தரும்முயற்சியுமாகும். மிகவும் ஆற்றல்வாய்ந்த அமெரிக்கா பாகிஸ் தானுக்கு நட்பு நாடாகவிருந்தபோதிலும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்ற மூன்று போர்களில், இந் தியா பாகிஸ்தானைத் தோற்கடித்ததை நோக்குகையில் இவ்விரு நாடுகளுக்குமிடையே வலுச்சமநிலை நிலவவில்லையென்பது புல னாவதுடன், முன்னைய சனாதிபதியின் முயற்சி ஒரு முட்டாள் தனமானதென்பதும் புலனாகின்றது. சோவியத் ஒன்றியம் அமெ ரிக்காவைப் போல் ஆற்றல் வாய்ந்த நாடாக இல்லாவிடினும், அது இந்தியாவுக்கு அண்மையில் இருப்பது இந்தியாவுக்கு அனு கூலமாகவிருந்தது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியினால் இந் தச்சமநிலையில் தற்பொழுது பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

* * *

பசியிருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதைவிட, மீனைப் பிடிக்கக் கற்றுக்கொடுப்பதே சிறந்தது.

—சீனப் பழமொழி

90473

# அதிசிறந்த ஒரு இலங்கையரைப் பாராட்டுவோம்

—தாரகி
(ஐலன்ட் - 20-09-92)

இலங்கை அரசியலில் ஆரம்ப கட்டத்தில் அதன்மீது தனது செல்வாக்கைச் செலுத்திவந்த இந்தியாவின் போக்கை மட்டுப் படுத்த மேற்கொண்ட முயற்சிகளில் முக்கியமான பங்கை வகித்த திரு. திசு ஜெயக்கொடி அவர்களின் மறைவு 1984 ஆம் ஆண்டி லிருந்து இந்தியா இலங்கை உறவு எப்படியிருந்தது என்பதுபற்றி மீளாய்வு செய்யவேண்டிய கடப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

இப்படியான மீளாய்வில், இவர் வகித்த பங்கை மூன்று படிநிலைகளில் வைத்து விளக்கலாம். முதலாவதாக, மேற்கு ஜெர்மனியில் இலங்கைக்கான உயர் தூதுவராக விளங்கிய இவர் பின்னர் சென்னை உதவி உயர் தூதுவராக நியமிக்கப்பட்டமை வெளிநாட்டமைச்சின் ஆவணங்களின்படி இவர் ஒரு தூதுவராக மாத்திரம் இருந்தாரே அல்லாது, இவருக்கு வழங்கப்பட்ட மற்றைய பணிகள் அவற்றில் இடம்பெறவில்லை. இரண்டாவதாக, தமிழ் மக்களுடைய இனச்சிக்கலில் இந்தியா காட்டிய ஆதரவுக் கெதிராக வகுக்கப்பட்ட தந்திரோபாயங்களில் இவர் வகித்த பங்கு முக்கியமானது. இந்தியா வகுத்திருந்த திட்டங்களை முறியடிப்பதெப்படி என்பது அப்பொழுது முக்கியமாகவிருந்தது,

இவற்றிற்கு விடைகாண்பதே திரு. திச அவர்களுக்கு வழங்கப்பட்ட மற்றைய பணியாகும். 85 ம் 86 ம் ஆண்டுக்காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து திரு, ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களுக்கு இவரால் தன்கைப்பட எழுதியனுப்பப்பட்ட குறிப்புகள் அக்காலத்தில் இந்தியாவினதும் இலங்கையினதும் உறவில் நிலவிய நெருக்கடியான நிலையை அறியவிரும்பும் ஒருவருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கலாம். மூன்றாவதாக, ஜோர்ச் சிமைலி போன்ற மேதைகளைத் தோற்கடிக்கக் கூடிய வகையில் இவர் செயலாற்றியதே இவையாவற்றிலும் முக்கியமானதாக விளங்குகின்றது. அச்சம்தரும் பணிகளை மேற்கொள்வதில் மகிழ்ச்சியுறுபவர்களினதும், சமாதானத்தின் பக்கம் சாராதவர்களென தாங்கள் மேற்கொண்ட அடிப்படையான பணிகள் காரணமாக மற்றவர்களால் கண்டிக்கப்படுகிறவர்களினதும். உலகத்திற்கு சிறிதளவாகுதல் உண்மையைத் தெரியப்படுத்த வேண்டுமென்ற விருப்பமில்லாதவர்களினதும் வரிசையில் வைத்து எண்ணக்கூடியவர்களில் இவரும் ஒருவராவர்.

1987ம் ஆண்டில் இந்திய புலனாய்வுத்துறையினரை அதிர்ச்சிக்குள்ளாக்கிய உன்னிக் கிருஷ்ணன் விவகாரத்தில் இவரே முக்கியமான பங்கை வகித்தாரென்பதை ஒரு சிலரே அறிவர். இந்தியாவின் தென்பகுதியின் புலனாய்வுத்துறை இதன் காரணமாகச் சிலகாலம் சீர்குலைந்திருந்தது. இந்தியச் செய்தித்தாள்களில் இந்தவிடயம் திரித்து வெளிவந்தபோது, திரு. திச அவர்களின் பெயர் வெளிவரவில்லை. சென்னையிலுள்ள புலனாய்வுத் துறையின் மேலாளரையும் திரு. திச அவர்கள் வாங்கிவிட்டார் என்பதை சென்னையிலுள்ள தமிழ்த்தலைவர்களில் ஒரு பகுதியினரே அறிந்து கொள்ள முடிந்தது. இந்தியாவினதும் இலங்கையினதும் அரசியல் 83 ம் ஆண்டிலிருந்து 87ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எப்படி இருந்தது என்பதை எழுதப் புகுந்த இருவர், இந்தியாவில் கடமையாற்றிய வேளையில் நடந்த நிகழ்வுகளை திரு. திச அவர்கள் நேரடியாகக் கூறாவிடின், அது அர்த்தமுள்ளதாகவும் பொருள் உள்ளதாகவும் இருக்காதெனக் கருதினர். இந்த இருவரில் தன்னால் பெரிதும் மதிக்கப்பட்ட ஒருவரின் புத்திரரான ஒரு இந்தியப்பத்திரிகையாளரை இவர் சந்திப்பதற்குச் சம்மதித்தார். ஆய்வாளர் என்று கருதப்பட்ட உள்ளூர் வாசியான மற்றவரை அவர் சந்திக்க மறுத்துவிட்டார்.

இருப்பினும் இந்த விடயத்தைத் தன்னுடைய நீண்ட உரையாடல்களின்போது படிப்படியாக வெளியிடுவதற்குச் சென்ற ஆண்டு இறுதிப்பகுதியில் இவர் முடிவெடுத்தார், தன்

னுடைய பெயர் செய்தித்தாள்களில் இடம்பெறுவதற்கும் இவர் சம்மதித்தார். உலகில் மிகவும் ஆற்றல் வாய்ந்த ஒரு கரந்தடி அமைப்பைத்தான் உருவாக்கிவிட்டதாகப் பெருமைப்படுபவரும், தென் ஆசியப்பிராந்தியத்தில் மிகவும் ஆற்றல் வாய்ந்த புல னாய்வாளர் எனச் சென்ற ஆண்டு ஓய்வுபெறும்வரை மதிக்கப் பட்டவரும் மறைமுகமாக இருப்பவரும் பளையகாட்டைச் சேர்ந் தவரும் பிராமணப்பட்டருமான ஒருவர் யாருடனும் இந்த விட யம் சம்பந்தமாகப் பேசுவதற்கு முன் வந்தாலன்றி இலங்கை இனப்பூசலில் இந்தியாவின் தொடர்பைப்பற்றி திரு. ஜெயக் கொடி அவர்கள் கூறுபவை அர்த்தமில்லாதவையாயிருக்கும்.

1984-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பயிற்சியை முடித்துக் கொண்ட ஆயுதம் தாங்கிய தமிழ்க்குழுக்கள் மூலம் கரந்தடி நடவடிக்கைகளை வடக்கிலும் கிழக்கிலும் தீவிரப்படுத்த இந் தியா நினைத்திருந்த வேளையில், திரு. திச அவர்கள் இந்தியா வில் கடமையாற்ற ஆரம்பித்தார். ஆயுதம் ஏந்திய குழுக்களு டன் தொடர்பை ஏற்படுத்துவதே இவருக்கு வழங்கப்பட்ட முக் கிய பணியாகும். கொழும்புடன் எந்தவிதமான தொடர்பையும் வைத்திருப்பதற்கு இந்தக்குழுக்களுக்கு இடம்கொடாது, பொது மக்களுக்கு அழிவையும், படையினருக்கு இழுக்கையும் ஏற்படுத் துவதன் மூலம் இலங்கைக்கு நெருக்கடியை ஏற்படுத்தித் தனது செல்வாக்கைப் பிரயோகித்து இலங்கைத் தமிழ் மக்கள் சார் பாக இணக்கப் பேச்சுவார்த்தைக்கு இலங்கையை இணங்க வைப்பதே இந்தியாவின் முக்கிய நோக்கமாகவிருந்தது. இந்த வேளையிலேயே இந்தியாவின் பிடிக்குள் இருந்து ஆயுதம் தாங் கிய குழுக்களை அதன்பிடியிலிருந்து விடுவிக்கும் கடினமான பணியை இவர் மேற்கொள்ளவேண்டியிருந்தது. தமிழ்க் குழுக் களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட திரு. திச தான் பெற்ற தகவல்களைத் தன்கைபட எழுதிக் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். இவரது நடவடிக்கைகளில் சந்தேகமுற்ற இந்தியா வின் உள்நாட்டுப் புலனாய்வுத்துறையினர்(IB) இவரைக் கண் காணிக்கத்தொடங்கினர். இருப்பினும் இவரது ஆரம்ப நடவ டிக்கைகள் ஒன்றும் வெளிவரவில்லை. சென்னையிலுள்ள தாஜ் கொறமொண்டேல் என்ற விடுதிக்கு வெளியிலிருந்தே இவர் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இந்திய உள்நாட்டுப் புலனாய்வுத்துறையினரும், தமிழ் நாட்டுக்காவல்துறையிலுள்ள புலனாய்வுப்பிரிவினரும் இந்த விடு தியைக் கண்காணிக்க ஆரம்பித்தனர். தமிழ்ஈழ விடுதலைப்

புலிகளைத் தவிர மற்றைய எல்லாத் தமிழ்க்குழுக்களுடனும் திரு. திச தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த திரு. பாலகுமார் மற்றும், திரு. இரத்தின சபாபதி, ஈ. பி ஆர். எல். எப். இயக்கத்தைச் சேர்ந்த வரதராசப் பெருமாள், புளோட் இயக்கத்தைச்சேர்ந்த திரு. உமா மகேஸ்வரன் ஆகியோர் இவருக்குத் தெரிந்தவர்களுள் சிலராவர்.

பல இரகசியமான சந்திப்புக்கள் இந்தியாவுக்கு வெளியே ஒழுங்கு செய்யப்பட்டன. சுவிற்சலாந்து எல்லைக்கு அயலிலுள்ள ஜேர்மனி நாட்டிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் புளோட் இயக்கத்தைச் சேர்ந்த சேர்லி சந்தப்பா, திரு. லலித் அத்துலத்முதலி அவர்களைச் சந்தித்தது அப்படியான சந்திப்புக்களில் ஒன்றாகும். பிறாங்வேட்டிலும்(Frank Furt)மாலைதீவிலும் மற்றச் சந்திப்புக்கள் இடம்பெற்றன. சந்திக்கவிருந்த இடங்களின் பட்டியலில் சிங்கப்பூரும் குறிக்கப்பட்டிருந்தது.

ஆயுதம் தாங்கிய தமிழ் இயக்கங்களுடன் திரு. ஜெயக்கொடி அவர்களுக்கிருந்த தொடர்பு, அந்த நேரத்தில் தமிழ் இயக்கங்களுக்குள் மிகவும் பெரிதாகவும், பெரிதும் விரும்பப்பட்டதாகவும் விளங்கிய புளோட் இயக்கம் சம்பந்தமான இலங்கையின் கொள்கையில் பாரியமாற்றத்தை ஏற்படுத்தியது. சில தமிழ்க்குழுக்களைக் கலக்கமடையச் செய்யும் வகையில் இந்தத் தொடர்புகள் பற்றிய ஆவணங்களை 'றோ' கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்ள முடிந்தது. தமிழ்க் குழுக்களுக்குள் 1985-ஆம ஆண்டுப்பகுதியில் மிகவும் பெரிய குழுவாக விளங்கியதும், ஜே. வி. பி. யுடன் இணைய விரும்பியதுமான புளொட் இயக்கத்தை 'றோ'வுடன் திரு. திச அவர்கள் மூலம் பகைக்கச்செய்வதற்கான தனது முக்கிய நோக்கில் இலங்கை அரசாங்கம் வெற்றிகண்டது.

இலங்கை மேலாளர்களுடன் தாங்கள் நடாத்திய கலந்துரையாடல்களின் விபரங்களை இலங்கை அரசாங்கம் வேண்டுமென்றே இந்தியாவுக்கு வழங்கியதென சில பகுதியினர் அந்த வேளை கருதினர்.

புளொட் இயக்கத்தினருக்கென, 1985-ஆம் ஆண்டு ஆரம்பப்பகுதியில் வந்த சீனத்தயாரிப்பு எனக் கருதப்படும் பெரும் எண்ணிக்கையான படைக்கலன்கள் சென்னைத்துறைமுகத்தில் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து விடயங்கள் உச்சக்கட்டத்தை அடைந்தன.

25680



மற்றைய இயக்கங்கள் போல் விடுதலைப் புலிகள் சேர்ந்து கழுத்தறுக்கும் சுபாவமில்லாதவர்களென அந்தவேளையில் ''றோ'' கருதியதால் அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள ஆரம்பித்தது. தமிழ்க் குழுக்களுடன் திரு. ஜெயக்கொடி அவர்களுக்கிருந்த தொடர்புகளுக்காக மாத்திர மின்றி, சென்னையிலுள்ள இலங்கையின் சாதாரணமான உத வித்தூதுவர் என்ற நிலையில் அவரை 'றோ' மற்றும் இந்திய உள்நாட்டுப் புலனாய்வாளர்கள் நோக்காமைக்கு வேறு இரு முக்கியமான காரணங்களுமிருந்தன. தமிழ்நாட்டிலுள்ள முக் கிய அரசியல்வாதிகளுடனும், அரசாங்க மேலாளர்களுடனும், மற்றும் வர்த்தகர்களுடனும் இவர் ஏற்படுத்திக்கொண்ட தொடர்பு முதலாவது காரணமாகும்.

திரு. கருணாநிதியவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களில் ஒருவரான திரு. நாஞ்சில் மனோகரனுடன் இவர் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொண்டதன் காரணமாக, தி. மு.க. தலைமைப்பீடத்துடன் இவர் மேலும் பேசுவதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கினார். இந்த வாய்ப்பை ஏற்படுத்த இவர் பெரும் விலையைச் செலுத்தவேண்டியிருந்தது. இருப்பினும், திரு. நாஞ் சில் மனோகரன் அவர்கள், திரு. திச அவர்களின் நீண்ட நாளைய நண்பர்களில் ஒருவராகவிளங்கினார். எம். ஜி. ஆர். அரசாங்கத் தின் காவல்துறையைச் சேர்ந்த முக்கிய மேலாளர் ஒருவரும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெருந்தொகையான பணத் தைப் பெற்றபின் அவருடன் இணைந்து செயலாற்றியதாகச் சந்தேகிக்கப்பட்டது.

ஈழம் என்ற இலட்சியத்தை ஒடுக்குவதை நோக்கமாகக் கொண்டு, திரு. திச அவர்கள், சிங்கப்பூருக்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டதாக, அறிக்கையொன்றை வெளியிடுமாறு 1986-ம் ஆண்டு இறுதிப்பகுதியில் சில தீவிரவாதத் தலைவர்களை இந் திய உள்நாட்டுப் புலனாய்வார்கள் தூண்டினார்கள்.

இந்தியாவின் தென்பகுதியில் 'றோ' மேற்கொண்ட உணர்ச்சியைத்தூண்டும் விடயங்கள் பற்றிய தகவல்கள் இலங் கைக்குக் கிடைத்துவந்ததே அடுத்த பாரதூரமான விடயமாகும். பயிற்சிக்குப் பொறுப்பாகவிருந்த 'றோ' வைச்சேர்ந்த மேலா ளர்களின் நிழற்படங்களும், அவர்களின் பெயர்களும், தமிழ்க்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை

குழுக்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்ட தங்ககங்களின் விபரங்களும் 'றோ'வின் கோப்புகளிலிருந்து பெறப்பட்டிருந்தது.

சென்னையிலுள்ள 'றோ'வின் தலைமைப் பொறுப்பாளர் அமெரிக்க புலனாய்வுத்துறையினருக்காகச் செயலாற்றினார் (CIA)என்ற குற்றச்சாட்டின் மீது கைதுசெய்யப்பட்டபின் அவர் மீதே எல்லாக் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன. சி. ஐ. ஏ. எனப்படும் அமெரிக்கப் புலனாய்வுத்துறையினருக்காக வானூர்தியில் கடமையாற்றும் பணிப்பெண் ஒருவர் வைத்த சூழ்ச்சி வலைக்குள் திரு. உன்னிக்கிருஷ்ணன் அகப்பட்டுவிட்டார் என அப்பொழுது பேசப்பட்டது. திரு. தோமஸ் ஆபிரகாம்(மூத்தவர்) அவர்கள் இலங்கையில் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றியவேளையில் அரசியல் பிரிவின் முதலாவது செயலாளராக அவரின் கிழ் திரு. உன்னிக்கிருஷ்ணன் கொழும்பில் கடமையாற்றினார்.

திரு.திச ஜெயக்கொடி, திரு. உன்னிக்கிருஷ்ணனுக்கு வழங்கிய முதலாவது அன்பளிப்பு மெக்சிக்கோ நாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு மேலங்கியாகும். அதன் பின் அவருக்குப் பல அன்பளிப்புக்கள் செய்யப்பட்டதுடன் அவர் நன்கு உபசரிக்கப்பட்டும் உள்ளார். ஒரு அழகிய பாடசாலை அதிபரையும் திரு. உன்னிக்கிருஷ்ணன் கொழும்பில் சந்தித்து வந்துள்ளார். இலங்கையின் தலைநகரில் விரித்த வலைக்குள்ளேயே இவர் படிப்படியாக விழ ஆரம்பித்தார். இப்பொழுது இவர் சிறையிலிருந்து வெளியேறிவிட்டார்.

இந்திய இலங்கை உடன்படிக்கையின் பின் திச கொழும்புக்கு வந்தார். உடன்படிக்கை சம்பந்தமான அரசியல் மற்றும் நிர்வாக ஒழுங்குகளில் இவர் ஒரு முக்கிய பங்கை வகிப்பதை இந்தியா விரும்பாததால், இவரை மாகாணசபைகளின் அமைச்சின் செயலாளராக திரு. ஜே. ஆர். நியமித்தார்.

நாரகென்பிட்டியிலுள்ள திரு. திச அவர்களின் வீட்டில் அவரை ஒழுங்காகச் சந்தித்து வந்த தமிழர்களில் திரு. பெருமாளும் ஒருவராவர். இவரே பின் வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரானார். இவர் திரு.திச அவர்களால் எப்பொழுதும் நன்றாக உபசரிக்கப்பட்டு வந்தார். தமிழ்ச்சமூகம் சம்பந்தமாக தாங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு பணியிலும் திரு. திச

தொடர்பு கொண்டிருப்பதை இந்தியர்கள் விரும்பவில்லை. இலங்கைமீது இந்தியாவுக்கிருந்த செல்வாக்கை வெகுவாகக் குறைப்பதற்கு இவரே காரணகர்த்தாவாக விளங்கியவர் என்று இவரை இந்தியர்கள் கருதினர். இவர்களுடைய இந்தக்கருத்து ஒரு வேளை உண்மையாக இருக்கக்கூடும்.

25 பேரின் பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரித்த திரு. திச ஜெயக்கொடி அவர்கள் அதைத் தன்நபர் ஒருவரிடம் கொடுத்து, தான் இறந்து தனது ஈமக்கிரியைகள் முடிவுற்றபின், அவர்கள் எல்லோரும் அந்த நண்பரின் வீட்டில் ஒன்றுகூடி, தான் இறப்பதற்கு முன் வாங்கியகுடிவகையை தனது நினைவாகப்பருகி மகிழவேண்டுமென்ற வேண்டுகோளைத் தான் இறப்பதற்குச் சில நாட்களுக்குமுன் விடுத்திருந்தார்.

இன்றும் மது அருந்தாதவரும், விடுதலைப்புலிகளின் கிளை ஒன்றை லண்டனில் ஆரம்பித்த ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவரும், இந்த 25 பேரில் ஒருவராவர். பெரும் சூத்திரதாரியான இந்த மனிதரை பாராட்டாமல் இருக்க முடியாது.

★ ★ ★

---

**தொங்கி ஆடி**

சுவர்க் கடிகாரத்தில் இடமும் வலமுமாக ஆடிக் கொண்டே இருக்கும் உறுப்பை ''பெண்டுலம்'' என்று சொல்லுகிறோம்.

ஆனால் —

நூறு ஆண்டுகளுக்கு முன்பே (1889ல்) அதற்கு ''தொங்கி ஆடி'' என்ற நல்ல தமிழ்ச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தச் சொல்லை இனி நாமும் பயன்படுத்தலாமே!

*—உவமைக் கவிஞர் சுரதா*
*ராணி 13-9-92*

---

# புதிய உலக ஒழுங்கும், முஸ்லிம் உலகமும்

*(ஐலண்ட் 3-10-92)*

★ ★

(பாராளுமன்ற உறுப்பினரும், நீதி, உயர்கல்வி மந்திரியுமான திரு. ஏ. சி. எஸ். கமீத் அவர்கள் 29-9-92 அன்று கொழும்பில் நடைபெற்ற உலக முஸ்லிம் கொங்கிரசின் 10வது மாநாட்டில் ஆற்றிய பேருரையிலிருந்து சில பகுதிகள்.)

சிறிலங்காவுக்கும் முஸ்லிம் உலகத்துக்குமிடையே இருந்து வரும் உறவு, சிலவேளைகளில் ஏற்பட்ட இன்னல்களுக்கு நடுவிலும் எப்பொழுதும் ஆக்கபூர்வமானதாகவும், ஆதரவாகவும், சிநேகபூர்வமாகவும் இருந்து வருகிறது. சிநேகபூர்வமும், நல்லுறவும் இரு பக்கங்களின் ஒத்துழைப்பில் தங்கியிருக்கின்றது. முஸ்லிம் நாடுகள் எங்கள் நாட்டுடன் சினேகபூர்வமான நல்லுறவைக் கொண்டிருக்கின்றன என்பதை என்னால் ஆணித்தரமாகக் கூறமுடியும். நீங்கள் எல்லோரும் இங்கு வந்து இக்கூட்டத்தில் கலந்துகொள்வதில் இருந்து இந்த இருபக்க நட்புறவு தெரிகின்றது.

அனைத்துலக ரீதியாகப் புதிய உலக ஒழுங்கொன்றைக் கட்டியெழுப்புவதற்கு இப்பொழுது முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. ஒரு புதிய உலக ஒழுங்குமுறை எங்கள் காலத்துக்கு மாத்திரம் தேவைப்படுவதாக இருக்காமல் எந்தவொரு எதிர்ப்பு ஆற்றலாலும் அழிக்கப்படமுடியாமல் தாக்குப்பிடிக்கக்கூடியதாக உலக சமாதானம், உலக வளர்ச்சி, உலக நன்மை என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் எக்காலத்துக்கும் ஏற்றதாகக் கட்டியெழுப்பப்படுதல் வேண்டும்.

முதலாவது உலகப்போருக்குப் பின்னரும், இரண்டாவது உலகப்போர் முடிந்த பின்பும், அத்தோடு இன்றுவரைக்கும் பழைய ஒழுங்குமுறை ஒழிந்துவிட்டது என்றும், புதிய ஒழுங்குமுறையொன்றைக் கட்டியெழுப்ப எத்தனிக்கப்படுகின்றதென்றும் கூறுவதில் உண்மை இருக்கின்றது. முன்னைய காலத்திலும் பார்க்க இக்காலகட்டத்தில் இது உண்மையானதென்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.

நாங்கள் புதிய நூற்றாண்டில் காலடி எடுத்து வைப்பதற்குள்ளோம். இந்தப் புதிய நூற்றாண்டை முன்னோக்கிச் செல்லும்பொழுது, எங்கள் கோளானபூமியில் இருக்கும் ஒவ்வொரு நாடும் ஒன்றிலொன்று கூடுதலாகத் தங்கியிருக்கின்றனவென்பதை எங்களால் காணமுடிகின்றது. இந்த முன்றேற்றத்துக்கு அநேக காரணிகள் உள்ளன. கடந்த சிலபத்தாண்டுகளாக நாங்கள் நினைத்துப்பார்க்கமுடியாத வகையில் அறிவியலிலும், தொழில்நுட்பத்திலும் புரட்சி ஏற்பட்டுள்ளது. புதிய சமூக, அரசியல், பொருண்மியம் என்பன இப்புரட்சிக்குத் தங்கள் பங்குகளை வழங்கியுள்ளன. அதிகளவு கலந்துரையாடல்களும், நாடுகள் ஒன்றிலொன்று தங்கியிருப்பது அதிகரித்திருப்பதும், நாடுகளுக்குள்ள இடைவெளிகள் குறைந்திருப்பதும், நாடுகளுக்கிடையிலான எதிர்ப்புணர்வுகள் குறைந்திருப்பதும் உலகத்தை உண்மையில் ஒரு சிற்றூராக்கிவிட்டது.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் எங்கள் கண்களுக்கு மூன்பாகவே ஏற்பட்ட பாரிய மாற்றங்கள் புதிய உலக ஒழுங்கொன்றை விரைவாகக் கட்டியெழுப்பவேண்டுமென்ற எண்ணத்தைத் துரிதப்படுத்தின.

சோவியத் ஒன்றியமும், கிழக்கு ஐரோப்பிய அரசுகளும் வீழ்ச்சியுறும் என்னும் நிகழ்ச்சியை எந்தவொரு அரசியற் பகுப்பாய்வாளர்களும் முன்கூட்டிக் கூறவில்லை. எச்சக்திக்கும் எதி

ராகத்தாக்குப்பிடிக்கும் என்றும் எதிர்காலத்துக்கு முன்மாதிரியாக இருக்குமென்றும் ஒரேமாதிரி அந்நாட்டின் நண்பர்களாலும், எதிரிகளாலும் கூறப்பட்ட அரசியல் உண்மைகள், பொருண்மியக்கோட்பாடுகளும், சமூக வளர்ச்சித் திட்டங்களும் ஒரே நொடியில் அற்றுப்போய்விட்டன. இந்தக் கற்பனை செய்யப் படமுடியாத ஓர் குலைவு உலகின் வேற்று நாட்டுத் தலையீட்டாலோ அல்லது சூழ்ச்சியாலோ சீர்குலைக்கப்படவில்லை. ஆனால் இச்சீர்குலைவு உள்நாட்டழிவுகளினால் ஏற்பட்டதாகும். எப்படியாயினும் அக்கோட்பாடுகள் இன்று பழைய வரலாறாக மாறிவிட்டன.

இரு கோட்பாடுகள் அல்லது இருநாடுகள் உலகம் முழுவதிலுமுள்ள நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தியதுடன் அவைகளின் தலைவிதியை தீர்மானிப்பவையாகவும் இருந்துவந்தது. இரு பிரிவுகளாக இயங்கிவந்த இரு கோட்பாடுகளைக் கொண்ட உலகத்தையும் இச்சீர்குலைவு இல்லாமற் செய்தது.

இந்த இரு பிரிவுகளும் தங்களிடமுள்ள அணுவாயுதங்களைக் காட்டியும் போர்ப்பயமுறுத்தல் செய்தும், கெடுபிடிப் போரிலீடுபட்டும் உலக நாடுகளில் சமாதானத்தையும், உறுதிப்பாட்டையும் சீர்குலைத்துவந்தன. ஆனால் எல்லோரையும் பயமுறுத்திவந்த அணு ஆயுத அச்சுறுத்தல் இப்போதில்லாது போனது உலகத்துக்கு ஒரு ஆறுதலாகும்.

ஆனால் தற்பொழுது இந்த இடத்துக்கு வந்த ஒரு தனியரசு, உலக விவகாரங்கள் மீது தனது முழு செயலுரிமையையும் செலுத்தும் ஒரு நாடாகத்திகழ்ந்து வருகின்றது.

உலக விடயங்களில் இது ஒரு பக்கநோக்காகும். சோவியத் ஒன்றியம் சிறு சிறு நாடுகளாகப் பிரிந்ததை தொடர்ந்து உலகம் முழுவதிலுமுள்ள நாடுகளும் ஆற்றல்களும் விரைவாகப் புதிய கட்டமைப்பை அமைத்தன. உலக வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவகையில் விரைவாக இது நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகள் நீதி, நியாயம், சனநாயகம் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய அமைப்பை உருவாக்குவதற்கு உலக மக்கள் சமுதாயத்தைக் கட்டாயப்படுத்தியது.

எங்கள் கண்களுக்கு முன்பு இவ்வுலகத்தில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள் நம்பிக்கை அளிப்பனவாக இல்லை.

முதலாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ''போரை முடிவுக்குக் கொண்டுவர ஒரு போர், ''சன நாயகத்துக்குப் காப்பாக உலகை ஆக்குவது, சிறுபான்மை இனங்களின் சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிப்பது, தன்னாட்சி உரிமையை ஏற்பது ஆகிய முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இவை களெல்லாம் சிறந்த கோட்பாடுகளாகும். ஆனால் இவைகள் எப்படி நடைமுறைப்படுத்தப்பட்டன.

வேர்செயில்ஸ் (Versailles) உடன்படிக்கை மூலம் உலகில் உருவாக்கப்பட்ட ''அனைத்துலக சங்கம்'' (League of Nations) சுதந்திரமான, தங்களைத் தாங்களே ஆளுகின்ற நாடுகள் எதிர் பார்க்கும் வகையில் உலகிலுள்ள நாடுகளுக்கிடையே ஒத்துழைப் பையும், அறிவுத்துறையையும் ஆக்கத்துறையையும் மேம்படுத்து வதற்காக நீதியான முறையிலும், கௌரவமான முறையிலும் உறவுகளை உருவாக்கி வருங்காலத்தில் போர்கள் நடக்காது தடுப்பதைத் தனது நோக்கமாகக் கொண்டிருந்தது.

அந்தக்காலத்திலிருந்த அமெரிக்க சனாதிபதி திரு.வூட்றோ வில்சன் (Woodraw Wilson) அவர்கள் நல்நோக்கங்கொண்ட ஒரு சிறந்த தலைவராக இருந்திருக்கலாம். ஆனால் நடைமுறை யில் இந்தச்சங்கம், அக்காலத்தில் வல்லமைபொருந்திய நாடுகளா கவிருந்த இங்கிலாந்தினதும், பிரான்சினதும், கைப்பொம்மையாக இயங்கியதோடல்லாமல், அக்காலத்தில் நிலவிவந்த ஆண்டான் அடிமைக் கொள்கைகளையும் கடைப்பிடித்துவந்தது.

உலக நாடுகளுக்கிடையே நீதியும், கௌரவமும் நிலவும் எனப்பேசப்பட்டு வந்தது. ஆனால் ஒரு சிறந்த வரலாற்றாசிரியர் சுட்டிக்காட்டியதுபோல் தற்பொழுது உலகநாடுகளிடையே நில விவரும் உறவுகள் நீதி, கௌரவம் என்பவற்றின் அடிப்படையில் தானா அமைந்திருக்கின்றன என்பது தெளிவாக்கப்படவில்லை.

தோற்கடிக்கப்பட்ட துருக்கியிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலப்பரப்புக்களை மேற்பார்வையிடும் உரிமை நேசநாடுகளின் கூட்டணிக்கு வழங்கப்பட்டன. அவர்கள் தங்களுக்குச் சிறந்த பெயர்களையும் சூட்டிக்கொண்டனர். அவர்கள் தங்களை பொறுப்பாளிகள் எனக்கூறிக்கொண்டார்கள்.

முதலாம் உலகப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் பிரித்தானியர்கள், அரேபியா, பாலஸ்தீனம், சிரியா வரையுள்ள நாடுகளை உள்ளடக்கிய ஐக்கிய அரபு அர

சொன்றை உருவாக்கித்தருவதாக வாக்களித்து அரேபியர்கள் எல்லாரையும் ஒட்டமான் பேரரசுக்கெதிராகக் கிளர்ந்தெழச் செய்தார்கள். கேணல் ரி. ஈ. லோறன்ஸ் அவர்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட இரு கடமைகளான ஒட்டமான் பேரரசைச் சீர்குலைப்பதையும், அரேபியர்களுக்குத் துரோகமிழைப்பதையும் சிறப்பாகச் செய்துமுடித்தார்.

இது இப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், இதே நிலப்பரப்புக்களைத் தங்களிடையே பகிர்ந்துகொள்வதற்காகப் பிரித்தானியாவும், பிரான்சும் ஒரு இரகசியத்திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருந்தன. மதிப்பற்ற சைக்ஸ் பிக்கொட் (Sykes-Picot) உடன்படிக்கையைப்பற்றி நாம் கேள்வியுற்றிருக்கின்றோம். பின்னொரு காலத்தில் பிரித்தானியாவின் பிரதமமந்திரியாக வந்த திரு. ராம்சே மக்டோனால்ட் அவர்கள் இந்த முழு விவகாரத்தையும் ஒரு இரண்டகச் செயல் என இழித்துரைத்தார்.

மீண்டும் இப்படிப்பட்ட துரோகச் செயல்கள் நடைபெறாதவாறு முஸ்லிம் சமூகம் விழிப்புடனிருக்கவேண்டும் என்பதற்காக இவையெல்லாவற்றையும் நினைவுபடுத்தவேண்டியுள்ளது.

தற்பொழுது நடைபெற்றுவரும் மாற்றங்களின் கீழ் ஆதிக்கஞ்செலுத்தும் கொள்கைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் நீலக்கொடியின் கீழ் குறுகிய நோக்கங்கள் கொண்ட தேசிய நலன்களை அல்லது அரசியல் ஆதிக்கத்தைச் செயற்படுத்துவதற்கு எதிராக ஏற்கனவே கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

பல முஸ்லிம் நாடுகள் பிறநாடுகளின் அச்சுறுத்தலை எதிர்நோக்குவதால் மற்றெல்லா நாடுகளையும் விட முஸ்லிம் உலகம் புதிய உலக ஒழுங்கு ஒன்றை உருவாக்க உதவவேண்டும் என்று எனது மனதில் தோன்கின்றது. சிலுவைப்போர்கள் நடந்த காலத்திலிருந்த மன ஓர்மம் மீண்டும் தலைதூக்குவதாக சந்தேகப்பட இடமுண்டு.

எதிர்காலத்தில் தங்களை வழிநடத்திச் செல்வதற்காகத் திட்டமிட்டு, சீர்செய்து புதிய வழிமுறைகளைக் காண்பதில் முஸ்லிம்கள் சிறிதளவாகுதல் உள்நோக்குடன் ஈடுபடவேண்டும்,

இது நன்மை பயக்கக்கூடியதா? நம்பிக்கையைத் தோற்றுவிக்குமா?

முதலாவது உலகப் போரின் முடிவு ஏகாதிபத்தியத்தின் தாக்கங்களை நேரடியாக முஸ்லிம் நா‍டுகளில் கொண்டுவந்தது. இரண்டாவது உலகப்போரின் முடிவு கூடுதல் அழிவைக் கொண்டு வந்தது.

''ஒரு பிசாசு தான் நீங்கிச் செல்லும்நேரம் வரும்போது, போவதற்கு முன்பு பாத்திரங்களை உடைத்துவிட்டுச் செல்லும்'' என்னும் ஒரு முதுமொழி நாங்கள் வாழும் உலகில் நிலவி வருகின்றது. அதேபோன்று முஸ்லிம் நர்டுகளைக் கொண்ட மேற்காசியாவில் பொறுப்பாளர்களான அனைத்துலகச் சங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்கள் தாங்கள் அப்பகுதியை விட்டுச் செல்லும்போது ''இஸ்ரேல்'' என்ற நாட்டை உருவாக்கிச் சென்றார்கள். இது இரண்டாவது கீழ்த்தரமான இரண்டகச் செயலாகும்.

இதற்குப் பின்னர் அண்மைக்காலத்தில் இந்த நிலப்பரப்பு முழுவதிலும் பெருமளவு வெளிநாட்டு படையம் நிலைகொண்டுள்ளது.

புதிய முஸ்லிம் நாடுகள் தங்களுடைய அரசையும், தேசிய எல்லைகளையும், இறைமையையும் பாதுகாப்பதற்கு இப்பொழுது கவனமாக இருக்கவேண்டிய நிலையிலுள்ளன என்பது எங்களுக்குத் தெரியும், அனைத்துலக வாழ்க்கையின் உண்மை நிலை இதுவாகும். இந்தச் சர்ச்சைக்கப்பாற்பட்ட உண்மையைக் கருத்திற் கொண்டே எந்தவொரு முன்னேற்றகரமான நடவடிக்கையிலும் இறங்கவேண்டும்.

ஒரு சகோதரன் அடுத்த ஒரு சகோதரனுக்கெதிரான சுடுகலன்களை ஏந்துவது போன்று கடந்த பத்தாண்டுகாலத்தில் முஸ்லிம் நாடுகள் தங்களுக்கிடையே நெருக்கடி நிலைகளைத் தோற்றுவித்ததை நாங்கள் துயரத்தோடு பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையிலிருந்துள்ளோம். இந்த நிலைமை ஏற்படும் போது முஸ்லிம் உலகம் உதவியற்று பார்த்துக்கொண்டிருப்பது பரிதாபத்திற்குரியதாகும். வெளியார்களின் உதவியில்லாமல் தங்களுடைய நாடுகளிலுள்ள நிலைமைகளைச் சீர்செய்யவேண்டிய தன் அவசியத்தை இது காட்டுகின்றது.

ஆப்கானிஸ்தானிலிருந்து நைல்நதிவரையுள்ள முழு நிலப்பரப்பையும் சர்ச்சைக்குரிய நிலப்பரப்பென சனாதிபதி ஜிம்மி கார்ட்டர் அரசின் தேசிய பாதுகாப்பு அமைச்சின் இராசாங்கச்

செயலாளரான சிக்னியூ பிறெசெசின்ஸ்கி (Zbignew Brezezinski) அவர்கள் சிறிது காலத்துக்கு முன்னர் எடுத்துக் கூறினார். திரு. சா (Shah) ஆட்சியில் இருந்து தூக்கி எறியப்பட்டபோது இது கூறப்பட்டது என நினைக்கிறேன்.

திரு. பிறெசெசிஸ்கி அவர்கள் சர்ச்சைக்குரிய நிலப்பரப்பு என்று கூறியதை நாங்கள் மாற்றியமைத்து நம்பிக்கை ஒளிவீசச் செய்யவேண்டும். இதுதான் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் செயலாகும்.

மத்திய ஆசியாவில் புதிதாக விடுதலை பெற்றுள்ள அஜர் பைஜான், தாஷிக் கிஸ்தான், கார்க்கிசியா, கஜாகஸ்தான், தர்க் கம்ஸ்தான், உஜிபெஸ்கிஸ்தான் ஆகிய நாடுகளும் ருசியாவின் பெரும் நிலப்பரப்பில் பரந்துள்ள மற்ற நாடுகளும் எப்படி சனநாயகத்தைக் கட்டியெழுப்புகின்றனவோ அதிலேயே இந்த நம் பிக்கை ஒளி தங்கியுள்ளது. அதுவும் ஏனைய முஸ்லிம்நாடுகள் தங்கள் எதிர்காலத்தை எப்படி மாற்றியமைக்கின்றார்கள் என் பதிலேயே தங்கியுள்ளது.

இந்தப் புதிய காரணிகள் பயனாக மத்திய ஆசியா விலுள்ள முஸ்லிம் நாடுகள் மீண்டும் இஸ்லாமிய உலகத்துடன் சேருவதால், எங்கள் காலத்து முஸ்லிம் சிந்தனையாளர்களான ஜமாலுத்தீன் ஆப்கானி Jamaluddin Afghani) தொடக்கம் அல் லாமா இக்பால் (Allama Iqbal) வரையுள்ள பெரியோர்களின் குறிக்கோள்கள் காட்டிய சுதந்திரமான இறைமையுள்ள முஸ்லிம் நாடுகள், சுதந்திரமான பொதுநலவாய நாடு, நாடுகளின் கூட்ட மைப்பை அமைக்கும் புதிய பாதையிற் செல்ல வாய்ப்புண்டு.

இஸ்லாமிய கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த நீதி, சுதந்திரம், சமத்துவம், சனநாயகம் ஆகியவைகளைக் கொண்டதாக இந்தக் கட்டமைப்பு இருத்தல் வேண்டும். இது இரண்டு விதமான பலாபலன்களைத்தரும். முதலாவதாக, இது முஸ்லிம் நாடுகளுக்கிடையிலும், சமூகங்களுக்கிடையிலும் சமூக நீதியையும், சனநாயகத்தையும் பலப்படுத்தும். இரண்டாவதாக மேலாதிக்கமற்ற, சுரண்டலற்ற, பாகுபாடற்ற உறவைக்கொண்ட ஒரு புதிய ஒழுங்குமுறையை உருவாக்க உதவும். எனினும் புதிய உலக ஒழுங்கானது வடக்குத்தெற்கு வேறுபாடுகளை நீக்கி, வறு மையை ஒழிப்பதுடன் வளர்ச்சிக்கும் சுற்றாடல் சூழலுக்குமிடை யில் ஏற்ற உறவுகளை உருவாக்கக் கூடியதாகவும், உலகிலுள்ள மிகப் பெரும்பான்மையான மக்களால் ஏற்றுக்கொள்ளத்தக்க தாகவும் இருத்தல் வேண்டும்.

முஸ்லிம் உலகில் மறுமலர்ச்சி தோன்றியுள்ளது. எவர் எப்படிக்கூறினாலும், சிக்கலிலுள்ள நிலப்பரப்பு எனத் திரு. பிறேசெசின்ஸ்கி அவர்கள் கூறிய கூற்று அமெரிக்காவினால் தோற்றுவிக்கப்பட்ட எதிர்ப்பொருளான கருத்து என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அது ஒரு தவறான கண்ணோட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட முடிவாகும். இஸ்லாம் மதத்திற்கு எதிரானவர்கள் கூறுவதுபோல் இஸ்லாம் மதத்தின் மறுமலர்ச்சி என்பது உறுப்புத்துண்டிப்பு, கல்லால் எறிந்து சாவை நிறைவேற்றுதல் பெண்களுக்கான ஆடையணிக்கட்டுப்பாடு எனக்கூறமுடியாது. இது பலதரப்பட்ட கோணங்களில் பார்க்கவேண்டிய பல விடயங்களைக்கொண்டது. முஸ்லிம் உலகத்துக்கும், மேற்கு நாடுகளுக்குமிடையில் இதன் உண்மை நிலைபற்றி கருத்துவேறுபாடுகள் உள்ளன. குடியேற்றவாத(காலனித்துவ) ஆட்சியால் மேற்குலகு குறித்து முஸ்லிம் நாடுகள் கொண்டிருக்கும் கடும் கருத்துக்களை மதங்களிடையே உள்ள வேறுபாடு என மேற்குலகு காட்ட முயல்கிறது. நீண்டகாலமாக முஸ்லிம் உலகம் அவமதிக்கப்பட்டுவந்ததே இதிலுள்ள குறைபாடாகும். அதற்கும் மேலாக முஸ்லிம் உலகத்துக்கு மேற்குநாடுகள் வழிகாட்டுகின்றன. ஆதலால் கௌரவம், தனித்தன்மை, இறைமை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின்மேல் எங்களுக்கொரு பேரவாத்தோன்றியுள்ளது.

''இஸ்லாமிய மதம் ஏன் கட்டுப்பாடற்றதாக இருக்கவில்லை? வணக்கத்துக்குரிய முகம்மது நபி(சல்)அவர்கள் கூறிய வார்த்தைகள் எல்லாச்சமயத்திலும் பார்க்கக்கூடிய சமத்துவம் இஸ்லாம் மதத்தின் அடிப்படைக் கொள்கையாகவிருப்பதை வெளிப்படுத்துகின்றது. பெரும்பாலான மதங்கள் மதகுருமாருக்கு அளித்த உன்னத நிலை காரணமாகக் கடவுளின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்ட மக்களுக்காக, பாதிக்கப்பட்ட மக்களுக்காக இஸ்லாம் மதம் பல நூற்றாண்டு காலமாகப் பலமாகக் குரல் கொடுத்துவந்துள்ளது...'' என ஒரு மேற்குலகப்பகுப்பாளர் அண்மையில் எழுதியுள்ளார்.

என்னுடைய இறுதிப் பகுப்பாய்வின்படி இஸ்லாமிய கோட்பாட்டுக்கு நெருங்கிய அரசியலமைப்பு சனநாயக அரசியலமைப்பாகும்.

இஸ்லாமிய மறுமலர்ச்சி பற்றிய விவாதங்கள் முடிந்த பின்னர், நீடித்திருந்துவரும் இஸ்லாமியக் கோட்பாட்டிலமைந்த நீதி, சுதந்திரம், சமவுரிமை, மனிதநேயம், சனநாயகம் ஆகிய

வைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென நான் நம்புகின்றேன். மனிதகுல வளர்ச்சியில் இஸ்லாம் மதத்தை முன்னோடியாக வைக்கும் கோட்பாட்டுக்கு இது வழிகாட்டும்.

பொஸ்னியா — கேர்சோகோவினா என்ற நாட்டின் முழுக் குடிமக்களான முஸ்லிம்கள், பழையநாசிகள் தங்கள் கடைசிக் காலத்தில் நடத்திய கேடுகெட்ட செயலுக்கு ஒப்பான அழிவுக்கும், கொடூரத்தனத்துக்கும், வன்செயலுக்கும் உள்ளாவதை யிட்டு எனக்கு ஆத்திரமும், துக்கமும் வருகின்றது. உலகளாவிய கண்டனத்துக்கு நடுவிலும் அதற்குச் செவி சாய்க்காமல் இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இச்செயலால் முழு உலகமும் பயமுறுத்தப்பட்டு நடப்பதை பார்த்திருக்கும் நிலைக்குத்தள்ளப் பட்டிருப்பது எனக்கு புரியாத புதிராகவே இருக்கின்றது. இது மாத்திரமல்ல, இதற்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு இச்செயலைச் சீர்செய்யக்கூடியவர்கள் ஏன் அந்நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதும் எனக்கு விளங்காதிருக்கிறது.

லண்டனிலும், ஜெனிவாவிலும் மாநாடுகள் நடத்தப்பட்டன. ஐக்கியநாடுகள் சபையில் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் இந்த இன்னலுக்குட்பட்ட பொஸ்னியமக்கள் கொலைசெய்யப்பட்டே வருகின்றார்கள்.

இப்படியான செயல்கள் நடைபெறாத காலங்களிலேயே மனிதநேயத்தையும், அனைத்துலக சட்டங்களையும் கடைப்பிடித்துத் தவறுசெய்பவர்களைத் தண்டிப்பதற்கு முன்னிற்பவர்கள் எனப்படுவோர் பொஸ்னிய முஸ்லிம்களுக்கெதிரான மிலேச்சத் தனமான வன்செயல்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் எனக் கேள்வி எழுப்பப்படுகின்றது. இது நியாயமான கேள்வியாகும்.

அனைத்துலக மக்களோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையோ எதுசரி எதுபிழை என்பதைத் தீர்மானிப்பதற்கு இரு விதமான கோட்பாடுகளை வைத்திருக்கின்றார்களா எனக் கேள்வி எழுப்புவதற்கும் நியாயம் இருக்கின்றது.

ஐரோப்பாவின் நடுவில் ஒரு முஸ்லிம் நாடு இருக்கக் கூடாதென்ற கோட்பாட்டின்படி இனச்சுத்திகரிப்பு என்ற போர் வையில், இங்குவாழும் முஸ்லிம் மக்களை அழிப்பதற்குச் சேர்

பிய மக்களுக்குப் பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் உலகின் பல பாகங்களில் தோன்றியுள்ளது.

பொஸ்னியாவில் நடைபெற்றுவரும் சிக்கலுக்கு மனிதாபிமான முறையில் மட்டும் நடவடிக்கை எடுப்பது போதாது. திட்டமிட்டு அழிக்கப்பட்டுவரும் இந்த மக்களை அனைத்துலக மக்கள் காக்காதுவிட்டால் அல்லது சட்டப்படி தங்களது கடமையைச் செய்ய விரும்பாவிட்டால், தங்களையும், தங்களுடைய எஞ்சியுள்ள நாட்டையும் காப்பதற்கு பொஸ்னிய முஸ்லிம் மக்களுக்கு படைக்கலன்கள் தரப்படவேண்டும்.

இப்பொழுது பொஸ்னியா ஒரு இறைமையுள்ள நாடு. ஒரு இறைமையுள்ள நாடு தாக்கப்படுகின்றது. அதன்மூலம் அனைத்துலகச் சட்டங்கள் மீறப்படுவது தெளிவாகத் தெரிகின்றது. ஆகவே அனைத்துலக மக்களும் ஐக்கிய நாடுகள்சபையும் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வன்கவர்வின் மூலம் யாரும் பலன் பெறுவதைத் தடுக்கவேண்டும் என நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். இதையாரும் தட்டிக்கழிக்கக்கூடாது.

சேர்பிய கறுப்புக்கைகள் ஆஸ்திரிய அரசனான பெர்டினன்ட் அவர்களை(Arch Duke Ferdinand)சரயேவோ(Sarajevo) வில் வைத்துக் கொலைசெய்ததனால் முதலாவது உலகப்போர் மூண்டதென்பதை நாம் மனதில் வைத்திருக்கவேண்டும். அதே கறுப்புக் கைகள்தான் தங்கள் கைவரிசையை இப்போது காட்டி வருகின்றன.

இந்தக்கொலைகள் மேற்குலக நாடுகளின் அரசியல் போக்கில் தாக்கங்களை ஏற்படுத்தாமல் இருக்கலாம்.

ஆனால் நாங்கள் ஒன்றை மறக்காது நினைவில் வைத்திருக்க வேண்டும். அதாவது இந்த இக்கட்டான நிலையில், பொஸ்னிய முஸ்லிம்கள் இன்னல்படும் வேளையில் அவர்களுக்கு உதவ வராதவர்கள் எவரையும் முஸ்லிம் உலகம் மன்னிக்கமாட்டாது.

மேலும் இந்த ஈடாட்டமான கொள்கை, மேற்குலக நாடுகளினால் உருவாக்கப்படவிருக்கும் புதிய உலக ஒழுங்கு எப்படி அமையப்போகின்றது என்பதையிட்டு முஸ்லிம் உலகில் அச்சத்தையும், சந்தேகத்தையும், நம்பிக்கையின்மையையும் உருவாக்கியுள்ளது.

இத்தருணத்தில் முஸ்லிம் நாடல்லாத நாடுகளில் வாழ்ந்து வரும் முஸ்லிம்களைப்பற்றிக் கூறவிரும்புகிறேன்.

சிறிலங்காவில் வாழ்ந்துவரும் முஸ்லிம் மக்கள் அரசியல் சமத்துவத்தோடு மத சம்பந்தமான விடயங்களிலும் முழுஉரிமை பெற்றிருக்கின்றார்கள் என்பதைக்கூறித் தொடக்கத்திலேயே தவறான சிந்தனைகள் ஏற்படாது தவிர்த்துக்கொள்ள விரும்புகின்றேன். எங்கள் நாட்டிலிருக்கும் முஸ்லிம்கள், முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இல்லாத வேறு பல நாடுகளிலிருக்கும் முஸ்லிம்களிலும் பார்க்கக் கூடுதலான உரிமைகளைப் பெற்றுச் சிறப்பான இடத்தில் இருக்கின்றார்கள் என நான் கூறுவதை மிகைப்படுத்திக் கூறுவதாக எவரும் நினைக்கவேண்டாம்.

சனநாயக நாடுகளில் இனரீதியாகவுள்ள மக்கள் தொகைக்கேற்பப் பொருண்மிய வளங்கள் பங்கீடு செய்யப்படுகின்றன. ஆனபடியால் முஸ்லிம் நாடாக இல்லாத நாடுகளில் வாழும் முஸ்லிம்களுக்குக் கட்டுப்பாடுகளும், இடையூறுகளும் உண்டு.

ஆனபடியால் அகில உலகக் கொங்கிரஸ் போன்ற அமைப்புக்கள் இப்படியான விடயங்களில் கவனஞ்செலுத்தவேண்டும். இப்படியான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுவருகிறார்கள் என்பதை நான் அறிவேன். அகில உலக கொங்கிரசின் கீழ் இப்படியான அரச சார்பற்ற நிறுவனங்களை உருவாக்குவது சாலச் சிறந்தது என நான் நினைக்கின்றேன். சரியாக உணரப்பட்டு எவரெவரிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இது உறுதிப்படுத்தும்.

பாராளுமன்ற உறுப்பினனாக நான் இருந்துவருகின்ற 32 ஆண்டுகாலப்பகுதியில் எனக்கேற்பட்ட இன்னல் நிறைந்த காலங்களில் பெற்ற பட்டறிவின்படி முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் ஏற்பட்ட வரட்சி, வெள்ளப்பெருக்கு, பஞ்சம், மற்றும் காணியின்மை, போசாக்கின்மை, சுகாதாரம், வீடமைப்பு ஆகிய விடயங்களில் அரச சார்பற்ற நிறுவனங்கள் குறைந்தளவு பங்களிப்பையே செய்துள்ளன. இது வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்ததல்ல. ஆனால் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிக்கு மேலிடத்தின் கட்டுப்பாடுகளுண்டு ஆனபடியால் உலக முஸ்லிம் கொங்கிரஸ் போன்ற அமைப்புக்களின் நடவடிக்கைகளை நாங்கள் மதிப்பதோடு, அப்படிப்பட்ட அமைப்புக்களுக்கு மேலும் பல பணிகளில் பங்காற்றும் கடமைகள் இருக்கின்றன என நம்புகின்றேன்.

மேற்கத்தைய நாடுகளினால் உருவாக்கப்பட்ட போர்களின் பின்னர் இருந்துவந்த ஒழுங்குமுறையினால் முஸ்லிம்மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாயினர். அவர்களுடைய நிலப்பரப்புக்களின் எல்லைகள் மீளமைக்கப்பட்டதனாலும், பங்கீடு செய்யப்பட்டதனாலும் அவர்களின் விருப்பத்துக்கு மாறாகவே சேரிகளிலும் ஏதிலிகள் தங்ககத்திலும் வசிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவர்களது தனித்தன்மையை இல்லாதொழிப்பதும், மதரீதியாக அவர்களது பலத்தைக் குறைப்பதுமே இதன் பின்னணியாகும்.

இப்பொழுது நாங்கள் ஒரு புதிய உலக ஒழுங்கை உருவாக்க எத்தனிக்கின்றோம். அதை நான் கெடுபிடிப் போரின் பின்னால் உலக ஒழுங்கு எனக்கூற விரும்புகின்றேன்.

இந்தப் புதிய உலக ஒழுங்கிலுள்ள ஒரு பொருளை சிறப்பாக எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

நாம் வாழ்ந்துவரும் இந்த நூற்றாண்டில், முஸ்லிம்களின் பலத்தையும், ஆதிக்கத்தையும் தொடர்ச்சியாகக் குறைத்துவந்ததைக்கண்டுள்ளோம். புதிய உலக ஒழுங்கு முறையிலும் முஸ்லிம் உலகம் மீண்டும் பாதிப்புக்குள்ளாகாது என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது?

இப்படிப்பட்ட பாரதூரமான கேள்விகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நாம் மற்றவர்கள் மீது பழிசுமத்துவதில் பயனில்லை. எங்களிடையேயும் தவறுகள் இருக்கின்றன. எங்கள் தவறுகளை ஏற்றுக்கொண்டு அதைத் திருத்துவதற்கு வழிகாணாவிட்டால் முஸ்லிம்களின் ஆற்றல் குறைவது தொடரும்.

பொருளாதார வளர்ச்சி மூலம் மத மறுமலர்ச்சி வலுப்படுத்தப்படவேண்டும்.

எங்கள் வணக்கத்துக்குரிய முகமது நபி (சல்) அவர்கள் சகோதரத்துவமாக வாழ்வதிலுள்ள சிறப்பை எங்களுக்கு எடுத்துக்காட்டியுள்ளார். இந்தச்சகோதரத்துவம் என்ற கல்லைக் கொண்டு, உலக முஸ்லிம் சமுதாயத்தை உள்ளடக்கிய 'உம்மா' என்ற மாளிகையைக் கட்டியெழுப்பியுள்ளார். சிலவேளைகளில் தடைப்பட்டும், சிலவேளைகளில் தலையீடுகளால் அவதியுற்றும், சிலவேளைகளில் முறியும் தறுவாயிலிருந்தபோதிலும், இந்த

'உம்மா' என்றகொள்கை தங்க இழைபோன்று சென்ற 14 நூற்றாண்டுகளாக தொடர்ந்திருந்துவருகின்றது. எப்படியிருந்த போதிலும் இந்தத் தங்க இழையை நாம் கைவிடவில்லை. ஏனெனில் அதுதான் எங்கள் பலமாகும்.

நாங்கள் இந்தத் தங்க இழையைப் பலப்படுத்தவேண்டும். இதுதான் எங்கள் எதிர்காலத்துக்கு உத்தரவாதமளிக்கின்றது. இந்த விடயங்களில் உலகமுஸ்லிம் கொங்கிரஸ் ஆற்றிய பங்கு மதிக்கப்படவேண்டியதாகும்.

உலகின் பல பாகங்களிலுள்ள முஸ்லிம்கள் ஒன்று சேர்வதற்கு உலகமுஸ்லிம் கொங்கிரஸ் தனிப்பட்ட முறையில் முக்கிய பங்காற்றியுள்ளது. இது பல ஆண்டுகாலமாக ஒரு வெளிச்ச வீடுபோல் விளங்கிவருவதோடல்லாமல், உம்மாவின் உள்ளத்தில் ஒளியையும், நம்பிக்கையையும் ஊட்டி வருகின்றது. சவூதிஅரேபிய மன்னருடைய புத்திக்கூர்மையான எதிர்காலத்தைப் பற்றிய நோக்கினால் இந்த உம்மா உருவாக்கப்பட்டுள்ளது.

உலகில் விரைவாக மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. புதிய பொறுப்புக்கள் எங்கள் மேல் சுமத்தப்பட்டுள்ளன. எங்களுடைய உண்மையான எதிர்காலம் எப்படி இருக்கப்போகின்றது என்பதை உய்த்துணர்ந்து அதற்கேற்ப செயற்படுத்தக்கூடிய திட்டங்களை வகுக்கவேண்டுமென்பதையே இது குறிப்பிடுகின்றது. முன்னைய காலத்தில் செயற்பட்டதுபோல் எதிர்காலத்திலும் தனது பங்களிப்பை உலக முஸ்லிம் கொங்கிரஸ் செய்யும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

★ ★ ★

*அறிவு இல்லையென்றால் ஒன்றுமேயில்லை. சேமிப்பதற்கு மட்டுமல்ல. சரியான நபருக்குக் கொடுக்கவும் அறிவு தேவை.*

*—ஸ்பெயின் பழமொழி*

# கால்டுவல் மேற்றிராணியாரும் திராவிடத் தமிழர்களும்

-டி. பீ. சிவராம்-

(லங்கா கார்டியன் 1-8-92)

றொபர்ட் கால்டுவல்(Robert Caldwell 1819-1891) அவர்களே திராவிட இயக்கத்தின் தந்தையாவர். தமிழ்ப்போர்க் குலத்தவர்களைப் பிரித்தானியர் அடக்கி ஒடுக்கிய காலத்தில் அவர் மறவப்பொலிகர்களின் முக்கிய வதிவிடமாக விளங்கிய திருநெல்வேலியில் மேற்றிராணியாராக இருந்தார். 1856-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'திராவிட மொழிகளின் ஒப்பு இலக்கணம்' என்ற அவரது நூல், இருபதாம் நூற்றாண்டில் தமிழர்களின் வாழ்க்கையை ஆக்கிரமித்துக்கொண்ட அரசியல், கல்வி, பண்பாடு ஆகியவற்றின் மறுமலர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்த இயக்கத்துக்கு அடிக்கல்லை இட்டது. அனைத்துத் தென்னிந்திய மொழிகளும் (துணைக்கண்டத்தின் ஏனைய பகுதிகளில் வழக்கிலிருந்துவரும் பிராகி(Brahui)போன்ற வேறு மொழிகளும்) திராவிடமொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என இந்நூல் விவாதிக்கின்றது. இந்தியாவின் வளர்ச்சியடைந்த மொழிகள் சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டவை என அக்காலத்தில் பரவலாக நம்பப்பட்ட கருத்துக்கு இது சவாலாக அமைந்தது.

ஆகவே தென்னாசியாவிலுள்ள திராவிட மக்களின் பண்பாடும், நாகரீகமும் உள்ளியல்பாகத் தனித்தன்மையானது என்

பது இதில் இருந்து தெரியவருகின்றது. திராவிட இயக்கத்துக்கு இக்கருத்துக்கள் ஆற்றிய பங்கு வேறிடங்களில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.(Irshick 196?, Hardgrave 1965, சிவத்தம்பி 1978) புதிதாக எழுச்சிபெற்ற பிராமணரல்லாத உயர்வர்க்கத்தவர்களுக்கும், சென்னை இராச்சியத்தில் குடியேற்றவாத ஆட்சியின் கீழ் மிக முக்கிய இடத்தை வகித்துவந்த பிராமணர்களுக்குமிடையில் இருந்த பண்பாடு, அரசியல் ரீதியான முரண்பாடுகளின் அடிப்படையிலேயே இவ்வாராய்ச்சிகள் அதனை நோக்கின.

இவ்வாய்வின் நோக்கம், வளர்ச்சியடையாத நிலையிலிருந்த திராவிடக் கோட்பாடுகளின் தத்துவங்கள் தமிழ்ச் சமுதாயத்தைப் போர்ப்பண்பற்றதாக முயற்சி எடுத்த பிரித்தானியரின் அரசியல், பண்பாட்டு மரபுகளுடன் தொடர்பு கொண்டிருந்தன என்பதைக் காட்டுவதேயாகும்.

பேரரசைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்த அக்காலகட்டத்தில், மேற்றிராணியார் கால்டுவல் அவர்கள் வெளியிட்ட நூல்கள் அக்காலத்திற்கேற்ற அறிவாளர்களின் திறமையான முயற்சியென்றும், இது அக்காலத்திலிருந்த பொதுவான கருத்துக்கும் இயற்கை வளர்ச்சிக்கும் மாறாக இருக்கவில்லையென்றும் கொள்ளப்பட்டது. இம்முயற்சிகளின்போது அவரின் மனதில் தோன்றியவைகளே திராவிடத் தத்துவத்தின் அடிப்படையாக அமைந்தன. அவையான: (அ) தென்னிந்தியாவில் வரலாறுதோன்றிய காலத்திலிருந்தே சமாதானத்திலும் பார்க்கப் போர்ப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றிவரும் அநேகரைக் கொண்ட தமிழர்கள் மத்தியில் கட்டுப்பாட்டையும். சமாதானத்தையும் நிலைநாட்ட பிரித்தானியப் பேரரசு ஈற்றில் எடுத்த முயற்சி (ஆ) மறவர்களுக்கு எதிராக எழுச்சி பெற்ற ஏனைய தமிழ்க்குலத்தவர்கள் புரட்டஸ்தாந்து சமயத்தில் சேர்ந்த போது மேலோங்கிய அவர்களின் தனிப்பண்புதான் திராவிடரின் பண்பு எனக்காட்டுவதே பிரித்தானிய நிருவாகிகளின் நோக்கமாகவிருந்ததால் அக்குலத்தவர்களையே உண்மையான தமிழர்கள் எனப் பாதிரியார் ஏற்றுக்கொண்டமை, (இ) தமிழ்ப் போர்க்குலத்தவருக்குப் பதிலாகப் பிரித்தானியப் பேரரசின் படைய விரிவாக்கத்திற்கு பெரிதும் உதவிய தமிழர்களிடையேயுள்ள கீழ் வகுப்பினராகிய கிறித்தவப் படையினர் தங்களது நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்கு திராவிடமொழி, பண்பாட்டுத் தன்மை ஆகியன மீளவும் கண்டுபிடிக்கப்பட்டது பெரிதும் உதவியது என்பனவாகும்.

2568C-C

(அ) "ஒரு கலப்பு அரசாங்கம் இவ்விதமாக முடிவுக்கு வந்ததுடன், அதைத் தொடர்ந்து தன்னிறைவு உடையதும், வலிமையுள்ளதும் அதுபோல் நீதியானதுமான முற்றிலும் ஆங்கிலேயரின் அரசாங்கம் அமைந்தது" எனத் "திருநெல்வேலி வரலாறு" (1888) என்னும் நூலின் இறுதிக் குறிப்புக்களில் திரு. கால்டுவல் அவர்கள் கூறியுள்ளார். இந்த மாற்றத்தின் பலாபலன்கள் மிகவும் முக்கியமும், பெறுமதியும் வாய்ந்தவையாகும். ஆங்கில அரசாங்கத்துக்குத் தனது செயலுரிமையை நிலைநாட்ட முடியாத நிலை ஏற்பட்டிருந்தால் நிலைமைகள் எந்த வழியில் சென்றிருக்கும் எனப் பேராசிரியர் வில்சன் (Professor Wilson) மிக வெளிப்படையாக எடுத்துக்காட்டுகின்றார். நீதியான வலுவுடைய ஒரு ஆற்றல் இடைப்புகுந்து சமூக அமைப்புக்களையும், பழக்க வழக்கங்களையும் மாற்றி அமைக்காது விட்டிருந்தால், 'காவேரிக்குத் தெற்கிலுள்ள மாவட்டங்கள் கிறீத்தவ சமயம் வருவதற்கு முன்னர் வழமையாகக் கூறப்பட்டு வந்தது போன்று திரும்பவும் இராவணனின் இனத்தைச் சேர்ந்த அரக்கர்கள் வாழ்வதற்கு உகந்த பூமியாக மாறிவிடும்" என அவர் கூறினார். இம்மாவட்டத்தின் வரலாற்றை மேலோட்டமாகப் பார்க்கும் ஒருவருக்கு, மனிதன் தோன்றிய காலத்திலிருந்து கிறிஸ்துவுக்குப் பின்னர் 1801ம் ஆண்டுவரை (தமிழ்த்தேசம் பிரித்தானியர் வசமாகும் வரை) பழைய பாண்டிய நாட்டின் எஞ்சிய பகுதிகளில் நடைபெற்று வந்ததுபோன்ற போர்ச் சூழ்நிலையே திருநெல்வேலி மாவட்டத்திலும் இருந்து வந்துள்ளது என்பது தெரியும். கால்டுவல் மேலும் குறிப்பிடுகையில் "அதன் பின்னர் ஏற்பட்ட அனுகூலமான மாற்றங்களை எடுத்து நோக்குமாகில் அதில் பொலிகர்களிடம் நாம் காணும் மாற்றங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும்" எனக்கூறுகின்றார், இந்தப் பகுதியிலுள்ள போர்க்குலத்தினரில் அதிகமானோர் விவசாயத்தொழிலை மேற்கொண்டுள்ளனர் எனத் திருப்தியுடன் கூறும் அவர், மறவர்களைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது "மறவர்களிடையேயுள்ள ஏழை வகுப்பினர் நடுவில் ஏற்பட்டுள்ள மாற்றம் முற்றானதாக இல்லாவிட்டாலும்...... ஒரு காலத்தில் நாட்டில் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தவர்கள் தற்போது சட்டத்தையும், நியாயத்தையும் அனுசரிப்பவர்களாக இருக்கின்றார்கள் எனக் கூறுகின்றார். அவ்விதம் பிரித்தானியப் பேரரசின் கீழ் தமிழர் சமுதாயம் தன்னிறைவு பெற்றுத் தனது தலைவிதியை முடிவு செய்து கொண்டது" இந்நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த

குலத்தவர்கள் உருவாகி, அவர்களின் ஆட்சி முழுமைபெறாது மறைந்துவிட்டது'' என அவர் உறுதியாகக் கூறுகின்றார். ஆனால் தமிழர்கள்'' எங்கள் அரசாங்கத்தைத்தாம் ஒருபோதும் கண்டிராததும், இவ்வுலகில்,இக்காலத்தில்தங்களுக்குக்கிடைக்கப்பெற்ற சிறந்த அரசாங்கமென்றும் தடையின்றி, மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.'' சிறந்த ஆங்கில அரசின் கீழ் தமிழர்கள் சமாதான விருப்புக்கொண்ட சுறுசுறுப்பான உழைப்பாளிகளாக ஆகிவருகின்றார்கள். ஆளுங்குலத்தலர்களின் வரிசையில் தமிழ் நாட்டில் இறுதியாக ஆட்சிசெய்தவர்கள் கிளர்ந்தெழும் மறவர்களாகும். திராவிடக் குலத்தினரின் உண்மையான தார்மீக சமய எண்ணங்கள் எவையெனக் கால்டுவல் எண்ணினாரோ அவைகளுடன் ஆங்கில அரசின் கொள்கைகளும், புரட்டத்தாந்து மதப் பண்பாடும் ஒத்திருந்தமையால் அந்த அரசில் ஒரு குறையையும் காணமுடியவில்லை.

வரலாற்று அறிஞர் என்ற வகையில் தமிழ்ச் சமுதாயத்தில் மறவர்களின் போர்ப்பண்பாடு மேலோங்கியிருந்ததைக் கால்டுவல் நன்கறிந்திருந்தாலும் பேரரசினதும், சமயத்தினதும் நலன்களைப் பேணும் அவரது திட்டத்துக்கு முக்கியமாக விளங்கும் உண்மைத் திராவிட நாகரீகமென அவர் எடுத்துக்காட்டவிரும்பியதிலிருந்து மறவர்களின் போர்ப்பண்பாட்டை ஒதுக்கிவைக்கவேண்டியிருந்தது. ஆங்கிலேயர்கள் போர்க்குலத்திறன்களை அடக்கியதன் மூலம் தமிழ்ச் சமுதாயத்தின் ''சட்டபூர்வ ஆட்சியாளர்கள்'' ஆன விவசாயிகளினதும், கீழ்வகுப்பினரதும் இறைமையை மீளக்கொணர்ந்தனர்.

கால்டுவல்லின் நோக்கத்தின்படி தமிழ்ப் போர்க்குலத்தினர் காப்பானதும் மிகவும் மதிப்புடையதுமான உழவர் தொழிலைத் தேடவேண்டும்.(கால்டுவல் 1888 பக்கம் 229) அப்படியிருந்தும் அவர் அக்குலத்தவர்கள் சமாதான விரும்பிகள் என்பதில் நம்பிக்கையற்றிருந்தார். பொலிகர்களின் போர்களைப் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் ''தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட சமாதான வாழ்வில் முற்றாக அதிருப்தியடைந்திருந்த, ஒதுக்கப்பட்ட பாளையங்களில்(பொல்லம்) வசித்து வந்த மக்கள் இன்னொருதடவை ஆங்கிலேயருக்கு எதிராகத் தமது வலிமையைக் காட்டுவதற்கு தமக்குக்கிடைத்த சந்தர்ப்பத்தினால் மகிழ்ச்சியடைந்ததாகத் தெரிந்தது''எனக்குறிப்பிட்டுள்ளார்.(பக்கம் — 197)திருநெல்வேலி கையேட்டை எழுதிய திரு. ஸ்ருவார்ட் (Stuart) என்பவர், ஐரோப்பாவிலுள்ள மானியமுறை போல் தமிழ்ப்போர்க்குலத்தவரின் பாளையமுறையும் வரலாற்று ரீதி

யாகத் தவிர்க்கமுடியாதது என எழுதிய கூற்றை எதிர்த்த கால்டுவல் ''பொலிகர்கள் பற்றி நல்ல வார்த்தையைக் கேட்பது அரிதாகையால் திரு. ஸ்ருவர்ட் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன் .. இருந்தாலும் பொலிகர்களின் குற்றச் செயல்கள், ஐரோப்பாவில் இடைநிலைக் காலத்தில் நிலப்பிரபுக்கள் செய்த செயல்களிலும் பார்க்க அதிக துட்டத்தனமும், திட்டமிட்ட செயல்களாகவும் இருந்தன என்று கூறத்தான் வேண்டும்'' என்று கூறியுள்ளார். (பக்கம் 59) பிரித்தானிய அரசாங்கத்துக்கு இருந்த மறவர் பற்றிய கவலைகள் மேற்றிராணியாருக்கும் இருந்தது மாத்திரமின்றி புரட்டத்தாந்து மதத்தைத் தழுவிய பெருந்தொகையான சாணாக்கர்களுக்கு எதிராக மறவர்கள் கட்டவிழ்த்துவிட்ட இரத்தக்களரி, மேற்றிராணியாருக்கு மறவர்களுக்கெதிரான போக்கைத் தூண்டியிருந்தது. பிராமணர்களின் விக்கிரக வணக்கமும், சமஸ்கிருதப் பண்பாடும் ஆத்மிக ரீதியில் தனது சமயத்தை வளரச்செய்வதற்கு எவ்வளவு தூரம் அச்சுறுத்தலாக இருந்ததோ அந்தளவுக்குத் தனது சமயத்தைத் தழுவியவர்கள் மீது மறவர்கள் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளும், குற்றச்செயல்களும் கொடூரமான, உடலுக்கு நேரடியான ஆபத்துக்களை விளைவிக்கும் அச்சுறுத்தலாக இருந்தது திரு. கால்டுவல் அவர்களுக்கு எதிர்ப்புணர்வை ஏற்படுத்தியது. தமிழ்க்குலத்தின் போர்ப்பண்பை அகற்றியதால் ஏற்பட்ட நன்மைகளைப் பிரித்தானிய அரசாங்கமும், அங்கிளிக்கன் திருச்சபையும் எந்த வகுப்பினர்கள் மூலமாக வலுப்படுத்த விரும்பியதோ அவ்வகுப்பினரின் பண்பாட்டையும், தனிச்சிறப்பையுமே தமிழர்களின் உண்மையான தனிச்சிறப்பான பண்புகள் என கால்டுவல் அவர்கள் தமிழர்களது வரலாற்றில் எடுத்துக் கூறியுள்ளார். போர்ப்பண்பு கொண்ட மறவர்களின் பழக்க வழக்கங்களும், பிராமணர்களின் சமஸ்கிருதப் பண்பாடும் உண்மையான திராவிடர்களின் சமூக அமைப்புக்கும், தார்மீகக் கொள்கைகளுக்கும் எதிரானவை என அவர் கூறுகின்றார்.

தமிழ் மக்களிடையே 19 ஆம் நூற்றாண்டில் இயங்கி வந்த அநேக ஆங்கில மிசனரிமார்கள் இக்கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள். இவற்றிற்கான சாட்சியங்களை மிசனரிமாரும், நிருவாகிகளும் பலசமயநூல்களிலும், தமிழ்ப்போதனா நூல்களிலும் கண்டனர். 1865ம் ஆண்டில் கென்றி மார்ட்டின் ஸ்குட்டர் (**Henry Martyn Scudder**) என்பவர் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அதில் அவர் ''பண்டைய தமிழ் நூல்களில் அநேக கிறித்தவக் கொள்கைகள் காணப்பட்டன என்ற மிசனரி

மார்களின் நிலைப்பாட்டை நிருபிப்பதற்குத் தமிழ் நூல்களை யும், பாடல்களையும் உபயோகித்தார். (இர்சிக் 1976—பக்கம் 15) இந்த நம்பிக்கை மிசனரிமார்கள் நடத்திய உயர் கல்வி நிறு வனங்களில் அவர்களுக்குச் சார்பற்ற கொள்கைகள் குறை வானவை அல்லது முற்றிலும் சார்பற்ற கொள்கைகள் இல்லா தவை எனக்கருதப்பட்ட நூல்கள் அறிமுகப்படுத்துவதற்குக் காரணமாயிருந்தது.

கல்லூரிப் பாடத்திட்டங்கள் அவ்வித நூல்கள் வெளியிடப் படுவதற்கு ஏற்ற சந்தைகளை உருவாக்கின. இதன் மறுவிளைவு அநேக பண்டைய தமிழ்ப் படைப்புக்கள் மீளக் கண்டுபிடிக்கப் படுவதற்கு உதவிற்று. (உ. வே. சாமிநாதையர்-என் சரித்திரம், பக்கம் 714) பண்டைய தமிழர்கள் மூர்க்கமான போர்க்குலத் தினர் என்பதை எடுத்துக்காட்டி புதிய போர்ப்பண்புக்கு அடிக் கல் இட்ட புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்கள் வெளியிடப்படுவதற்கு இது எதிர்மறையாக உதவிற்று. பண்டைய திராவிடப் பண்பாட்டிலும், மொழியிலும் இயல் பாகவே அமைந்திருந்ததெனக் கால்டுவல் எண்ணிய தார்மீக சமயக் கொள்கைகளை வெளியிடுவதன் மூலம் தமிழ்ச் சமுதா யத்திலுள்ள போர்ப்பண்பற்ற குலத்தினரிடையே புரட்டஸ் தாந்து மதத்தை வளர்க்கவும், ஆங்கில ஆட்சிக்கு நம்பிக்கை யானவர்களை உருவாக்குவதற்கும் தமிழ் மறுமலர்ச்சி உதவும் என அவர் கருதினார்.

மதுரை மாவட்டத்தின் நிருவாகக் கையேடு இவ்வகுப்பைச் சேர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினரைப் புகழுகையில், ''அவர் கள்......மறவர்களுக்கு எதிரான வகையில் ஒழுங்கானவர்களாக வும், சிக்கனமானவர்களாகவும், சுறுசுறுப்பானவர்களாகவும் விளங்கினார்கள்'' எனவும் மற்றப் பகுதியான சாணர்கள் பற்றி, ''தமது கல்வி கற்றலில் உள்ள ஆர்வம், கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியமை, சிக்கனமுறை ஆகியவற்றால் சமூக அமைப்பில் மிகப் பெரியளவில் உயர்ந்துள்ளார்கள். அவர்களில் அநேகர் தமது சிறப்புப் பண்புகளால் மறவர்களைவிட முன் னேறி விட்டார்கள்'' எனக் கூறுகிறது, (தேர்ஸ்ரன் 1906-பக் கம் 372.) தனது இலக்கணத்துக்கு முன்னுரை எழுதுகையில், இந்த 'விசுவாசம்' உள்ள தமிழ் வகுப்பினர்களைக் கால்டுவல் அவர்கள், ''இலங்கை முழுவதுமுள்ள கோப்பித் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எல்லோரும் தமிழர்கள். கொழும்பிலும்கூட பணத்தைச் சம்பாதிக்கும் வகுப்பினரில் அநேகர் தமிழர்களே. வெகுவிரைவில், அநேகமாக எல்லா

இலாபகரமான தொழில்களிலும் சிங்களவர்களை அவர்களுடைய தீவிலேயே தமிழர்கள் ஒதுக்கிவிடுவார்கள் எனக்கூறுவது நடக்க முடியாததல்ல. தூரகிழக்கிலுள்ள பெகு (Pegu) பீனாங்கு (Penang) சிங்கப்பூர் ஆகிய இடங்களிலும் மற்றப் பகுதிகளிலுமுள்ள அரசர்கள் அல்லது இந்துக்கள் யாவரும் தமிழர்கள். மொறிசியசிலும் (Mauritius) மேற்கிந்தியக் குடியேற்றங்களிலும் குடியேறிய தொழிலாளர்களில் பெருந்தொகையானோர் தமிழர்களே. சுருங்கக் கூறினால் எங்கு பணம் சம்பாதிக்கலாமோ எங்கு பகட்டு வாழ்க்கையில் ஈடுபட்டு வாழ்பவர்கள், வளர்ச்சியில் அக்கறையற்று வாழ்பவர்கள் இருக்கின்றார்களோ அங்கு மூடநம்பிக்கைகள் குறைந்த மிகவும் துணிவுடன் செயல்படும் கிழைத் தேசங்களின் கிரேக்கர் (Greek), அல்லது ஸ்கொத்லாந்துக்காரர்களை (Scottish) ஒத்த தமிழ் இந்துக்கள் மொய்த்து விடுவார்கள்'' (கால்டுவெல் 1856-பக்கம் 7) எனக் குறிப்பிட்டுள்ளார்.

திரு. கால்டுவல் அவர்களின் திராவிடக் கோட்பாட்டு அகரமுதலியில் ''தமிழ்'' என்ற சொல் பிராமணர் அல்லாத போர்ப் பண்பற்ற தமிழர் பண்பைக் குறிப்பிடுகின்றது. திரு. கால்டுவல் அவர்கள் திராவிட இயக்கத்துக்கு அடிக்கல் இட்டதுடன், தான் வருவதற்குச் சற்றுக் காலத்துக்கு முன்னர் தான் தமிழர்கள் போர்ப்பண்பைக் கொண்டிருந்தனர் என்று நிலவிய எண்ணத்தை இல்லாமற் செய்வதில் ஓரளவு வெற்றியும்கண்டு அவர்கள் சமாதான விரும்பிகளெனவும், சுறுசுறுப்பாளர்களெனவும் எடுத்துக்காட்டினார். அறிவுசால் மிசனரிமார்களின் புத்திசாலித்தனமான நடவடிக்கைகள் பிரித்தானிய பேரரசுக்கு **''திராவிடத் தமிழர்கள் நம்பிக்கையற்றவர்கள் நடுவில் நம்பிக்கையுடையவர்களாக இருப்பார்கள்'' என்ற உள் நம்பிக்கையை வைத்திருப்பதற்கு இடமளித்தது. அது பேரரசுக்கு வெகுநாட்கள் வரை அடித்தளமாக இருந்தது. பெரும் கலகம் ஏற்பட்ட காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளும், திராவிட இயக்கத்தின் எழுச்சியும் அவர்களின் அந்த நம்பிக்கையைச் சரியென நிரூபித்தன.**

○—○

# மதிப்புவாய்ந்த மூத்த சகோதரரின் பிரவேசம்

— கௌடில்யா —

(ஐலண்ட் — 25- 10- 1992)

**படைக்கலன்களுக்கான செலவினம்**

நாட்டின் மொத்தச் செலவினத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில், 10% விகிதத்திற்கு அதிகமான தொகை, அதாவது 18 பில்லியன்கள், காப்புச் செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதை, 1993 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டம் எடுத்துக் காட்டுகின்றது. சமூகநல்வாழ்வுக்கும், மறுசீரமைப்புக்கும் 6 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கூடுதலான தொகை ஏதிலிகளுக்கும் விடுதலைப் புலிகளிடமிருந்து மீண்டும் கையகப்படுத்திய நிலப் பரப்புக்களை மறுசீரமைக்க செலவிடப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

தன்னுடைய நிலப்பரப்பு ஒருமைப்பாட்டிற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலை எந்தவொருநாடும் உதாசீனம் செய்யமுடியாது. மூன்றாம் உலகநாடுகளிலுள்ள பல அரசுகள் சிதைவுற்று வெவ்வேறு நாடுகளாக உருவாக புதிய உலக ஒழுங்கு வழிவகுக்கின்றது. தற்போதுள்ள படையினரின் எண்ணிக்கையை இரு மடங்குகளாக அதிகரிப்பதன்மூலம் அதாவது 2 இலட்சமாக ஆக்குவதன்மூலம், இலங்கை சிதைவுறுவதைத் தடுக்கமுடியுமென்றும்

ஆனால் இதை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டு ஆண்டுகள் தேவைப்படுமென்றும் இலங்கையின் படைத்தளபதி கருதுகின்றார். இது ஒருபுறமிருக்க படையை விட்டோடிய 7,000 பேர் ஒரு சிறியபடையை உருவாக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. தெற்கில் விற்பதற்காகவே இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளையும் மற்றைய ஆயுதங்களையும் கொண்டு செல்கின்றார்கள். இந்தத் துப்பாக்கிகள் யாருடைய கைக்குச் சென்றடைகின்றன.? தெற்கிலுள்ள பயங்கரவாதிகளின் கைகளுக்கா? ஆயுதம் தாங்கிய குண்டர்களின் கைகளுக்கா? தங்களின் உரிமைக்காகப் போராடுபவர்களின் கைகளுக்கா? பெரும்படை உருவாக்கல் சட்டத்தை எதிர்த்துக் குற்றமிழைப்பவர்களை உருவாக்குகின்றது.

பெரும்படையை உருவாக்கல் பற்றி கூறப்புகுந்த திரு. ஜோன் கெனெத் கல்பிறயித் (John Kenneth Galbraith) அவர்கள் "பெருந்தொகையான பணத்தை படையத்திற்கு செலவிடும் வறிய நாடுகள் தங்களுக்கு அவசியமாகவுள்ள மற்றைய தேவைகளை முழுமை செய்யப் போதிய நிதிவசதி தங்களிடம் இல்லை எனக் கூறுவது மிகவும் கேவலமானதும் கவலைக்குரியதுமாகும்" எனக் கூறியுள்ளார். அமெரிக்கா உட்பட எல்லா வளர்ச்சியடைந்த நாடுகளும் இப்படியே நடந்து கொள்கின்றன. படையு மேலாதிக்கமே தற்பொழுது சனநாயகத்திற்கு பெரிய அச்சுறுத்தலாக விளங்குகின்றது. ஒரு நாட்டின் விவகாரங்களில் படையத்தின் பங்கு மிகவும் குறைந்தளவாக இருப்பதுடன் அது அரசின் கடுமையான கட்டுப்பாட்டுக்குள்ளும் இருத்தல் வேண்டும் எனவும் அவர் கூறுகின்றார்.

தெற்கிலுள்ள நாடுகளுக்குள்ளேயும், அவற்றிற்கிடையேயும் நிலவும் உள்நாட்டுப் பூசல்கள் காரணமாகவும், அனைத்துலக நாடுகளிடையே நிலவும் பூசல்கள் காரணமாகவும், ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை வறுமையின் காரணமாக பட்டினியால் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கையைவிட கூடுதலானது என இவர் மேலும் கூறுகிறார். சோவியத் ஒன்றியத்திற்கும் ஐக்கிய அமெரிக்காவிற்குமிடையே அரை நூற்றாண்டுக் காலமாக நிலவிய கெடுபிடிப் போரின் போது சில உளவாளிகளையும், தப்பியோட முயன்ற ஏதிலிகளையும் தவிர வேறு எவரும் கொல்லப்படவில்லை எனவும் இவர் கூறுகின்றார்.

மூன்றாம் உலகநாடுகளில் தேசியவாதம், இனவாதம் மற்றும் நெறி (மதம்) சப்பந்தமான பூசல்களில் கோடிக்கணக்கான மக்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும், இதைவிட அதிகமானோர்

தங்கள் உடைமைகள் யாவற்றையும் இழந்து பட்டினிச்சாவை எதிர் நோக்குவதாகவும் கூறும் இவர் இந்தோசீனாவையும், ஆப்கானிஸ்தானையும் இதற்கு உதாரணமாகக் காட்டுகின்றார். தெற்கிலுள்ள யாவரும் சமாதானத்தையும் சகிப்புத்தன்மையை யும் தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டுமெனவும் இவர் கூறுகிறார்.

படைக்கலன்கள் வழங்கலை மேற்கொள்ளும் முக்கியமான நாடுகள் எவை? அகில உலக மக்களினதும் காப்பேதனது தலையாய கடமையாக இருக்க வேண்டிய காப்புச் சபையின் நிரந்தர உறுப் பினர்களான ஐந்து பெரிய நாடுகளே இவையாகும். எப்பொழுதும் பதற்றம் நிலவும் நாடுகளாக விளங்கும் மத்திய கிழக்கு நாடுகளை எடுத்துக் கொள்வோம். சதாம் குசெயின் அவர்களைப் பணிய வைத்து அவரின் பிடியிலிருந்து குவைத் நாட்டை விடுவித்ததன் பின் சுமார் 28.5 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை அமெரிக்காவிடமிருந்து மத்திய கிழக்கு நாடுகள் கோரியுள்ளதாக வும், இதில் 17 மில்லியன்களை சவுதி அரேபியா செலுத்தியுள்ள தாகவும் அமெரிக்காவில் சமாதானம் மற்றும் ஆய்வு ஆகிய வற்றுக்கு உழைக்கும் நிறுவனமான உலக காப்பு நிறுவனம் (Safe World Foundation) கூறியுள்ளது. அமெரிக்காவில் தைவானுக்கு அண்மையில் விற்பனை செய்யப்பட்ட வானூர்தி இத்தொகையில் சேர்க்கப்படாதிருப்பினும் சனாதிபதி தேர்தலில் திரு. புஷ் அவர் கள் சில வாக்குகளைப் பெறுவதற்கு இந்த விற்பனை உதவி யிருக்கும். இந்த நாடுகளுக்கு அமெரிக்கா விற்பனை செய்தளவு ஆயுதங்களை விற்பனை செய்ய ருசியா பெரிதும் முயன்றும் அது இயலவில்லை. இருப்பினும், ருசிய அரசின் மூத்த பேச்சாளரான திரு. சேர்யியசராசு கெம்சிகி அவர்கள் இந்தத் தகவலை வெளி யிடவிரும்பாத போதிலும், சிரியாவுக்கு இரண்டு பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களையும், ஈரானுக்கு ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான நீர்மூழ்கிகளையும், பல பில்லியன் டொலர் பெறுமதியான போர் தாங்கிகள், போர்வானூர்திகள், ஏவுகணைகள் ஆகியவற்றை பல மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ருசியா விற்பனை செய்துள்ளது. 1990 – 91 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் நாலு பில்லியன் டொலருக்கான ஆயுதவிற்பனையை பிரித்தானியா மேற்கொண்டது. அபுதாபி, குவைத், ஓமான், கட்டாக், துருக்கி மற்றும் சவுதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கு, பிரான்ஸ் தனது ஆயுத விற்பனையை விரிவுபடுத்தியிருந்தது. இந்த நாடுகளுக்கு தான் எந்தவிதத்திலும் சளைத்ததல்ல என்று காட் டும் வகையில் சீனாவும் ஆயுத விற்பனையில் பெரியளவில் ஈடு பட்டிருந்தது. இந்த நாடுகளே மற்ற நாடுகளில் நடைபெறும்

போர்களை நிறுத்தும்படி தீர்மானங்களைக் கொண்டுவருபவை யாகவும் அமைதிகாக்கும் படையை அந்த நாடுகளுக்கு அனுப்பி வைப்பவையாகவும் இருக்கின்றன.

இவற்றிலிருந்து நாம்எதை அறியக்கூடியதாகவிருக்கின்றது. அணு ஆயுதங்களின் பரவலைத் தடை செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ளும் இந்த வல்லரசுகள், அணு ஆயுதத்திலேயே கருத் தாக இருக்கின்றன. அணு ஆயுதத்தின் முழு உரிமை தங்களுடையதே என்று கருதும் இந்நாடுகள் மற்றநாடுகள் இதைத் தயாரிப்பதை விரும்புவதில்லை. அணு ஆயுதம் இல்லாத நாடுகள் தங்கள் ஆயுத தேவையை முழுமை செய்ய இந்த நாடுகளை அணுகவேண்டி யுள்ளது. வல்லரசுகள் இதன் மூலம் பெருந்தொகையான பணத் தைப் பெறுகின்றன. "நான் பெரும் பணக்காரன் என் நெறியும் (மதமும்) அதுவே" என 'ஆயுதமும் மனிதனும்' என்ற நூல் மூலம் அறிஞர் பேனாட்சா அவர்கள் கூறிவைத்தது போல் இந்த நாடு களுக்கும் வேண்டியது பணம் ஒன்றேயாகும்.

## சீனாவும் அணிசேரா இயக்கமும்.

கட்சிக்குள் கொள்கை காரணமாக எழுகின்ற பூசல்களை யும், திரு. டெங் அவர்கள் பதவியேற்றபின் ஏற்பட்ட மாறுதல் காரணமாகத் தோன்றிய சிக்கல்களையும், சீனா சுமுகமாகத் தீர்த்துவைப்பதாலும், அதன் அண்டை நாடுகளுடன் உறவை அது மேம்படுத்திவருவதாலும், இந்தப் பிராந்தியத்திலும் அகில உல கிலும் அது ஒரு முக்கியமான இடத்தை வகிக்குமென நான் கருது கிறேன். அண்மையில் ஜகார்த்தாவில் நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் உச்சி மாநாட்டில் அது பார்வையாளராகக் கலந்து கொண்டது அதன் தகுநிலையை எடுத்துக்காட்டுகிறது. காப்புச் சபையின் உறுப்பு நாடுகளின் அமெரிக்காவின் நெருக்குதல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கக்கூடிய வலிமையும் துணிவும் கொண்ட ஒரேயொரு நாடு சீனாதான் என்பதை அண்மையில் நடந்த சீனப் பொதுவுடமைக் கட்சியின் மாநாட்டின் பின்னர் அணிசேரா நாடு கள் விளங்கிக்கொள்ள வேண்டும். மூன்றாம் உலக நாடுகள் மீது இந்த நாடு அனுதாபம் கொண்டுள்ளது. பாகிஸ்தானுடன் சிநேகபூர்வமான உறவைத் தொடர்ந்தும் பேணிவரும் அதே வேளையில் திரு. நரசிம்மராவ் அவர்களின் அரசுடனும் இந்தநாடு தனது உறவை மேம்படுத்தியுள்ளது. சீனாவுக்கும் அணிசேரா இயக்கத்துக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருப்பதுடன் ஐ. நா. சபையில் இவை இரண்டும் இணைந்து செயற்படத்தக்க வகையில் இந்த ஒத்துழைப்புக்கு அணிசேரா இயக்கம் முன் னுரிமை கொடுத்தல் வேண்டும்.

# நாம் அவரைப் பிடித்துவிட்டோம்

—புறாக் லார்மர்—

(நியூஸ் வீக் 20 - 9 - 92)

*(லத்தின் அமெரிக்காவில் அதிக வன்முறைகளில் ஈடுபட்ட கரந்தடிப் படையினரின் தலைவரைக் கைது செய்ததுடன் வெல்ல முடியாது என்ற 'சைனிங்பாத்' இயக்கத்தின் எண்ணத்தையும் பெருநாட்டின் காப்புப்படைகள் முறியடித்துள்ளன)*

இரண்டாவது மாடி பல்கணித் திரைச்சிலைகள் எப்பொழுதும் மூடப்பட்டே இருக்கும். தலைநகர் லீமா (Lima) வில் எப்பொழுதும் அமைதி நிலவும் சேர்குல்லோ (Surguillo)ப் பகுதியின் சுற்றுப்பிரகாரத்திலுள்ள முதலாவது வீதியில் அமைந்துள்ள 459 ஆம் இலக்க, பழுப்பு நிறப் பச்சை வண்ணம் பூசப்பட்ட அந்த வீட்டில் மேலே கூறப்பட்டதை விட வேறொன்றும் சிறப்பாகத் தெரியவில்லை. ஆனால் சில நாட்களுக்குள் சைனிங்பாத் இயக்கத்தின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வரும் பெருநாட்டின் தேசிய பயங்கரவாத எதிர்ப்புப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த (Dincote) மாறுவேடத்தில் உள்ள இரண்டு பிரிவினர்கள் நடுத்தர வகுப்பினர் வாழும் இந்த வீட்டைக் கண்காணிக்கலாயினர். தெருச் சுத்திகரிப்போராகவும், மின்மானி கணக்கெடுப்பவர்களாகவும், நிலவை இரசிக்கும் காதலர்களாகவும் புலனாய்

வாளர்கள் இந்தப்பகுதியில் மறைந்திருந்து வந்தனர். சில மாதங்களுக்கு முன்னர் தான் ஒரு கட்டிடக்கலைஞரும், பலே (ballet) நாட்டியம் கற்பிக்கும் இன்னொருவரும் இந்த வீட்டை வாடகைக்கு அமர்த்தியிருந்தனர். எவருக்கும் தெரிந்தமட்டில் இந்த




இருவருக்கும் சைனிங்பாத் இயக்கத்தில் தொடர்பு இருக்கவில்லை. ஆனால் புலனாய்வாளர்கள் சில துரும்பு போன்ற தகவல்களைப் பெற்றனர். இந்த வீட்டிலிருக்கும் ஒல்லியான இளம் பலே நாட்டியக்காரி நாள்தோறும் 16 ரொட்டிகளையும், முதியோருக்கான மருந்து வகைகளையும் வாங்கிச் செல்வதையும், லத்தீன் அமெரிக்காவின் அதிபயங்கரவாத கரந்தடி இயக்கத் தலைவரான திரு. அபீமேல் குஸ்மன் அவர்கள் விரும்பிப் புகைக்கும் வின்ஸ்ரன் (Winston) சிகரெட்டின் வெற்றுப்பெட்டிகள் அவளது குப்பைத் தொட்டியில் இருப்பதையும் புலனாய்வாளர்கள் கண்டனர். ஒரு நாள் துப்புத்துலக்கும் பொழுது திரு. குஸ்மன் அவர்கள் நாட்டியமாடும் அவரது நிழல் உருவம் பல்கணி திரைச்சீலையில் விழுந்ததையும் கண்டனர்.

செப்தம்பர் திங்கள் 12ம் ஆம் நாள் சனிக்கிழமை இரவு பாபர்கியூ போசனத்துக்காக விருந்தினர்கள் 459 ஆம் இலக்க வீட்டிற்குள் வந்தபின்னர், 8.40 மணிக்கு மாறுவேடத்திலிருந்த

இரு புலனாய்வுத்துறையினர் கதவிலுள்ள மணியை அடித்தனர். கதவு திறந்தவுடன் தங்கள் துப்பாக்கிகளினால் மேல் நோக்கிச் சுட்டவாறு அதைத் தள்ளியவாறு உட்சென்றனர். அதிகமான புலனாய்வுத்துறையினர் உட்புகுந்து வீட்டைத் தங்கள் வசமாக்கிய பின்னர் முண்டியடித்துக்கொண்டு இரண்டாவது மாடிக்கு ஏறிய அவர்கள் அங்கே திரு. குஸ்மன் அவர்களும், சைனிங்பாத் இயக்கத்தின் துணைத்தலைவரும், அவரது நண்பருமான திரு. எலினா இப்ராக்கீர் அவர்களும் இருப்பதைக் கண்டனர் வழமை போல் திரு. குஸ்மன் அவர்களின் கைகளில் ஒரு புத்தகம் இருந்தது. அங்கு எதுவித எதிர்ப்போ, துப்பாக்கிப் பிரயோகமோ அல்லது காப்புத்தானும் இருக்கவில்லை. திரு. இப்ராக்கீர் ஆத்திரப்பட்டுக் கத்தியபோதும் தலைவர் மிக அமைதியாக இருந்தார். ஒரு புலனாய்வாளர் தன்னிடமிருந்த வானொலிக் கருவியை எடுத்து 'பிங்கோ' (Bingo) நாம் பிக்சீக்கை (Big Cheeks) பிடித்துவிட்டோம் எனக் கத்தினார். வாழ்நாள் முழுவதும் புலனாய்வுத்துறையில் மேலாளராகவிருந்துவருபவரும், ருசியாவிலும், அமெரிக்காவிலும் பயிற்சி பெற்றவரும் பெருநாட்டின் தேசிய பயங்கரவாத எதிர்ப்புப் புலனாய்வுத்துறையின் தலைவருமான ஜெனரல் அந்தோனியோ விடல் கெறேறா (Dincote Gen. Antonio Vidal Herrera) அவர்கள் உடனடியாக வந்து பெருநாட்டின் முதலாவது பொதுமக்கள் எதிரியைப் பார்த்து, "வாழ்க்கையில் சில சமயங்களில் வெற்றியும், சில சமயங்களில் தோல்வியும் ஏற்படுவதுண்டு. இம்முறை நீங்கள் தோல்வியைத் தழுவ வேண்டியுள்ளது'' எனக்கூறினார்.

திரு. குஸ்மன் அவர்கள் கைதுசெய்யப்பட்டார் என்ற செய்தி பெருநாட்டு மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. பெருநாட்டின் பொல்பொட் எனக்கருதப்பட்ட இவர் 12 ஆண்டு காலமாக கொலை செய்வதைக் கொள்கையாகக் கொண்டு தனது நாட்டைக் கொலைக்களமாக்கியவர். 5,000 வரையுள்ள கரந்தடிப்படையினரைக் கொண்டுள்ள இவர் மாவோ (Mao) பாணியிலான வன்முறை மூலம் 23,000 மக்களைக் கொலை செய்வித்ததோடு 20 பில்லியன் டாலர்கள் பெறுமதியான வளங்களையும் நாசப்படுத்தியுள்ளார். அண்மைக் காலமாகத் தலைநகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குள் ஊடுருவிப் பெருநாட்டையே அச்சுறுத்தியவர். வெறிபிடித்த இவரது ஆதரவாளர்கள் இவரைப் புகா இன்றி (Puka Inti - Red Sun) (சிவப்புச்சூரியன்), சனாதிபதி கொன்சலோ நாலாவது பொதுவுடைமைவாதத் தலைவர், கார்ல் மாக்ஸ், லெனின், மாவோ ஆகியவர்களின் அடுத்த வரிசையில் உள்ளவர் என இவரை அழைத்து வந்தனர். இப்போது இவர்

1509 ஆம் இலக்கக் கைதி. தொப்பை வயிறும், மத்தியவயதும், அலங்கோலமான தாடியும், தடித்த கண்ணாடியுமணிந்து, நொண்டி நடந்து செல்லும் மாறாத சொறி சிரங்கு நோயினால் பீடிக்கப்பட்டவர். இவர் நடத்தப்பட்டு வரும் முறையை பெரு நாட்டு மக்களுக்கு வெளிக்காட்டும் காவற்றுறையினரின் புகைப் படக் கருவிக்கு முன்பாக 57 வயதினரான இந்த முன்னாள் பேராசிரியர் பயந்த சுபாவத்துடன் தன்னைக் கைது செய்தவர் களின் கட்டளைகளுக்குப் பணிந்து அவர்கள் சொற்படி செயற் பட்டார். "எல்லாப் பக்கத்திலிருந்தும் மக்கள் செண்டோரோ (Sendero) வைப்பற்றி பெருமையாகப் பேசிவந்தனர். மக்கள் ஒரு பூதாகாரமான மனிதனை எதிர்பார்த்தனர். ஆனால், தற்போது அவர் ஒரு தளர்ந்த மனிதனாகவும், ஏற்றுக்கொள்ளமுடியாத எண்ணங்களையுடையவராகவும் காட்சி அளிக்கின்றார்" என ஒரு அமெரிக்க மேலாளர் கூறுகின்றார்.

தலைவர் கைது செய்யப்பட்டது சைனிங்பாத் (சென் டோரோ லுமினோசோ - (Sendero Luminoso) இயக்கத்துக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கரந்தடிப்படையினர் தலைநகரமான லீமாவை நோக்கி முன்னேறிவருவதை அறிந்த தும், கடந்த ஏப்ரல் திங்களிலிருந்து பெருநாட்டில் மென்மை யான சர்வதிகார ஆட்சியை ஏற்படுத்திய சனாதிபதி அல் பேர்ட்டோ பூஜிமோறி அவர்களுக்கு திரு. குஸ்மன் கைதுசெய் யப்பட்டது வெற்றி வாய்ப்பாக அமைந்தது. எல். சல்வடோரி, கௌதமாலா, கொலம்பியா ஆகிய நாடுகளில் நடைபெற்று வந்த புரட்சிகளை சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி பாதித்தது போல ஒதுக்கப்பட்ட நிலையிலும் தனித்தன்மையாக இயங்கி வந்த 'சைனிங்பாத்' இயக்கத்தைப் பாதிக்கவில்லை. திரு. குஸ்மன் அவர் களுக்கு உள்நாட்டிலேயே ஆதரவு இருந்தது. அவருக்குத் தேவை யான பணம் வெளிநாட்டிலிருந்து கிடைக்காமல் உலகத்திலேயே புகழ்பெற்ற கொக்கைன் என்னும் போதைப்பொருளை உற்பத்தி செய்யும் பெருநாட்டிலுள்ள மேல் குவல்லாகாப் பள்ளத்தாக்கி லிருந்து கிடைத்து வந்தது.

பெருநாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அதிதீவிரமான தேடுதல் வேட்டைகளுக்கிடையிலும், பல சிரமங்களுக்கு மத்தியி லும் திரு. குஸ்மன் அவர்கள் இந்த இடையூறுகளிலிருந்து தப் பித்து வந்துள்ளார். தன்னைக் கைது செய்யவந்தவர்களிடமி ருந்து இருமுறை சில விநாடிகளில் தப்பிச் சென்றதிலிருந்து தன்னை வெல்ல முடியாதென்ற நிலையை இவர் எல்லார் மனதி லும் தோற்றுவித்தார். திரு. ஸ்ராலின், திரு. மாவோ போன்ற

வர்கள் தங்களுடைய அரசைத் தனிமனிதக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது போன்று, பெருநாட்டின் பொதுவுடமைக் கட்சி யாக இவருடைய அமைப்பை தனது கட்டுப்பாட்டில் வைத்தி ருந்தார். சைனிங்பாத் இயக்கத்துக்கு ஆலோசனை கூறி வழி நடத்தியவர் கைதுசெய்யப்பட்டாலும் இந்தச்சண்டை தொடர்ந்து கொண்டே போகும் எனத் தெரிகிறது. திரு. அபிமேல் குஸ்மன் அவர்களைப் பற்றிப் பன்னிரண்டு ஆண்டுகளாக ஒரு மாயத் தோற்றம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. தற்போது இவர் ஒரு மனிதன் தானென்பதும், கைது செய்யப்பட்டுத் தோற்கடிக்கப் பட்ட நிலையில் சிறைக்கம்பிகளுக்குள்ளே அடைக்கப்பட்டு கிடப்பதோடு காவற்றுறையினருக்கும் பணிந்து நடக்கிறார் என் பதும் தெரியவந்துள்ளது என பெருநாட்டிலுள்ள அனைத்துலக ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த திரு. என்றிக் ஒபன்டோ அவர் கள் கூறுகிறார்.

''சென்டோரோ வெற்றிபெறும் அல்லது நாட்டை லெப னானைப் போன்று ஆக்கிவிடும் என மக்கள் நினைத்தார்கள். ஆனால் சென்டோரோ லுமினோசோவைத் தோற்கடிக்க முடி யும் என்பது எங்களுக்கு இப்பொழுது நன்றாகத் தெரிகிறது" என அவர் மேலும் கூறுகின்றார்.

''உலகப்புரட்சி பெருநாட்டை மையமாகக் கொண்டது" என்ற காரணத்தைப் பல ஆண்டுகளாகத் திரு. குஸ்மன் அவர்கள் தனது ஆதரவாளர்கள் மத்தியில் வேரூன்றச் செய்தார். ''உலகப் பொதுவுடமைத் தத்துவம் வீழ்ச்சியடையமுன்னரே'' ருசியா, சீனா, வடகொரியா ஆகிய நாடுகளிலுள்ள சீர்திருத்தவாதிகளை இவர் கண்டனம் செய்துள்ளார். 1980 ஆம் ஆண்டுக்கு முன் னரே சீனத்தலைவர் டெங்சியாபிங் அவர்களை நாய்க்குப் பிறந் தவர் என்று கூறும் சுலோக அட்டைகளோடு இறந்த நாய்களை யும் கம்பங்களில் தொங்கவிட்டு சைனிங்பாத் உறுப்பினர்கள் லீமாவிலுள்ள மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர். இதன்மூலம் சென்டோரோவின் கொள்கைகளே உலகத்தில் உண்மையான கொள்கைகள் என எடுத்துக் காட்டுவதற்காகவே இவை செய் யப்பட்டது. சைனிங்பாத் இயக்கம் தனக்குத் தேவையான 20 பில்லியன் டொலர்கள் தொடக்கம் 40 பில்லியன் டொலர்கள் வரையிலான நிதியைப் போதைப்பொருட்கள் மூலம் உள்நாட் டிலேயே பெற்றுவந்ததோடு படைக்கலன்களுக்கும் வெளியாரில் தங்கியிருக்கவில்லை. இதனால் சைனிங்பாத் இயக்கம் மற்றப் புரட்சிகள் நசுக்கப்பட்டதுபோல் நசுக்கப்படாது எல்லாத் தாக்கங் களுக்கும் ஈடு கொடுத்துவந்தது.

இந்த நிலை சென்ற வாரம் வரையே நீடித்தது. காவற்றுறையினர் திரு. குஸ்மன் அவர்களையும், அவருடைய மூன்று மூக்கிய சகாக்களையும் மாத்திரம் கைதுசெய்யவில்லை. அவர்கள் இந்தப் பயங்கரவாதப் போரை திட்டமிட்டு நடத்திவந்த அரசியல் மூளையையே இல்லாது செய்துவிட்டனர். அத்தோடு ஒக்டோபர் திங்களில் நடத்தவிருந்த பாரிய தாக்குதல்கள் பற்றிய திட்டங்களைக் கொண்ட கணனித்தட்டுக்களையும் மற்றும் தடயப் பொருட்களையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர். இவைகள் லீமாவிலுள்ள சைனிங்பாத் இயக்க நிரந்தர மத்தியகுழுவுக்கும், அதனுடைய பகுதிக்குழுக்களுக்குமிடையேயுள்ள தொடர்புகளை வெளிப்படுத்தியுள்ளன. திரு. குஸ்மன் அவர்களைக் கைதுசெய்ததிலிருந்து நடத்திய சோதனைகளின் போதும், சுற்றுவளைப்புகளின் போதும் 200 வரையிலான சென்டோலோவைச் சேர்ந்த சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ள காவற்றுறையினர் தாங்கள் பெற்றுவரும் தகவல்கள் இந்த அமைப்பு இல்லாதொழிக்க உதவும் என எதிர்பார்க்கின்றார்கள். திரு. குஸ்மன் அவர்கள் தனது ஆதரவாளர்களைச் சேர்த்துவந்ததிலிருந்து அவரை அறிந்திருந்த குழு அமைப்பாளரான திரு. இசபெல்கோறல் அவர்கள், "இதுதான் சென்டோரோ அழிவதற்கான ஆரம்பம்" எனக் கூறுகின்றார். "இவர்களின் தத்துவங்கள் சில ஆண்டுகள் நீடிக்கலாம். ஆனால் நாங்கள் அவர்கள் கதை முடிந்துவிட்டது என நினைக்கும்போது அவர்கள் மீண்டும் வரக்கூடும்" என மேலும் கூறுகின்றார்.

சைனிங்பாத் இயக்கத்தில் இன்னும் கைவைக்கப்படவில்லை. அத்துடன் போதைப் பொருட்கள் மூலம் கிடைத்துவரும் பணவசதிகளும் நிறுத்தப்படவிலலை. "தலையைச்சீவிவிட்டோம் ஆனால் உடல் இப்பொழுது கைபடாது இருக்கின்றது" என ஒரு காவற்றுறை மேலாளர் கூறினார். திரு. குஸ்மன் அவர்களைக் கைதுசெய்வதற்குப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் சைனிங்பாத் இயக்கம் ஈடுபடலாம் எனப்பல வல்லுனர்கள் அஞ்சுகிறார்கள் இப்பொழுது சிறு சிறு அசம்பாவிதங்களே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சென்ற திங்கட்கிழமை தலைநகர் லீமாவுக்கு வெளியே சென்றுகொண்டிருந்த ஒரு பேருந்தின் மீது சைனிங்பாத் இயக்கத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர். தலைநகருக்கு தெற்கே உள்ள சேரி நகரமான வில்லி மரியா டெல் றியன்டோவில் உள்ள உயர் பாடசாலைக்கு முன்பாக மாணவர் போல் சீருடையிலிருந்த சைனிங்பாத் இயக்கத்தவர்களால் சென்ற திங்கட்கிழமை ஒரு காவலர் கொல்லப்பட்டார். இந்த அசம்பாவிதத்தைப்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

பார்த்துக் கொண்டிருந்த ஒரு உள்ளூர் வியாபாரி, ''முன்னரிலும் பார்க்க நான் இப்போது தான் கூடுதலாகப் பயன்படுகின்றேன். இதற்கு எந்தவிதமான எதிர்ப்புத்தோன்றும் என்பது யாருக்கும் தெரியாது'' என்று கூறினார்.

இதற்கு முன்பும் சைனிங்பாத் இயக்கம் பாரிய பின்னடைவுகளுக்குத் தாக்குப்பிடித்துள்ளது. 1984 ஆம் ஆண்டில் கடைசிப்பகுதியில் படையம் கொலைகளில் ஈடுபட்டு சைனிங்பாத் இயக்கம் ஆரம்பமான அயக்குக்கோவிலேயே அதை இல்லாதொழித்தபோதும், கொக்கோத் தோட்டங்கள் நிரம்பிய மேல் குவல்லாகாப் பள்ளத்தாக்கு உட்பட அது பல பகுதிகளில் மீண்டும் தலைதூக்கி வளர்ந்துள்ளது. 1986 ஆம் ஆண்டு யூலைத் திங்களில் எல்பிரன்ரோன் சிறைச்சாலையில் முந்நூறுக்கு மேற்பட்ட சைனிங்பாத் இயக்கத் தீவிரவாதிகளை அரசபடையினர் கொன்று குவித்தபோது, மீண்டும் விரைவாக ஒன்றுசேர்ந்த சைனிங்பாத் இயக்கத்தினர் தங்கள் நடவடிக்கைகளை பட்டணங்கள்மீதுமேற்கொண்டனர். ஒவ்வொரு முறையும் சைனிங்பாத் இயக்கம் சிறந்த மூளைசாலியும், எல்லாராலும் போற்றி மதிக்கப்படும் தலைவருமான திரு. அபிமேல் குஸ்மன் அவர்களால் காப்பாற்றப்பட்டுவந்தது. சிலந்தி எப்படி தனது வலையைத் திருத்தியமைக்குமோ அதேபோன்று திரு. குஸ்மன் அவர்கள் சைனிங்பாத் இயக்கத்தை திருத்தியமைத்துவருவதை ''பயங்கரவாத பியூரோகிறேசி'' (Bureaucracy of Terror) எனக் குறிப்பிடுகின்றார் அவ்வியக்கங்களின் நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்ற திரு. கார்லோஸ் ஜவன் டிகிரகொரி அவர்கள்.

□ □ □

*சுவர்க்கத்திற்குப் போயும் நான் சிரிக்க அனுமதிக்கப்படவில்லை என்றால், நான் சுவர்க்கத்திற்குப் போகத் தயாராக இல்லை.*

*-மார்டின் லூதர்-*

# அரசியலில் புத்தகுருமார் வகிக்கும் பங்கு

(டெயிலி நியூஸ் - 16-10-1992)

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடாதிருத்தல் வேண்டுமென அரசியல்வாதிகள் உதட்டளவில் பெரிதாகப் பேசிக்கொண்டபோதிலும், எல்லா அரசியல் கட்சிகளும் தங்கள் அரசியல் நோக்கங்களுக்காக அவர்களையே பயன்படுத்திவருகின்றன. சுதந்திரக்கட்சிக்குள் நிலவும் உட்பூசல் காரணமாக பிக்குகள் அமைப்பு என்றும், பிக்குகள் பல மண்டலய என்றும் பலவிதமாக அழைக்கப்படும் ஒரு அமைப்பு அக்கட்சியால் அமைக்கப்பட்டது அரசியல் கட்சிகளின் இந்தப் போக்கை வெளிப்படுத்துகின்றது.

சுதந்திரக் கட்சியின் தலைவராகத் திருமதி பண்டாரநாயக்கா அவர்கள் தொடர்ந்தும் பதவியில் இருப்பதை இந்தக் கட்சியிலுள்ள பௌத்தபிக்குகள் ஆதரிக்கின்றார்களா அல்லது அனுராவின் தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சியின் தலைவராகத் அவரது தாயாரின் பின் திரு.அனுரா பண்டாரநாயக்கா அவர்கள் பதவி ஏற்பதை ஆதரிக்கின்றார்களா? என்பதையிட்டு நாம் கவலைப்படவில்லை இருப்பினும் முரண்பாடான அறிக்கைகள் ஒவ்வொன்றிலும் பௌத்தபிக்கு ஒருவர் கையெழுத்திட்டிருப்பது பௌத்த மகா சங்கத்தின் பெருமைக்கு இழிவை ஏற்படுத்துவதாயிருக்கின்றது.

பல்வேறு வகையான காரணங்களுக்காக பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுகின்றார்கள். ஒரு அரசியல் கட்சியில் உண்மையிலேயே சிலர் நல்ல நோக்கத்திற்காகவும் சிலர் இழிந்த நோக்கத்திற்காகவும் ஈடுபடுகின்றார்கள். தேசியவாத அலையைக் கிளப்பியதன் மூலம் 1956 ஆம் ஆண்டு ஆட்சி செயலுரிமையை பெற்றுக்கொண்ட திரு.எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்கள் தனக்குக் கிடைத்த அந்தவெற்றி பௌத்த சங்கம்,

மருத்துவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் தனது கூட்டணியான மக்கள் ஐக்கிய முன்னணிக்கு வழங்கிய ஆதரவு காரணமாகவே சாத்தியமானதெனக் கூறியுள்ளார்.

திரு பண்டாரநாயக்கா அவர்களைப் பதவியில் அமர்த்துவதற்கு பௌத்த பிக்குகள் தங்கள் ஆதரவை வழங்கியுள்ளார்களென்பதையும் உண்மையாகவே தங்கள் தேசியக் கோட்பாடு, பண்பாடு மற்றும் நெறி(மதம்) ஆகியவற்றை மேம்படுத்த வேண்டுமென்னும் நோக்கிலேயே அவர்கள் இதைச் செய்தார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. நாட்டுப்பற்றுக் காரணமாகவும் அவர்கள் இதைச் செய்தார்கள். ஆனால் திரு.பண்டாரநாயக்கா அவர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட இந்த ஆற்றலே அவரைப் படுகொலை செய்வதிலும் பங்கேற்றிருந்தது. அவரைக் கொல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதிக்கு ஒரு பௌத்த பிக்குவே காரணமாக இருந்ததுடன் அவரைக் கொன்றதும் ஒரு பௌத்தபிக்குவே.

ஆற்றலுள்ள பௌத்த பிக்குகளும் அரசியலில் ஈடுபட்டிருந்தார்கள். நான் மாணவனாகவிருந்தபொழுது வண.வல்பொலராகுல அவர்கள் லங்கா சமசமாஜக் கட்சியின் தீவிர ஆதரவாளராகவிருந்தார். வண உடகந்தவெலசிறி சரணங்கார அவர்கள் பொதுவுடமைக் கட்சியில் இணைந்திருந்தார். திரு.பண்டாரநாயக்கா அவர்களுக்கு ஆதரவு கொடுத்த பௌத்த பிக்குகளில் வண.தல்பாவில சீலவன்ச அவர்கள் குறிப்பிடத்தக்கவராக விளங்குகின்றார். இவர்களை அரசியலுக்குத் தந்த பௌத்தமே புத்தரகீர்த்த மற்றும் சோமராம போன்றோரையும் தந்தது. இந்த இருவரும் கொலைகாரர்களாக மாறுவதற்குக் காரணமாகவிருந்ததும் அரசியலே.

அரசியல் மேடைகளில் திறமையாகப் பேசக்கூடிய ஆற்றல்வாய்ந்த பௌத்த பிக்குகள், இலங்கையில் வாழ்ந்திருக்கின்றார்கள். ஐக்கிய தேசியக்கட்சிக்காக நீண்டகாலம் அயராது உழைத்த மறைந்த வண.தேவ மொட்டாவ அமரவன்ச மற்றும் வண.மீதியகொட குணரத்ன ஆகியோர் தங்கள் மேடைப்பேச்சால் பெருந்தொகையான மக்களைத் தம்பால் ஈர்க்கும் ஆற்றல் வாய்ந்தவாகளாக விளங்கினர். 1965 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வெற்றிக்கு வித்திட்ட இவர்களே 1970 ஆம் ஆண்டு அதன் வீழ்ச்சிக்கும் வித்திட்டனர். அரசியல் போதையூட்டுவதென்றும் அதில் தோல்வியுறுபவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்றும் புத்தகுருமார்களும் தெரிந்து வைத்திருந்தார்கள்.

தேசிய நூலகப் பிரிவு

அரசியல்கட்சிகள் பௌத்த பிக்குகளைக்கொண்ட அமைப்புக்களை உருவாக்கும்பொழுது இந்த வரலாற்று உண்மைகளை நாம் பின்நோக்கிப் பார்க்கவேண்டியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியை அல்லது சுதந்திரக் கட்சியை ஆட்சிபீடத்தில் ஏற்றுவதற்கு பிக்குகள் ஐக்கிய முன்னணியையும், பிக்குகளைக் கொண்ட வேறு அமைப்புக்களையும் மகாசங்கம் உருவாக்கிய இந்த நாட்டிலே, அரசியல் நோக்கங்களுக்காக பிக்கு பலமண்டலய என்ற ஒரு அமைப்பை இலங்கை சுதந்திரக்கட்சி உருவாக்கியது ஒன்றும் பெரிய விடயமல்ல. ஆனால் இது ஒரு சிறிய அமைப்பாக இருந்தபோதிலும், தவறான நோக்கத்திற்காகவே அமைக்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

தனிப்பட்ட ஒவ்வொரு பிக்குவும் அரசியல்வாதிகளுடன் உறவை வைத்திருக்கவே விரும்புவர். ஏனைய புத்தமதத்தினர்களைப் போல், அரசியல்வாதிகளும் பல புத்தகோவில்களின் தர்மகர்த்தாக்களாக (Dayakayas) விளங்குகின்றார்கள். தங்கள் கோவில்களை மேம்படுத்தவும் தாங்கள் மேற்கொள்ளும் சமூகப் பணிகளுக்கும் மற்றைய பணிகளுக்கும் ஆதரவுதேடவும் இந்தப் புத்த பிக்குகள், மந்திரிகளையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும், அரசியல்வாதிகளையும் நாடிச்செல்வர். மக்களைத் தம்பால் ஈர்க்கத்தக்கவகையில் இந்தப்பிக்குகள் செல்வாக்குப் பெற்றவர்களாயிருப்பின், இதைப் பயன்படுத்தி இம் மக்களின் வாக்குகளைப் பெற அரசியல்வாதிகள் பின்நிற்கமாட்டார்கள்.

பௌத்த பிக்குகள் பௌத்த மதத்தினதோ அல்லது பௌத்த மதத்தினரதோ மேம்பாட்டுக்காக அரசியலில் ஈடுபடுவதில்லை என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இந்தவுலகத்தின் சிற்றின்ப வாழ்விலிருந்தும், நெறிசார்பற்ற விடயங்களிலிருந்தும் பிக்குகள் ஒதுங்கி இருத்தல் வேண்டுமென பௌத்த நெறியினரும், கற்றறிந்த மதிப்புவாய்ந்த புத்தபிக்குகளும் காலத்துக்குக் காலம் வலியுறுத்திவந்துள்ளார்கள். இருப்பினும் புத்தபிக்குகள் அரசியலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கேற்ற முயற்சிகள் மகா சங்கத்தாலோ மற்றவர்களாலோ மேற்கொள்ளப்படவில்லை.

இப்பொழுது சுதந்திரக்கட்சி பிக்கு பல மண்டலய என்ற அமைப்பை உருவாக்கி இருப்பதாலும், மகா சங்கத்தின் ஆதரவைப்பெற்ற மற்றக் கட்சிகளும் இக்கட்சியின் உதாரணத்தைப் பின்பற்றி இப்படியான அமைப்புகளை உருவாக்கும்சாத்தியம் இருப்பதாலும், நிலைமை மோசமடையுமுன் இதைப்பற்றி வெளிப்படையாகவே பேசவேண்டிய காலம் வந்துவிட்டது.

# தளபதிகளுக்கிடையேயுள்ள உட்பூசல்கள்

(சண்டே ரைம்ஸ் - 11-10-1992)

தனிநாடு அமைக்கும் தங்கள் இலட்சியத்தை அடைவதற்கு விடுதலைப் புலிகள் மிகவும் தீவிரமாக முயன்றுகொண்டிருக்கும் இந்த வேளையில் இலங்கையின் காப்பு வட்டாரம் முரண்பட்டு வெவ்வேறு திசைகளில் செல்வதாகத் தெரிகின்றது.

பதினைந்து ஆண்டுகாலமாக நடைபெற்றுவரும் பேரச்சம் தரும் மோதல்களின் பின்பும், பெரும் எண்ணிக்கையான உயிரிழப்புகளை ஏற்படுத்தி நிலைமையை முன்னரைவிட மேலும் மோசமடையச் செய்துள்ள இந்தப்போர் இலங்கையின் துன்பகர நிகழ்வாகவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றி விடுதலைப்புலிகளை வெற்றிகொள்வதன் மூலம் போருக்கு முடிவு ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் சென்ற திங்கள் நிலவின.

விடுதலைப் புலிகளை நிலைகுலையச் செய்வதன் மூலம் ஒரு அரசியல் தீர்வை எட்ட அவர்களுக்கு நெருக்குதல் கொடுக்கமுடியுமென அரசாங்கம் அந்த வேளையில் நம்பிக்கை கொண்டிருந்தது. படையத் தலைமை மேலாளர்களுக்கும், பிரதம மந்திரியும் உதவிக்காப்பு மந்திரியுமான திரு. டி. பி. விஜேதுங்கா அவர்களுக்கும் காப்புப் படையினர் வழங்கிய இப்படியான தகவல்களின் அடிப்படையிலேயே மிகவும் விரைவில் இந்தப்

போரில் வெற்றிகாணவிருப்பதாக திரு. விஜேதுங்கா அவர்கள் வெளிப்படையாகக் கூறியிருந்தார். தற்பொழுது தோன்றியுள்ள துர்ப்பாக்கிய நிலையை நோக்குபவர்கள் வெற்றியாருக்கு எனக் கேட்கிறார்கள்.

காப்பு மேலாளர்களுக்கிடையே சில காலமாக நிலவிய மனக்குமுறல்கள் சென்ற ஆண்டு ஆரம்பத்தில் தற்காலிகமாகத் தணிக்கப்பட்டிருந்த போதிலும், மீண்டும் முன்னெப்பொழுதுமில்லாதவாறு தலைதூக்கியுள்ளன.

## நடுவரின் பங்கு

இந்த விடயங்களைக் கண்டும் காணாதது போல் இருக்க வேண்டுமெனச் சிலர் கூறிய போதிலும், மேலும் மோசமடைவதைத் தடுக்கவேண்டுமாயின் இவற்றை வெளிப்படையாக பேசுவதன் மூலமே இவை பெறவேண்டிய கவனத்தைப் பெறமுடியுமென மற்றவர்கள் கருதுகிறார்கள்.

காப்புச் செயலரான திரு. சிறில் றனதுங்கா அவர்களுடனும் கூட்டுப்படைத் தலைமையக மேலாளர் திரு. கமில்ரன் வனசிங்க அவர்களுடனும், பொதுவாக முப்படைத்தளபதிகளும் குறிப்பாக தரைப்படைத்தளபதியும் கொண்டிருந்த கருத்து வேறுபாடுகளே இந்த மோதல் தோன்றக் காரணமாகவிருந்தது.

இக்கருத்து வேறுபாடுகள் இந்த ஆண்டு ஆரம்பப் பகுதியில் உச்சக்கட்டத்தை அடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கத்திற்கு ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் பணியை ஆற்றிவரும் திரு. கே. என். சொக்சி அவர்களை நடுவராகக் கொண்டு சனாதிபதி இறணசிங்க பிரேமதாசா அவர்களே இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிடவேண்டியிருந்தது.

போரில் எதிர்பார்த்த வெற்றியைக் கூட்டுப்படைத்தலைமையகம் பெற்றுத்தரவில்லையென்ற கருத்து நிலவிய அந்த வேளையில், போரில் வெற்றி பெறவேண்டுமாயின் முழுச் செயலுரிமையும் கூட்டுப்படைத் தலைமையகத்திற் கூடாகவன்றி தங்களுக்கு வழங்கப்படவேண்டுமென முப்படைத்தளபதிகள் சனாதிபதியவர்களைக் கோரினர்.

இதற்கு லெப். ஜெனறல் வனசிங்க அவர்களும் ஜெனறல் இறணதுங்க அவர்களும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருந்த

போதிலும் முப்படைத்தளபதிகளின் வழியில் செல்லவே சனா திபதி தீர்மானித்தார்.

இது 1992 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற்றது. ஆனால் இது நடந்த ஆறு திங்கள் கூட முடிவுறுமுன், கூட்டுப் படைத்தலைமையகம் தவறு ஏதும் செய்யவில்லை என்று தீர்மா னித்த சனாதிபதி அவர்கள் செயலுரிமையை மீண்டும் அதனிடம் வழங்கினார்.

பொதுசனக் காப்புச் சட்டத்தின் 40 ஆம் அத்தியாயத் தின் 5 ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டத்தின்படி சனா திபதி பிரேமதாசா அவர்கள் கூட்டுப்படைத் தலைமையை 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாளன்று மீளாய்வு செய் தார்.

இந்தச் சட்டத்தின் சர்ச்சைக்குரிய ஒரு பந்தியில் கீழ்க் கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் முப்படைகளும் காவல்துறையினரும், கூட்டுப்படைகளின் நட வடிக்கைத் தலைமையக மேலாளரின் கட்டளைக்கமைய நடந்து கொள்ளவேண்டும். இதற்கமைய தரைப்படைத் தளபதியும், கடற்படைத்தளபதியும், வான்படைத் தளபதியும், காவல்துறை மா அதிபரும், அவரின் கட்டளைக்கமைய நடந்து கொள்ள வேண்டும்.

கூட்டுப்படைத் தளபதியின் கட்டளைக்கு அமையவே முப் படைத்தளபதிகளும் நடந்து கொள்ள வேண்டும் என்பது இத னால் புலனாகின்றது.

இந்தச் சட்டமூலம் கொண்டுவந்த மூன்று திங்கள் முடி வடையுமுன்னரே செயலுரிமைகள் யாவும் கூட்டுப்படைத் தலை மையகத்திடம் இருக்க வேண்டியதில்லை என்பதை சனாதிபதி அவர்கள் உணர்ந்தார்.

இதன் முடிவாக 1992 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி மூலம் போரை நடாத்திச் செல்லும் சகல உரிமைகளையும் முப் படைத் தளபதிகளிடம் ஒப்படைத்ததுடன் கூட்டுப்படைத் தலை மையகம் ஆலோசனை கூறும் பணியை மாத்திரம் ஆற்றிவரு மெனவும் சனாதிபதி அறிவித்தார்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டத்திலுள்ள முக்கியமான பிரிவுகள் கீழ்க்கண்டவாறு கூறுகின்றன.

பிரிவு 6 (அ):- பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் ஆயுதப்படையினரும், காவல்துறையினரும் முறையே தங்கள் தளபதிகளான தரைப்படைத் தளபதியினதும் கடற்படைத் தளபதியினதும், வான்படைத் தளபதியினதும், காவல்துறை மா அதிபரினதும் கட்டளைகளுக்கமையவே செயற்படுவர்.

திரு. சொக்சி அவர்களால் தயாரிக்கப்பட்ட சட்டத்தின் பிரிவு 6 (ஆ) பின்வருமாறு கூறுகின்றது:-

பயங்கர வாதத்திற்கெதிரான நடவடிக்கைகளை திட்டமிடல் உருவாக்கல், தீர்மானித்தல், மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை முப்படைத் தளபதிகளும் காவல்துறை மா அதிபரும் ஒருங்கிணைந்து மேற்கொள்வதுடன் அவர்களே அதற்குப் பொறுப்பாகவும் இருப்பர்.

பிரிவு 6 (இ) இந்தத் திட்டங்களையும் அவர்களால் மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகளையும் முப்படைகளின் கூட்டு நடவடிக்கைக்குப் பொறுப்பான தளபதிக்கு மேற் கூறப்பட்ட முப்படைத்தளபதிகளும், காவல்துறை மா அதிபரும் தவறாது தெரியப்படுத்தவேண்டும்.

ஆயுதப் படையினர் மற்றும் காவல் துறையினரின் போரிடும் ஆற்றல் பற்றியும், அவர்கள் தயார் நிலையிலுள்ளனரா என்பது பற்றியும், அவர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் தளபாடங்கள் பற்றியும், முப்படைத் தளபதிகளுடனும் காவல்துறை மா அதிபருடனும் கலந்தாலோசித்தபின் காப்புச் சபைக்கு ஆலோசனை கூறும் கடமை கூட்டுப்படைத்தலைமைப் பொறுப்பாளருக்குரியது என சட்டத்தின் பிரிவு 7 (ஆ) வில் கூறப்பட்டுள்ளது.

அதை உற்று நோக்குகையில், முப்படைத் தளபதிகளுக்குச் செயலுரிமை வழங்கப்பட்டதைக் காணக் கூடியதாகவிருக்கின்றது. ஆனால் விடயங்கள் அத்துடன் முடிவுறவில்லை. இந்தச் சட்டங்களிலுள்ள செயலுரிமைகள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும், முப்படைத்தளபதிகளும் கூட்டுப்படைத் தலைமையகமும் முரண்பட்ட கருத்தையே கொண்டிருந்தன.

இந்த நிலையில் கூட்டுப்படைத்தலைமைப் பொறுப்பாள ரான திரு. கமில்ரன் வனசிங்க அவர்கள் புதிய சட்டத்தின் கீழ் தனக்குள்ள செயலுரிமையை விளக்கிக் கடிதமொன்றை 1992ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 4 ஆம் திகதி முப்படைத் தளபதிக ளுக்கு அனுப்பிவைத்தார். வர்த்தமானியில் உள்ள விடயங்களுக்கு கூட்டுப்படைத் தலைமையகம் தவறான விளக்கம் கொடுத்துள் ளதாக ஆட்சேபித்து முப்படைத் தளபதிகளும் தாங்கள் ஒன்றி ணைந்து தயாரித்த கடிதமொன்றை லெப். ஜெனறல் வனசிங்க அவர்களுக்கு 1992 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 7ஆம் திகதி அனுப்பிவைத்தனர்.

## சட்டங்கள்

சட்டத்திலுள்ள ஒழுங்குமுறைகள் எந்தவொரு ஐயப்பாட் டையும் கொண்டிராதபடியால் இத்தருணத்தில் அவற்றை ஆலோசிப்பதற்கு ஒரு மாநாட்டைக் கூட்ட வேண்டிய அவசிய மில்லை எனத்தாங்கள் கருதுவதாக திரு. கமில்ரன் வனசிங்க அவர்களுடைய கடிதத்தின் இரண்டாம் பந்தி சம்பந்தமாக தரைப்படை தளபதியான லெப்ரினன்ட் ஜெனறல் எல். டி. சி. சி. வைத்தியரத்தின, கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிறல் ஏ. டபிள்யூ. இ. சி. பெர்னாந்து, வான் படைத்தளபதியான எயர் மார்சல் என். ஜே. ரி. த எஸ். குணவர்த்தன மற்றும் காவல் துறை மாஅதிபரான இ. பி. ஜே. பெரேரா ஆகியோர் கையொப்பமிட்டு எழுதிய அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்த னர்.

மீளாய்வுக்குள்ளான சில விடயங்கள் பற்றிக் தங்கள் கருத் துக்களை முப்படைத் தளபதிகள் பின்வருமாறு விளக்கியுள்ள னர்,

## பந்தி 6 (ஆ) நடவடிக்கைகள்

இப்பந்தியில் கூறப்பட்டுள்ள நடைமுறை விதிகள் தெளி வாகவிருப்பதால் அவற்றை மேலும் தெளிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

## ஆலோசனை/மாநாடுகள்

காவல்துறை மாஅதிபரும், முப்படைத்தளபதிகளும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் வகுக்கும் திட்டங்களும் செயற் பாடுகளும் மாற்றமுடையவைகளாய் இருக்குமென்பதால் கூட்

டுப்படைத்தலைமையகத்திற்கு அவர்களால் வழங்கப்படும் தகவல்கள் ஒழுங்குமுறையாகவும், சீராகவும் இருக்காது மாறுபட்டதாகவேயிருக்கும்.

இந்நிலையில் சட்டத்தின் ஆறாம் பந்தியின்(இ)பிரிவின் கீழ் திட்டங்களையும், நடவடிக்கைகளையும், கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு அறிவிக்கும் கடப்பாடு முப்படைத்தளபதிகளைச் சார்ந்திருப்பதால் அவர்களின் விருப்பத்திற்கொப்பவே மாநாட்டிற்கான திகதிகள் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

## பணிமுறை அறிவிப்புகள்/அறிக்கைகள்

சட்டத்தின் ஆறாம் பந்தியிலுள்ள(இ)பிரிவில் கூறியிருப்பதுபோல் தங்களுடைய திட்டங்களையும், தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளையும் கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு தெரிவிக்கும் பொறுப்பு முப்படைத்தளபதிகளினதும், காவல்துறை மா அதிபரினதுமேயல்லாது வேறு யாருடையதுமல்ல. மேலும் எந்தத் தகவல்களும் பொருத்தமானவையெனவும், அவசியமானவையெனவும் கண்டால் அவற்றைக் கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு முப்படைத்தளபதிகளாலும், காவல்துறை மா அதிபராலும் அனுப்பிவைக்கப்படும்.

## கிடைக்கப்பட்ட பணிப்புரைக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

சட்டத்தின் 7-ஆம் பந்தியிலுள்ள(அ)பிரிவின் கீழ் சனாதிபதியாலும் காப்புச் சபையாலும் கூட்டுப்படைத்தலைமையகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் பணிப்புரைகள் தெளிவாகவிருப்பதுடன் இந்தச் சட்டத்திற்கு அப்பால் காப்புச் சபையால் அவருக்கு வழங்கப்படும் பணிப்புரைகள் முப்படைத்தளபதிகளுக்கும் காவல்துறை மா அதிபருக்கும் தெரியப்படுத்தப்பட்டு அவை இவரால் நடைமுறைப்படுத்தப்படும்.

## செய்திகளை வெளிப்படுத்தல்.

முப்படைத்தளபதிகளுக்கும், காவல்துறை மா அதிபருக்கும் முறையே காப்புப்படையினர் மற்றும் காவல்துறையினர் சம்பந்தமான செய்திகளை வெளியிடும் உரிமையுண்டு.

## இணைப்பு மேலாளர்கள்.

உங்கள் கடிதத்தின் 13 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு மேலாளர் பற்றி சட்டத்தில் ஒன்றும் கூறப்படவில்லை.

தெளிவுபடுத்தப்படவேண்டிய விடயம் ஏதேனும் உண்டாயின் சட்டத்தின் பிரகாரம் அதைக் காப்புச்சபையே தீர்மானிக்க வேண்டுமென அது கூறுகின்றது.

இப்படியான சச்சரவுகள் கொழும்பில் நடைபெற்ற செய்தி படையினருக்கு தெரியவந்ததும், அவர்களிடையே குழப்பம் ஏற்பட்டது.

சனாதிபதி அவர்கள் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியதும் இந்தச் சச்சரவு, உச்சக்கட்டத்தை அடைந்தது.

வெற்றிலைக்கேணி முன்னணிக் காப்பு எல்லையை ஊடறுத்துச் சென்ற விடுதலைப்புலிகள் பல மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான படையத் தளபாடங்களைச் சென்றகிழமை கைப்பற்றியதைத் தொடர்ந்து இந்த விவகாரம் மோசமடைய ஆரம்பித்தது.

படையினருக்கு ஏற்பட்ட இந்த இழப்புக்குச் சில நாட்களுக்கு முன்னரே தரைப்படைத் தளபதி சிசில் வைத்தியரத்தின அவர்களும் காப்புச் செயலர் சிறில்இறணங்க அவர்களும் வெற்றிலைக்கேணி விடயமாகக் காப்புச் சபையில் கடுமையாக விவாதித்துக் கொண்டனர்.

## இழப்புக்களின் விகிதம்

படையினர் இழப்பு விகிதம் அதிகரித்ததைத் தொடர்ந்து இனிமேல் மேற்கொள்ளவிருக்கும் படைய நடவடிக்கைகளில் கூட்டுப்படைத் தலைமையகத்தின் பங்கு கூடுதலாகவிருக்கவேண்டுமென சனாதிபதி பிரேமதாசா அவர்கள் புதன்கிழமை கருதினார்.

இதன் முடிவாக முப்படைத்தளபதிகளையும் அழைத்த சனாதிபதி தனது தீர்மானத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். இதைக்கேட்ட முப்படைத்தளபதிகளும் நிலைகுலைந்து போயினர். இதனால் ஆத்திரமடைந்த வான்படைத்தளபதியான ரெறன்ஸ் குணவர்த்தன அவர்கள், போர் முனையிலுள்ள தமது

படைவீரர்களை தான் சென்று பார்ப்பதற்கும் கூட்டுப்படைத் தலைமையகத்தின் ஒப்புதலைப் பெறவேண்டுமா எனக்கேட்ட பொழுது, சனாதிபதியவர்கள் திரு. குணவர்த்தன இப்பொழுதும் தளபதியெனவும், அது அவரது கடமையெனவும் அவருக்கு நினைவுபடுத்தினார்.

இதேவேளை படையிலிருந்து பலர் தப்பியோடுவது அரசாங்கத்திற்குக் கவலையைத்தருவதாகவுள்ளது.

காப்பு மேலாளர்களுக்கிடையே பூசல் நிலவும்போது, எங்கள் பெரிய எதிரியுடன் எப்படி நாம் திறமையாகப் போர் புரியப் போகின்றோம் என்பதே நாட்டு மக்களின் முதன்மைய கேள்வியாகவிருக்கின்றது.

படையை விட்டுத் தப்பியோடிச் சென்றவர்களுக் கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் படமாட்டாதென உறுதிகூறி அவர்களைத் திரும்பவும் தங்கள் தங்கள் படையணிகளுக்குத் திரும்புமாறு படைய மேலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆட்களைச் சேர்ப்பதற்கான முயற்சியும் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. வெலிக்கந்தையில் நடைபெறும் சம்பவங்கள் காரணமாக சிங்களப்பொது மக்கள் அங்கிருந்து வெளியேறுகின்றார்கள்.

அரசாங்கம் இந்த விடயங்களையிட்டு உடனடியாகக் கவனம் செலுத்தத் தவறின் அது இலங்கையைப் பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என அரசியல் பார்வையாளர் எச்சரித்துள்ளனர்.

□ — □

பூகோளத்தினால் மட்டுமே வரையறுக்கப்பட்ட ஒரு ஆன்மாவை நான் கொண்டிருந்தால் அதை நான் கேவலமாக நினைக்கிறேன்.

- ஜார்ஜ் சாண்டாயானா

# அண்டவெளியிலுள்ள உளவுப் புகைப்படக் கருவிகள் மூலம் பெறப்பட்ட படங்களை ருசியா விற்பனை செய்துவருகின்றது

- வில்லியம் கே. புறோட்

அண்மைக்காலமாக நீர்மூழ்கிக் கப்பல்களையும், ஜெற் போர் வானூர்திகளையும், அணுக்குண்டுகளுக்குப் பாவிக்கப்படும் எரிபொருள்களையும் உலகமெங்கும் விற்றுவரும் ருசியா, உலகை உளவுபார்ப்பதற்காக அண்டவெளிக்கு அனுப்பப்பட்ட செய்மதிகளில் பொருத்தப்பட்டுள்ள அதிக ஆற்றல் வாய்ந்த புகைப்படக் கருவிகள் மூலம் எடுக்கப்பட்டு இரகசியம் என வெளிஉலகத்துக்குத் தெரியாது மறைத்துவைக்கப்பட்ட படங்களை இப்போது விற்பனை செய்துவருகின்றது.

வேவுபார்த்தல் மூலம் வாசிங்டனை எடுத்த படங்களில் அங்குள்ள வெள்ளை மாளிகை, சட்டசபைக் கட்டிடம், படையத் தலைமைப்பீடம் ஆகியவற்றின் வார இறுதிநாட் தோற்றங்கள் தெளிவாகத் தெரிகின்றன. இவற்றின் அருகிலுள்ள வாகனங்கள் நிறுத்தும் ஒரு இடத்தில் கிழமை நாட்களில் காணப்படும் வாகனங்களிலும் பார்க்கக் குறைவாகவே வாகனங்கள் காணப்படுகின்றன.

வாசிங்டன் எங்கும் பரவலாக விற்கப்படும் இப்படங்கள் உளவு பார்க்கும் நிபுணர்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ருசியாவின் திறமான வேவுப் படங்களின் வெளிப்பாடானது வருங்காலத்தில் அமெரிக்க அரசாங்கத்திற்கு அதன் செய்மதி சுவடிக் கூடத்தைப் பார்ப்பதற்கு விடும்படி அழுத்தங்களை ஏற்படுத்தும்.

கெடுபிடிப்போர் முடிந்தபின்னர் ருசியாவின் படைய அண்டவெளித் திட்டம் நீடித்திருக்கவேண்டுமானால் அது வேவுபார்க்கும் செய்மதிகள் உட்பட்ட தனது நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என ருசிய மேலாளர் ஒருவர் கூறியதாகப் படையத் தினசரித்தாளான கிராஸ்னயா சிவெஸ்தா (Krasnaya Zvezda) சென்ற வாரம் குறிப்பிட்டுள்ளது. ''துணிகரமான திட்டங்கள் எமக்குத் தேவை'' எனக் கேணல் ஜெனரல் கிளாடிமீர் இயனோவ் அவர்கள் அந்தச் செய்தித் தாளுக்குக் கூறினார்.

மேற்கு நாடுகளில் விற்பனை செய்யப்பட்டுவரும் மற்றெல்லாச் செய்மதிப் படங்களையும் விட ருசியா 1987ஆம் ஆண்டிலிருந்து விற்பனை செய்துவந்த செய்மதிப் படங்கள் இலகுவாகப் பார்க்கக்கூடியனவாகவிருந்தாலும், இப்பொழுது விற்பனை செய்யப்பட்டுவரும் புதிய செய்மதிப்படங்கள் அவைகளிலும் பார்க்கச் சிறந்தவையாகவுள்ளன. இந்தப் படத்தில் இரண்டு மீற்றருக்குச் சற்றுக் குறைவாகவுள்ள உருவங்களையோ அல்லது குறுக்காக ஆறு அடிக்குக் கூடுதலாகவுள்ள உருவங்களையோ பார்க்கக்கூடியதாகவுள்ளது. ஆகக்குறைந்தளவு ஐந்து மீற்றர் வரையான உருவங்களைப் பார்க்கக்கூடிய செய்மதிப் படங்களையே ருசியா இவ்வளவு காலமும் விற்றுவந்துள்ளது.

பிரான்சிஸ் ஸ்பொட் (Spot) செய்மதி மூலம் எடுக்கப்பட்ட படங்களில் 10 மீற்றர் வரையிலான உருவங்களையும், ஐக்கிய அமெரிக்காவின் ''லான்ட்சாற்'' (Landsat) செய்மதி மூலம் எடுக்கப்பட்ட படங்களில் 30 மீற்றர் வரையிலான உருவங்களையும் பார்க்கக்கூடியதாகவிருக்கிறது.

''எல்லா நாடுகளாலும் இதுவரை வெளியிடப்பட்ட செய்மதிப் படங்களில் ருசியாவினால் வெளியிடப்பட்ட செய்மதிப் படங்களே மிகச்சிறந்தவை'' என வாசிங்டனிலுள்ள அனைத்துலகத் தந்திரோபாய ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேவுத்துறை நிபுணரான கலாநிதி பீற்றர் டி. சிம்மர்மான் அவர்கள் கூறுகின்றார்.

அமெரிக்க சமஷ்டி அரசின் வேவுத் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவர் தன்னை யாரென வெளியிடவேண்டாமென்ற நிபந்தனையுடன் இதுபற்றிப் பேசுகையில், இந்தப் படங்கள் ஆச்சரியப்படத்தக்கவையாகவுள்ளதுடன் அவை ருசியாவின் மிக ஆற்றல் வாய்ந்த வேவுபார்க்கும் செய்மதி மூலம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதில் கேள்விக்கே இடமில்லை எனக்கூறுகின்றார்.

ரெக்சாஸ் மாநிலத்திலுள்ள ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக நிலையமான சென்றல் ரேடிங் சிஸ்ரம்ஸ் ஒப் ஆர்லிங்ரன் (Trading Systems of Arlington Texas) என்னும் நிறுவனத்தினால் இந்தப் புதிய படங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனத்தின் செய்மதிப் படப்பிரிவின் பொது முகாமையாளரான திரு. வெலான் எச். மின்சோ அவர்கள் தொலைபேசி மூலம் அளித்த செவ்வியில் விற்பனை செய்யப்பட்டுவரும் படங்கள் திறமையான கருவிகள் மூலம் எடுக்கப்பட்டபோதிலும் அவை வேண்டுமென்றே தரம் குறைக்கப்பட்டு விற்பனைக்கு விடப்படுவதாகக் கூறினார்.

புதிய படங்கள், கப்பல் கூலியும் பிற செலவுகளும் உட்பட 3180 டாலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது எனத் திரு. மின்சோ கூறினார். அதேவேளை பிரான்சின் 'ஸ்பொட்' செய்மதி மூலம் எடுக்கப்பட்ட படங்களின் விலை 700 தொடக்கம் 3000 டாலர்களாகவும், அத்தோடு அமெரிக்காவின் ''லான்ட்சாற்'' மூலம் எடுக்கப்பட்ட படங்களின் விலை 200 தொடக்கம் 4400 டாலர்களாகவும் இருக்கின்றது.

கிழக்கும் மேற்கும் தங்கள் உளவுப்படக் கருவிகளின் ஆற்றல்களை இரகசியமாக வைத்திருப்பதால் படையப் போட்டியாளர்கள் தங்கள் படையத் தளங்களை வேவுபார்க்க முடியாமல் வைத்திருப்பது மிகவும் கடினமாகவுள்ளது. அமெரிக்காவின் வேவுபார்க்கும் திறமையான செய்மதிகள் ஒரு பந்தின் அளவையுடைய பொருளையும் படம் எடுக்கும் ஆற்றல்வாய்ந்தவை எனக் கூறப்பட்டுவருகின்றபோதும் இதை பெரும்பாலோர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஏற்கனவே 5 மீற்றர் உருவங்களைக் காட்டும் செய்மதிப் படங்களை விற்பனை செய்துவரும் திரு. மின்சோ அவர்களின் நிறுவனம், இவற்றிலும் பார்க்கச் சிறந்த படங்களை விற்பனை செய்வதற்கு ருசியாவுடன் யூலைத்திங்களில் ஒரு ஒப்பந்தம் செய்

துள்ளது. இதன் கருத்து உலகில் உள்ள பட்டணங்கள், படையத்தளங்கள் பற்றிய விபரங்கள் எல்லாம் எப்போதும் விற்பனைக்குத் தயாராகச் சுவடி நிலையங்களில் இருக்கின்றன என்பதேயாகும் பெரும்பாலான படங்கள் கடந்த மூன்றாண்டுகளில் எடுக்கப்பட்டவை, எனக்கூறும் திரு. மின்சோ அவர்கள் புதிய படங்கள் வேண்டுமோனாலும் பெற்றுக்கொள்ளலாம் எனக்கூறுகின்றார்.

ஒரு இடத்தின் படம் கிடைக்காவிடினும் கால நிலை சரியாகவிருந்தால் அதை நாம் பெற்றுவிடுவோம். புதிய படங்கள் வேண்டுமோனால் அனுமதிகிடைத்து 45 நாட்களில் பெற்றுவிடுவோம்.

நாங்கள் ஏற்கனவே அதிகமான படப்பிரதிகளை விற்பனைக்கு விட்டுள்ளோம். அத்தோடு எங்கள் படங்களை வாங்குவதற்குவாடிக்கையாளர்களிடமிருந்துமுன்னறிவித்தல்கள்கிடைத்து வருகின்றன எனக்கூறும் மின்சோ அவர்கள் இவ்வாடிக்கையாளர்கள் யார் என்பதைக் கூறுவதற்கு மறுத்து விட்டார்.

அனைத்துலக தந்திரோபாய ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த திரு. சிம்மர்மான் அவர்கள், ருசியாவின் இந்த முன்னோடி நடவடிக்கை இயற்கை அழிவைத்தடுப்பதற்கும் அறிவியல் ஆராய்ச்சிக்கும் சமூகத்துக்குப் பயன்படக்கூடிய செய்மதிப்படங்களை வெளியிடுமாறு அமெரிக்காவின் மீது அரசியல் அழுத்தங்களை ஏற்படுத்தும் எனக் கூறுகிறார்.

மத்திய புலனாய்வுத்துறை தனது கண்காணிப்பு வேவுப் படங்களிலிருந்து சுற்றாடல் மாற்றங்கள் பற்றி ஆராய்வதற்குச் சில அறிவியலாளர்களை மட்டுப்படுத்தப்பட்டளவில் அனுமதிப்பதற்கு ஆரம்பித்துள்ளது.

—★—

எண்ணங்களுக்கு அஃறிப்பதற்கு சரியான மேடை கிடைப்பதில்லை என்றால் அது சந்தைக்கடையில் போய் போட்டியிடமுடியாது.

-தாமஸ் மான்-

# கடலில் கந்துலவின் இறுதிக் கட்டம்

## கடற்படையின் கப்பல் கடலில் மூழ்கியது அரச படைகளின் வழங்கல் வசதிகளைச் சீர்குலைத்துள்ளது.

(*சண்டே ரைம்ஸ் - 01-11-1992*)

*பத்தளத்துக்கு அப்பால் அண்மையில் கடலில் மூழ்கியதும், கடற்படைக்குச் சொந்தமானதுமான 'கந்துல' என்ற தரையிறக்கும் கப்பலின் இழப்பு, தரைமூலம் உட்புகமுடியாத மன்னார் முல்லைத்தீவு, ஆனையிறவு, பூநகரி மற்றும் யாழ்குடா போன்ற நிலப்பரப்புக்களுக்கு வழங்கலை நாளும் மேற்கொள்ளும் அரசு படையினர் எதிர்கொள்ளும் இன்னல்களை வெளிப்படுத்தியுள்ளது. படைய நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆயுதங்களையும், தளபாடங்களையும் மாத்திரமன்றி, பல ஆயிரக்கணக்கான பொது மக்களுக்கும், படையத்திற்கும் தேவையான உணவு வகைகளையும், மருந்துவகைகளையும் வழங்கவேண்டியுள்ளது.*

*கடல் மூலமாகவே பல பகுதிகளுக்கு வழங்கலை மேற்கொள்ளவேண்டியிருப்பதால், நீண்ட காலத்துக்குத் தொடர்ச்சியாகக் கடற்படையினர் கப்பல்களைச் சேவையில் ஈடுபடுத்தவேண்டியிருப்புதுடன் தாங்களும் அயராது உழைக்கின்றனர். ஒருசில போக்குவரத்துக்கப்பல்களைக் கொண்டிருக்கும் கடற்படையினரினதும், வான்படையினரினதும் தேவையை முழுமைசெய்ய புதிய*

கப்பல்களையும், வானூர்திகளையும் கொள்வனவு செய்ய மில்லியன் கணக்கான பணத்தைச் செலவிட அரசமேலாளர்களால் முடியாதிருப்பது கவலையைத்தருகின்றது.

வழங்கல் நடவடிக்கைகளில் எவ்வளவு கூடுதலான கடற்படையினரின் மூன்று தரையிறங்கும் கப்பல்களும் ஈடுபடுத்தப் பட்டுள்ளன என்பதை கடலில் மூழ்கிய 'கந்துல' வின் வரலாறு எடுத்துக்காட்டுகின்றது.

கந்துல திருக்கோணமலையிலிருந்து முல்லைத்தீவுக்கும் ஆனையிறவுக்கும். யாழ்ப்பாணத்துக்கும் வழங்கல் நடவடிக்கையில் பல திங்களாக ஈடுபட்டிருந்தது. வை-8 வானூர்தி நாலு திங்களுக்கு முன் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து வான் மூலமான வழங்கல் தடைப்பட்டபின், மற்றைய இரு தரையிறக்கும் கப்பல்களைப் போல் கந்துலவும் தொடர்ச்சியாக வழங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

மன்னாருக்கு வழங்கலை மேற்கொள்வதற்கு ஈடுபடுத்தியிருந்த பாரிய தரையிறக்கும் கப்பலான ''றணகஜா'' வின் உந்து - கருவி அதன் நங்கூரத்தில் சிக்கியதன் காரணமாக சேதப்படுத்தப்பட்டதால் சிறிது காலம் சேவையில் ஈடுபடுத்தப்படாதிருந்தமையால், அதற்குப் பதிலாகக் கந்துலவை சேவையில் ஈடுபடுத்த இந்த திங்கள் முற்பகுதியில் கடற்படைத்தலைமையகம் அதற்கு அவசர அழைப்பை விடுத்தது.

ஆறுநாட்களுக்குப் போதுமான உணவுப் பொருள்கள் மாத்திரமே மன்னாரில் இருந்தமையால் கிழக்குக் கரையிலிருந்து தனது பிரயாணத்தை உடனடியாக மேற்கொண்ட கந்துல, தெற்குக் கரையைத்தாண்டிக் கொழும்புக்கு வந்து சேர்ந்ததும் இதில் வழங்கல் பொருள்கள் ஏற்றப்பட்டு மன்னாருக்கு அனுப்பப்பட்டன. இந்தப் பயணத்தை எவ்வித சிக்கலுமின்றி முடித்துவிட்டு மீண்டும் பொருள்களை ஏற்றிச் செல்ல கொழும்புக்குச் சென்றது.

## உணவு வழங்கல்.

நீண்டகாலம் ஓய்வின்றிக் கடமையிலீடுபட்டிருந்த கந்துலவின் தளபதியான லெப். கொமான்டர் எஸ். எம். கே. பெரேரா அவர்கள் அந்த நேரத்தில் விடுமுறையில் சென்றிருந்தார். பழு

தடைந்த கப்பல் ''றனகஜா'' மன்னாரிலிருந்து கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு திருத்தவேலை நடைபெற்றுக்கொண்டிருந்த தைத் தொடர்ந்து அதன் தளபதியாக லெப். கொமான்டர் எல். எம். பி. வீரசேகரா, திரு பெரேரா அவர்களுடைய இடத்துக்கு பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்டார்.

''கந்துல'' தனது புதிய தளபதியுடன் கொழும்பிலிருந்து ஒக்டோபர் திங்கள் 8 ஆம் திகதி வியாழன் அன்று புறப்பட்டது. அரிசியைக் கொண்ட பாரிய நாலுகொள்கலன்கள், விசுக்கோத்து மற்றும் பருப்பு வகை ஆகியவற்றால் கப்பலின் கீழ்த்தளம் நிரப்பப்பட்டிருந்தது. அத்துடன் 3ல் இருந்து 4 தொன் நிறையுள்ள மரக்கறிவகைகளும் படையத்திற்கு தேவையான 300 முட்கம்பிச் சுருள்களும் அதில் இருந்தது. 100 தொன் எடையுள்ள பொருள்களை ஏற்றிச் செல்லக்கூடிய இக்கப்பலில் 60 இல் இருந்து 65 தொன் எடையுள்ள பொருள்களே ஏற்றப்பட்டிருந்தன.

கொழும்பிலிருந்து இரவு 9 மணிக்கு வடக்கை நோக்கிப் புறப்பட்ட இக்கப்பல் மணித்தியாலயத்திற்கு ஏழு மைல் (கடல்) வேகத்தில் சென்றது. இது சென்றுகொண்டிருந்த கரையோரம் ஆபத்து நிறைந்தது அல்லாமையாலும், இதில் பொருத்தப்பட்ட இரண்டு 20 மில்லி மீற்றர் பீரங்கிகளும், இரண்டு 12.7 மி. மீ. பீரங்கிகளும் விடுதலைப்புலிகளின் எந்தச் சவாலையும் எதிர் கொள்ளப் போதியதாகவிருந்ததாலும், இதற்குத் துணையாக எந்தவொரு கப்பலும் செல்லவில்லை.

காலநிலை சீராக இல்லாததால் கப்பலிலுள்ள பொருள்களை மன்னாரில் இறக்குவது கடினமாகவிருக்கும் என்று இக்கப்பலிலுள்ளவர்கள் கருதினார்களேயல்லாது, கடற்கொந்தளிப்பு காரணமாக பயணத்தைத் தங்களால் தொடரமுடியாதிருக்குமென கருதவில்லை. இதுவுமன்றி கடல் கொந்தளிப்பிலும் அச்சம்தரும் புயலிலும் சிக்குண்டு அல்லலுறும் மீனவர்களைக் காப்பாற்றவும் இவற்றை எல்லாம் எதிர்கொள்ளவும் கூடியவகையிலேயே இக்கப்பல்கள் கட்டப்பட்டிருந்தன.

15 மணிநேரத்தில் செய்துமுடிக்கக்கூடிய இந்த 115 மைல் பயணத்தை இரவில் விரைவாக மேற்கொண்ட இக்கப்பல் நீர்கொழும்பு, சிலாபம் ஆகிய இடங்களைக் கடந்து சென்றபோது கால நிலை மோசமடையத் தொடங்கியது. இக்கப்பல் புத்தளத்தை விட்டுச் செல்லுகையில் பொழுது புலர்ந்துகொண்டிருந்தது.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

வெள்ளிக்கிழமை காலை 6மணிக்குப் பின்பே சிக்கல் எழத்தொடங்கியது. கந்துல தலவிலவுக்கு அப்பால் சென்று கொண்டிருந்தபொழுது அதன் இரண்டு பிரதான இயந்திரங் களும், மூன்று துணை இயந்திரங்களும் சமகாலத்தில் பழுத டைந்தன.எல்லாவிதமான முயற்சிகளை மேற்கொண்ட பொழு திலும் இந்த இயந்திரங்களை திரும்பவும் இயக்கவைக்கமுடிய வில்லை, டீசல் தாங்கிகளுக்குள் சிறு அளவிலான கடல் நீர் புகுந்ததே இதற்குக் காரணமெனக் கண்டுபிடிக்கப்பட்டது. இவ் இவ்வேளையில் எரிபொருள் இல்லாத இக்கப்பல் அலையினால் கரைக்கு இழுத்துச் செல்லப்பட்டது.

அடுத்தநாட் காலை 8 மணிக்கு 'கந்துல' ஆபத்தான நிலை யில் இருப்பதாக கொழும்பு தலைமைச் செயலகத்துக்கு தகவல் கிடைந்தது.

கந்தல இருந்த இடத்திற்கு 30 மைல்களுக்கு அப்பா லுள்ள கற்பிட்டி கடற்படைத்தளத்திற்கு இந்த ஆபத்தான நிலையை அறிவித்திருந்த போதிலும், கொந்தளிப்பான கடலில் செல்லக்கூடிய பாரிய கலன்கள் அவர்களிடம் இல்லாததாலும், சிறு மரக்கலங்களையாவது அவர்களிடமிருந்து பெறமுடியா ததாலும் அங்கிருந்தும் உதவியைப் பெறமுடியவில்லை.

விரைவாகச் செயற்பட்ட கொழும்பிலுள்ள கடற்படைக் கட்டுப்பாட்டு நிலையம் ஒருமணி நேரத்திற்குள் மிக விரைவா கச் செல்லக்கூடிய பீரங்கிக் கப்பலான 'சூரியா' வை பொறி யியலாளர்களுடனும், திருத்த வேலையில் ஈடுபடுபவர்களுட னும் அனுப்பியதாயினும், அக்கப்பலும் என்றுமில்லாதவாறு வேகமாகச் சென்றதாகிலும், 60 மைல் தொலைவிலுள்ள 'கந் துல' வை அடைவதற்கு அக்கப்பல் பல மணித்தியாலங்கள் பய ணம் செய்யவேண்டியிருந்தது.

## நடுக்கடலில் நடந்தது

இருப்பினும் கந்துலவிற்கு உதவக்கூடிய வேறு ஒரு கப்பல் அதற்கு அருகாமையில் வந்திருந்தது. முதல் நாள் மாலை கல் பிட்டியிலிருந்து சென்ற கரையோரக் கண்காணிப்பு படகான பி. 235 விரைந்து அதன் உதவிக்கு வந்திருந்தது. இக்கப்பல் கந்துல நின்ற இடத்திற்கு விரைந்து சென்றடைந்த போதிலும் பயங்கரமான கடற்கொந்தளிப்புக் காரணமாக அதற்கு கிட்ட

செல்லமுடியாமல் வெறுமனே அதற்கு நடக்கவிருக்கும் துன்ப நிகழ்வை பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலிருந்தது.

அலையினால் இழுத்துச் செல்லப்பட்ட 'கந்துல' பண்டைக்காலத்தின் கடற்பயணப்பட்டினமாக விளங்கிய தலவில விலுள்ள கிறீஸ்தவ தேவாலயத்தின் கோபுரத்தைப் பார்க்கக் கூடிய வகையில் அதற்கு மேற்குப்புறமாக ஒன்றரை மைல்களுக்கு அப்பால் தரைதட்டி நின்றது. தரைதட்டிய இக்கப்பலையும் இதிலிருந்தவர்களையும் கரையிலிருந்த பலர் ஆச்சரியமாக நோக்கியபோதிலும். அவர்களில் ஒரு சிலரே அது எப்பயான இன்னலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றதென்பதை உணரக்கூடியவர்களாயிருந்தனர்.

கப்பல் தரை தட்டியதும், மேலும் அது இழுபட்டுச் செல்வதைத் தடுப்பதற்கு கப்பலிலிருந்தவர்கள் நங்கூரங்களைக் கீழே போட்டார்கள். நங்கூரங்களைக் கீழே இறக்க உதவும் திருகு பொறியை இயக்குவதற்கு மின் சக்தி இல்லாமையினால் இவற்றின் பாரமான சங்கிலியை கைகளாலேயே மிகவும் சிரமப்பட்டுப் போடவேண்டியிருந்தது. நங்கூரமிடப்பட்ட இக்கப்பல் அங்கும் இங்கும் இழுபட்டுச் செல்லாதிருந்தது. பி. 235 ரக படகு கந்துலவுக்கு அருக 'மையில் இருந்தது அதிலிருந்த தளபதி, லெப்ரினன்ட், உதவி லெப்ரினன்ட், மாலுமிகளுக்கு பயிற்சியளிப்பவர் உட்பட 20 பேருக்கும் மனநிறைவைக் கொடுத்தது. தங்களுக்கு என்ன நடக்கவிருக்கின்றது என்பதை அறியாத மன்னாருக்குச் செல்ல இவர்களுடன் சென்ற மூன்று படைவீரர்களும், ஐந்து காவல் துறையினரும் இவர்களுடன் இருந்தமை இவர்களுக்குத் துணையாகவிருந்தது.

'கந்துல' வை மீட்பதற்கு கடற்படையினர் இலங்கைத் துறைமுக மேலாளர் சபையினரிடம் இழுவைப் படகு ஒன்றை விரைவாக அனுப்பும்படி கோரியிருந்த போதிலும் மாலை மூன்று மணிவரை கொழும்பைவிட்டு புறப்படாத இப்படகு பின்னர் அக்கப்பலிலிருந்த இடத்திற்கு வந்தடைந்ததாயினும் அதனிடமிருந்து எதுவித உதவியையும் பெறமுடியவில்லை.

திருத்த வேலையில் ஈடுபடுபவர்களுடன் இரண்டு மணியளவில் கந்துல இருந்த இடத்தையடைந்த கடற்படையினரின் கப்பலான 'சூரியா' கடல் அச்சம்தரும் வகையில் கொந்தளித்துக் கொண்டிருந்ததன் காரணமாக அமிழ்ந்துகொண்டிருந்த அக் கப்பலுக்கு அருகில் செல்லமுடியாமலும் அதற்கு உதவமுடியா

மலும் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவேண்டிய நிலையில் இருந்தது.

இருப்பினும் நண்பகலுக்குச் சற்றுமுன் எரிபொருளுடன் கல்பிட்டியிலிருந்து புறப்பட்ட ஒரு சிறிய டிங்கிப்படகு, கடல் கொந்தளிப்புடன் துணிகரமாகப் போராடியபின் பிற்பகல் 2. 30 மணிக்கு அந்தவிடத்தை வந்து அடைந்தது. அந்தப்படகில் மூன்று மாலுமிகளும் கற்பிட்டியைச் சேர்ந்த ஒரு மீனவரும் இருந்தனர்.

'கந்துல' வில் ஏறமுடியாத இச்சிறிய டிங்கிப்படகிலுள்ளவர்கள் எரிபொருள் கொண்ட கொள்கலன்களை கந்துலவிலுள்ளவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் புத்தி சாதுரியத்துடன் தங்கள் படகின் பக்கவாட்டிலிருந்து கடலில் போட்டனர். அதைக் கந்துலவில் இருந்தோர் இழுத்து எடுத்தனர். நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றிற்குப் போதுமான எரிபொருள் பிற்பகல் 3 மணியளவில் கந்துலவுக்கு மாற்றப்பட்டது.

இருப்பினும் ஆபத்தானதும் அச்சுறுத்தலைக் கொடுக்கக் கூடியதுமான வேறுபல சிக்கல்கள் தோன்ற ஆரம்பித்தன. காலநிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து பயங்கரமான அலைகள் கந்துலவின் மேல்தளத்தில் மோதத் தொடங்கியதும், அந்தக் கப்பல் ஈடாட ஆரம்பித்தது. இதனால் உறுதியாகக் கட்டப்பட்டிருந்த நாலு உணவுக் கொள்கலன்களின் கட்டுகளும் தளர்ந்து அக்கலன்கள் கப்பலின் தளத்தில் இரு பக்கங்களிலும் அடிபடத் தொடங்கின.

மாலைப்பொழுது நெருங்கிய நேரத்தில் பேராபத்து சூழ்ந்து கொண்டது. கப்பலை மிதக்கவைக்க உதவும் காற்று நிறைந்த மிதப்பு தாங்கிகளுக்குள் நீர் நிரம்ப ஆரம்பித்தது. எதன் காரணமாக இது ஏற்பட்டது என்பது இப்பொழுது தெரியாவிடினும், கப்பலின் கீழ்த்தளத்திற்குக் கீழே பொருத்தப்பட்ட இந்தத் தாங்கிகள் உணவுக்கொள்கலன் ஒன்றினால் தாக்கப்பட்டதன் காரணமாக பழுதடைந்திருக்கலாம் என்று எண்ணக்கூடியதாயிருக்கின்றது.

தங்கள் வசமுள்ள ஒரேயொரு நீர் இறைக்கும் இயந்திரத்தின் உதவியைக் கொண்டு தண்ணீரை வெளியேற்றுவதற்கு கப்பலிலுள்ளவர்கள் பெரிதும் முயன்றபோதிலும் தாங்கிகள் நீரால் நிரப்பப்பட்டுவிட்டன

மாலை 7 மணியவில் கந்துல வலதுபுறமாகச் சாய ஆரம்பித்ததும், அதன் லெப். கொமாண்டர் வீரசேகரா அவர்கள் அக்கப்பலைக் கைவிட்டு அனைவரையும் வெளியேறும்படி பணித்தார்.

இதைத் தொடர்ந்து மிதக்கும் மூன்று உயிர் காப்பிகளுக்குள் கந்துலவில் இருந்தவர்கள் ஏறிய பின் 'சூரியா' அவர்களை மீட்டெடுத்தது.

'சூரியாவும், கடற்கண்காணிப்புப்படகான பி-23 5ம், கற்பிட்டியிலிருந்து வந்த டிங்கி படகும், ஒருவிதமான உதவியும் செய்யவியலாது வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க, பக்கவாட்டாகச் சாய்ந்து கொண்டிருந்த கந்துல கடற்பரப்புக்குக் கீழே 25 அடி ஆழத்திற்கு பிற்பகல் 8 மணியளவில் மூழ்கியது.

காப்பு அமைச்சும் கடற்படைத்தலைமையகமும் இந்தக் கப்பல் மூழ்கியதையிட்டு விசாரணைகள் மேற்கொள்வார்கள் என்பதிலும், ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்துவார்கள் என்பதிலும் ஒருவித சந்தேகமுமில்லாத போதிலும், இந்தத் தவறுக்கு யார் காரணமாக விருந்தபோதிலும், தரையிறக்கும் கப்பல ஒன்றைக் காப்புப் படையினர் இழந்துள்ளதும், கடலிலிருந்து தரைக்குப் படையினரையும், தளபாடங்களையும் இறக்கக் கூடிய இக்கப்பல் மூழ்கியதும் விடுதலைப்புலிகளுக்கு மிக்க மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பது மட்டும் உண்மை.

படைய நடவடிக்கையை மேற்கொள்ளத் தேவையானவற்றை அரசாங்கம் முழுமை செய்யாததன் காரணமாக, உண்மையிலேயே படைய நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய இந்தத் தரையிறக்கும் கப்பல், கடற்படையினரின் மற்றைய தேவைகளையும் முழுமைசெய்ய உபயோகப்படுத்தப்பட்டு வந்ததும் படையினரை பூநகரியைக் கைப்பற்ற தரையிறக்கிய போதும், பலவேகயா மற்றும் பலவேகயா 2 படைய நடவடிக்கைகளின் போதும், இக்கப்பல் பெரிய அளவில் சேவையை ஆற்றியிருந்தது.

கடற்படையினர் தங்கள் வழங்கல் நடவடிக்கைகளை மிகவும் கடினமாகவும், ஒய்வின்றியும் மேற்கொள்ள உதவிய கந்துலவின் இழப்பும் றன கஜாவுக்கு ஏற்பட்ட சேதமும், எதிர் காலததில் அவர்களுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

90473

## பதில் கூறாத கேள்விகள்

நொருங்கிய வை-8 வானூர்த்திக்குப் பதிலாக வேறு ஒரு வானூர்தியையோ அல்லது அதிகளவிலான தரையிறக்கும் கப்பல்களையோ அல்லது வழங்கலைச் செய்யக் கூடிய கப்பல்களையோ அரசாங்கம் கொள்வனவு செய்யவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பு டொக்யாட் நிறுவனத்தால் சென்ற ஆண்டு சிறீலங்காவில் ஐந்து திங்கள் காலத்திற்குள் கட்டப்பட்ட ''றன கஜா'' போன்ற கப்பல்களை அதிக அளவில் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கவில்லை. இதைவிடச் சிறிதான கந்துலவும், அதன் துணைக் கப்பலான ''பப்பதா''வும் ஆறு ஆண்டுகளுக்கு முன் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

''கந்துல'' வைக் கடற்படையினர் மீட்டெடுப்பார்களாயினும் மீண்டும் அதைச் சேவையில் ஈடுபடுத்த பல திங்கள் செல்லும். இந்தக் காலப் பகுதியில் பலகேள்விகளுக்கு விடை காணமுடியாதவாறு இருக்கும்.

கந்துலவிலிருந்த எரிபொருள் எப்படி மாசுபடுத்தப்பட்டது என்பதே அவற்றில் முக்கியமான கேள்வியாகும். இதே எரிபொருளே சூரியாவுக்கும் மற்றைய கப்பல்களுக்கும் வழங்கப்பட்டிருந்தாலும், இக்கப்பல்கள் எதுவித சிக்கல்களுக்கும் உள்ளாக்கப்படாததாலும் கடற்படையினர் இந்த எரிபொருளைப் பெறமுன் இது பழுதடைந்த நிலையில் இருந்தது என்று கூற முடியாது. கப்பலிலுள்ள குழாய்கள் மீதும், சிறிய இடைவெளிகள் மீதும் அலைமோதியதன் காரணமாக நீர் தாங்கிக்குள் செல்ல ஒருவேளை அப்பொழுது நிலவிய காலநிலையும் ஏதுவாகவிருந்திருக்கக்கூடும்.

இருப்பினும் நாசவேலை காரணமாக இது நடந்திருக்கக்கூடிய சாத்தியக்கூறுகளும் உண்டு. எரிபொருளுக்குள் ஒரு சில வாளிநீரை ஊற்றுவதன் மூலம் கப்பல்களைச் செயலிழக்கச் செய்ய முடியுமாகில், இதைப் போன்ற செயலை விடுதலைப்புலிகளோ மற்றையவர்களோ செய்வதைத் தடுப்பதற்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கப்பல் மூழ்கியதற்குக் கால நிலையும் காரணமாகவிருந்திருக்கக்கூடுமெனினும், அதன் இயந்திரங்கள் இயங்கக் கூடிய நிலையில் இருந்தால் அது தனது பிரயாணத்தைத் தொடர்ந்தும் மேற்கொண்டிக்கலாம் அல்லது திரும்பியிருக்கலாம். கந்து

25680

மா நகர இல...
யாழ்ப்பாணம்



லவை விட மிகவும் சிறிய கப்பலான பி-235 ஒரு சிக்கலுமின்றி இந்தப் பகுதியில் நடமாடியது இந்தக் கேள்விக்குப் பதிலைத் தருகின்றது.

எதன் காரணமாகக் கந்துல மூழ்கியபோதிலும் இதன் இழப்பால் பெரிதும் பாதிப்படைபவர்கள தங்கள் வழங்கலை கடற்படையில் பெரிதும் தங்கியிருக்கும் படையினரும் பொதுமக்களுமே. படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் வான் படைத்தளங்கள் இல்லாமையால் அவற்றுக்கு வானூர்திமூலம் வழங்கலை மேற்கொள்ள முடியாமையாலும், உலங்கு வானூர்தி மூலம் குறைந்தளவு பொருள்களையே வழங்க முடியுமென்பதாலும், பூநகரி, மன்னார், முல்லைத்தீவு, ஆனையிறவு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களின் வழங்கலுக்கு கடற்படையிலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது.

எந்தவொரு கப்பலின் இழப்பையும் விட கந்துலவின் இழப்பு எதிர்காலத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஆழமான நீருள்ள இறங்குதுறையுடன் கூடிய துறைமுகங்கள் வழங்கலை மேற்கொள்ளவேண்டிய இடங்களில் இல்லாததால் ஆழமில்லாத கடலில் செல்லக்கூடிய தரையிறக்கும் படகுகள் மூலமே வழங்கலை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பல திங்கள்களாகவும் ஓய்வின்றியும், தொடர்ச்சியாகவும் இத்தரையிறக்கும் படகுகள் வழங்கல் பணியில் ஈடுபடுத்தப்படுவது படையநடவடிக்கையில் இவைவகிக்கும் முக்கியமான பங்கை எடுத்துக்காட்டுகின்றது.

தலவிலவிற்கு ஒன்றரை கல் தொலைவுக்கப்பால் மூழ்கியதும் 1983 ஆம் ஆண்டு கட்டப்பட்டதும், சிங்கப்பூரிலுள்ள வொஸ்பேர்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து 1985 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 58 மில்லியன் ரூபாய்களுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதுமான தரையிறக்கும் கப்பலான கந்துல, 1987ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21 ம் திகதி இலங்கைக் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

மூன்று வாரங்களுக்கு முன் கடலில் மூழ்கிய கந்துலவின் நிறை 268 தொன்களாகும். 1524 குதிரைகளின் வலுவைக் கொண்டது இக்கப்பல், மணித்தியாலத்திற்கு ஏழுகடல்மைல் வேகத்தில் செல்லக்கூடிய இக்கப்பல் எரிபொருள் நிரம்பிய நிலையில் 1800 மைல்கள் வரை செல்லக்கூடியது. கடலில் இது மூழ்கிய வேளையில் இதில் இரண்டு 12.7 மில்லி மீற்றர் இயந்திரப் பீரங்கிகளும், இரண்டு 20 மில்லிமீற்றர் ''ஒவர்லிக்கன்'' (Oerlikon) ரக இயந்திரப் பீரங்கிகளும் இருந்தன. □

90473

# அடிமையின் விழிப்பு

கருத்தியலில்
மடமையாக்கப்பட்ட
மலையகத்தவன்
நான்

என் வயிற்றுப்
பசிக்காக மட்டுமன்று
அரசின் பொருளியல்
சுரண்டலுக்கும்
இலக்காகிய
நான்
மதத்தின் போதனையால்
மௌனியாக்கப் பட்டுள்ளேன்.

நான்
விழித்தெழுந்தேன்
சிவனொளி பாதமலையும்
அதிரும்
என் கரங்களில்
இடப்பட்ட விலங்கும்
தகரும்

(கே. மதிவாணன்
கட்டன்)

தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

320